பக்கங்கள்: 16+VI=22

Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 03 ஞாயிற்றுக்கிழமை (18-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:236

# கிழக்கில் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் தீய சக்திகளை இனங்கண்டு முறியடிப்போம்!

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்குத் தமிழ்ச்செல்வன் அழைப்பு



கிளிநொச்சி,ஜூலை18

கிழக்கில் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்க சிங்கள அரசுகளும் சில தீயசக்திகளும் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றன. இதற்கு இடமளிக்காது தமிழ்த் தேசியத்தைக் காக்கவேண்டும். இந்தப் பணியை கிழகக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே முன்னெடுக்கவேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுத்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிழக்கு மாகாண தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று கிளிநொச்சியில் நடத்தப்பட்ட சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வனுடன் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகப் பொறுப்பாளர் தூயவன், மட்டு - அம்பாறைச் சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ், மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் குயிலின்பன், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.ஜெயானந்தமூர்த்தி. கே.கனகசபை, எஸ்.தங்கேஸ்வரி, எம். அரியநேந்திரன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.பத்மநாதன், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துரைரத்தினசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலைமை, அங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

கிழக்கில் தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க மக்கள் உங்களுக்கு ஆணை தந்துள்ளனர். அந்த எதிர்பார்ப்புடனேயே - உங்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்துள்ளனர்.

தமிழ்த் தேசியத்தைச் சிதைத்து சுயலாபம் தேடும் நோக்கில் சிங்கள அரசுகளும், தீயசக்திகளும் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக முகாம்களிலிருந்து தாயகம் திரும்பும் வழியில்

# கடலில் ஈழ அகதிகள் படும் அவலம்

# இரு நாட்டு அரசுகளும் பாராமுகம்

## மன்னார் நீதிமன்றம் கண்டனம்

மன்னார்,ஜூலை18

**தென்னிந்தியாவில் இருந்து தாயகம் திரும்புவதற்கு விரும்பும் ஈழத்தமிழ அகதிகள் விடயத்தில் இரண்டு நாட்டு அரசுகளும் கண்மூடித்தனமான போக்கைக் கடைப்பிடிப்பதாக மன்னார் மாவட்ட நீதிமன்றம் கண்டனம் வெளியிட்டிருக்கின்றது.**

**தாயகம் திரும்பும் அகதிகள் விடயத்தில் இத்தகைய பாராமுகமான போக்கு நீடித்தால் அகதிகள் பாரிய பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் என்று மன்னார் மாவட்டப் பதில் நீதிபதி எச்சரித்திருக்கின்றார்.**

தமிழகத்திலிருந்து தலைமன்னார் ஊடாக தாயகம் திரும்பும் தமிழ் அகதிகள் கடல் பயணத்தின்போது எதிர்கொள்ளும் அவலங்கள் தொடர்பாகவே மன்னார் நீதிமன்றம் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றது.

தென்னிந்தியாவில் தங்கியுள்ள வடபகுதி அகதிகள் தற்சமயம் தாயகத்துக்குத் திரும்பி வர ஆரம்பித்துள்ளனர். ஆனால், அவர்கள் வருவதற்கு சட்டபூர்வமான வழி, வசதிகள் இல்லை. இதனால் அவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியல் உயிரைப் பணயம் வைத்துக் கடல்தாண்டித்

(16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை முகாம் தாக்குதலின் எட்டாவது ஆண்டு விழா இன்று

கிளிநொச்சி,ஜூலை18

'ஓயாத அலைகள் - 1' நடவடிக்கையின் 8ஆம் ஆண்டு நிறைவு விழா முல்லைத்தீவில் எழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் முல்லைத்தீவு பொது மைதானத்தில் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

விழாவை ஒட்டி முல்லை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பெருந்திணைக்களச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் பேரணி, பொது மைதானத்தைச் சென்றடையும்.

பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணியில் பாரம்பரிய கலை வடிவங்களான கரகம், காவடி, கும்மி, சிலம்பு, கோலாட்டம், குதிரையாட்டம், குடம் ஊதுதல் என்பன தவில், பறை, உடுக்கு போன்ற கருவிகளுடன் நகர்ந்து செல்லும்.

இப்பேரணியில் மாணவர்களும், பொதுமக்களும் பங்குகொள்வர். பேரணி பொதுமைதானத்தைச் சென்றடைந்ததும் அரங்க நிகழ்வுகள் நடைபெறும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேசிய விழிப்புணர்வு பிரசாரங்களில் ஈடுபடத் தீர்மானம்

கிளிநொச்சி,ஜூலை18

கிழக்கில் மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகள் குறித்து மாதாந்தம் விடுதலைப் புலிகளும் - தமிழ்க் கூட்டமைப்பினரும் கலந்துரையாடல்களை நடத்தவிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பையடுத்து கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி அறிக்கையின் தமிழ்ப் பிரதி நாளை வெளியீடு

### அதிகாரிகள் குழு கிளிநொச்சி வருகிறது

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் அதிகாரிகள் அடங்கிய உயர் மட்டக் குழு ஒன்று நாளை கிளிநொச்சி வருகின்றது.

விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் விசேட கூட்டத்தில் இக்குழு பங்குபற்றும்.

உலக வங்கியின் 'உலக அபிவிருத்தி அறிக்கை 2004' இன் தமிழ்ப் பிரதியை வெளியிட்டுவைக்கும் நிகழ்வு இங்கு இடம்பெறவுள்ளது.

உலக வங்கியின் தெற்காசியாவுக்கான பிரதம பொருளியலாளர் டாக்டர் சந்தயானன் தேவராஜன், இலங்கைக்கான முதன்மை பொருளியலாளர் செல்வி றிக்கோ கஸ்ரோ, இலங்

(16ஆம் பக்கம் பார்க்க)



கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம்.

### பிந்திய செய்தி

## நீதிமன்ற வளாக அடிக்கல் நேற்றிரவு அகற்றப்பட்டது?

யாழ்ப்பாணம், ஜூலை18

யாழ். நீதிமன்ற வளாகத்தைப் புதிதாக நிறுவுவதற்காக கடந்த புதன்று நகரில் நடப்பட்ட அடிக்கல் இனந்தெரியாத நபர்களால் அவ்விடத்தில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் நடப்பட்ட அடிக்கல்லே பெயர்த்து எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அடிக்கல் நேற்று நள்ளிரவு நல்லூர்ப் பகுதி வீதி ஒன்றில் வீசப்பட்டுக் கிடந்தது. நல்லூர் கோயில் பின்புற வீதியில் - வீதியின் நடுவே அடிக்கல் சிதைக்கப்பட்ட நிலையில் வீசிக் கிடக்கக் காணப்பட்டது. சிதைவுகளின் அருகே 'மாணவர் படை' என்ற பெயரில் பிரசுர அட்டை ஒன்றும் காணப்பட்டது. (ஐ-6)



தென்மராட்சி தெற்கில் படையினரின் பிடியில் இருந்த நெல்வயல்கள் நேற்று அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். வைபவத்தில் கலந்து கொண்டோரையும் காணலாம்.

# சமாதானப் பேச்சு மிக விரைவில் ஆரம்பமாகும் என்கிறார் கதிர்காமர்

## பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் தெரிவிப்பு

இலங்கையின் சமாதானப் பேச்சுகள் மிக விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டிஷ் அரச பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

சமாதானம் நோக்கிய பாதையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவித்துள்ள கதிர்காமர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் கடந்த வியாழக்கிழமை பிரிட்டனின் சர்வதேச விவகாரங்களுக்கான அரச பிரதிநிதிகள் இருவருடனான வெவ்வேறு சந்திப்புக்களின்போது இக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பிரிட்டனின் நாடாளுமன்ற அமைச்சர்களுடான தனது சந்திப்பின்போது லக்ஷ்மன் கதிர்காமர் கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை குறித்துக் கூறியுள்ளார்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கியுள்ள நிதி உதவிக்கும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் தனது நன்றியினைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் - சமாதான முயற்சிக்கான தமது நிலைப்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர், பி.பி.ஸியின் உலக சேவைக்கு வழங்கிய செவ்வியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கருணாவின் விவகாரத்துடன் அரசுக்கு எவ்விதமான தொடர்புகளும் இல்லை எனக் கூறியுள்ள கதிர்காமர், சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் எண்ணம் எதுவும் அரசிடம் இல்லை எனவும் தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துவரும் கருத்துக்களும் வரவேற்கப்படவேண்டியவை எனவும் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார். (ஒ)

# மறவன்புலோவில் நெல்வயல்களை இராணுவம் நேற்றுக் கையளித்தது

## எனினும் வீதியோரம் பயிர்செய்ய அனுமதியில்லை

தென்மராட்சி,ஜூலை18

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் படையினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வெடிப்பொருள்கள் அகற்றப்பட்ட 170 ஹெக்டேயர் நெல்வயல்கள் நேற்றுக் காலை 11.45 மணியளவில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

52ஆவது படையணி கட்டளை அதிகாரி பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தன, விடுவிக்கப்பட்ட பகுதிகளைக் குறிக்கும் ஆவணங்களை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கையளித்தார்.

நாவற்குழி - கேரதீவு வீதியில் மறவன்புலோ பகுதியில் உள்ள வயல்களே நேற்றுக் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், மிதிவெடி அகற்றும் ஹொங்கோ நிறுவனப் பிரதிநிதிகள், படை உயர் அதிகாரிகள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை - தென்மராட்சி தெற்கில் நெற்செய்கைக்கு விடுவிக்கப்பட்ட பகுதியில் விவசாயிகள் நெற்செய்கைக்கான நடவடிக்கைகளை அடுத்த வாரம் தொடக்கம் மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இவ்வருடம் காலபோக நெற்செய்கைக்குரிய உள்ளீடுகள், உர வகைகள் என்பனவற்றை உணவு, விவசாய நிறுவனத்தினர் மூலம் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெல்வயல்களுக்குச் செல்லவென நுணாவில் மத்தி வைரவர் கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள வீதியையும் நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீதியையும் விவசாயிகள் பயன்படுத்தலாம் என்றும் -

இவ்வீதியை அண்டிய பகுதிகளில் காணப்படும் இராணுவ வேலிகள் மற்றும் எல்லை மரக்குற்றிகளை பொதுமக்கள் அகற்றக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழி, தனங்களப்பு வீதியில் நேற்றுக் கையளிக்கப்பட்ட நெல்வயல்களில் வீதியுடன் அண்டிய 100 மீற்றர் தூரத்திற்குள் நெற்செய்கை அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-31-117)

# நல்லூரில் இன்று பிற்பகல் கிராமிய பண்பாட்டு ஊர்வலம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் விழாவின் எழுச்சி நிகழ்வாக கிராமியக் கலை பண்பாட்டு ஊர்வலம் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சுமார் 300 பாரம்பரிய கலைஞர்களை உள்ளடக்கிய பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டதாக இந்த ஊர்வலம் அமையவிருக்கின்றது.

நல்லூர் சட்டநாதர் கோயில் வாசலில் இருந்து ஆரம்பிக்கும் இந்த ஊர்வலம், பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி ஊடாக நல்லூர் கோயில் வாசலை அடையும்.

காவடி கரகம், ஒயிலாட்டம், குதிரையாட்டம், சிலம்படி என பல்வேறு கலை வடிவங்கள் இந்தப் பண்பாட்டுப் பேரணியில் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கமும், சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கமும் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர், யாழ்.பல்கலைக்கழகத் துறைத் தலைவர்கள், யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள், யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள், திணைக்கள, கூட்டுத்தாபன, வங்கித் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கலை நிகழ்வுகளாக மாதனை சிவப்பா குழுவினரின் நெல்லுக்குத்தும் நிகழ்வும், வடமராட்சி பாஸ்கரன் குழுவினரின் பக்தி நடனமும், அரியாலையூர் செல்வம் குழுவினரின் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகமும் இடம் பெறும்.

தொடர்ந்து மூத்த கலைஞர்களுக்கு மகுடம் சூட்டி பொன்னாடை போர்த்தி 'மரபுக் கலைச்சுடர்' பட்டம் வழங்கும் நிகழ்வு இடம் பெறும். (எ-3-13)

## தாயகத்தின் ஆண்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை18

கோண்டாவில், பொற்பதி வீதியில் இயங்கும் தாயகம் சிறுவர் இல்லம் நான்காவது ஆண்டில் காலடி வைக்கும் இன்றைய நாளில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த இல்லத்தில் இன்று மாலை 4 மணிக்கு இல்லச் சிறார்களின் பரதநாட்டியம், நடனம், நாடக நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

இந்த இல்லம் தனது சொந்த முதலீட்டில் சிறுவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் உயர்ந்த நோக்குடன் நடத்தப்பட்டு வருகின்றது என்றும்-

இந்த இல்லத்துக்கு உதவிகளோ அன்பளிப்போ எவரிடம் இருந்தும் எதிர்பார்க்கப்படவில்லை, பெறப்படவும் இல்லை என்று இல்லத்தின் நிர்வாகியான செ.வி.சிறீதரன் தெரிவித்தார்.

இன்றைய நிகழ்வில் அபிமானிகள் பங்குபற்றி இல்லச் சிறார்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தால் தாம் நன்றி உடையவராக இருப்பார் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-3)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் புதிய உறுப்பினர்களுக்குச் சின்னஞ் சூட்டும் வைபவமும் கழகத்தின் முதலாவது ஆண்டுவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மல்லாகத்தில் உள்ள புதிய தலைவரான லயன் கே.நாகராஜாவின் இல்லத்தில் இடம்பெறவுள்ளன.(எ-3)

★ ★ ★

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் மாதகல், சில்லாலை, சாந்தை, பண்டத்தரிப்புப் பகுதி மக்களுக்கான இலவச பொது மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சிரேஷ்ட மருத்துவர்கள் இந்த முகாமில் மருத்துவப் பரிசோதனைகளை நடத்துவர்.

மருத்துவப் பரிசோதனையின் பின் மருந்து வகைகள் இலவசமாக வழங்கப்படும்.

கண்பரிசோதனையின் பின் பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்கப்படும். (எ-3)

★ ★ ★

காரைநகர்,ஜூலை18

உலக வங்கியின் நிதி உதவியுடன் நியாப் திட்டத்தினால் புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை சுருவில் 'உவர்நீர்' தடுப்பணையும், சின்னமடு பொது மண்டபமும் கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக நியாப்திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர்.(எ-73)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூலை18

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய நிர்வாகத்தினால் நடத்தப்படும் காமாட்சி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் ந.கலாவர்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கலந்துகொள்வார். (எ-86)

★ ★ ★

அருட்கலாநிதி டி.ரி.நைல்ஸ் அடிகளாரின் நினைவு ஆராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் எஸ்.ஜெபநேசன் அருளுரை நிகழ்த்துவார். (எ-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் 2004ஆம் ஆண்டுக்கான மூன்றாவது பரிசளிப்பும் கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன. (ஜ-3)

# மாகாண மட்ட விளையாட்டுக்களில் யாழ்.பாடசாலைகளுக்கு அதிக இடங்கள்

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளில் வவுனியாவில் நடந்த 2ஆம் நிலை ஆட்டங்களில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் அதிக இடங்களைப் பெற்றுள்ளன.

வவுனியா பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் பற்றிய விபரம் முறையே வருமாறு:-

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, வவுனியா ரம்பைக்குளம் ம.வி.

**17 வயதுப் பிரிவு**

உடுவில் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, திருமலை சென்.மேரிஸ் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, திருமலை சென்.மேரிஸ் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

**19 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

கல்முனை அல் அசார் தேசியப் பாடசாலை, வசாவிளான் மத்திய மகா வித்தி., யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு (பெண்கள்)**

உடுவில் மான்ஸ் வித்தியாலயம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மட்டு.வின்சன் மகளிர் கல்லூரி.

**சதுரங்கம்**

**15 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

யாழ். இந்துக் கல்லூரி, திருமலை இராமகிருஷ்ண இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

யாழ். இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, திருமலை இராமகிருஷ்ண இந்துக் கல்லூரி.

**15 வயதுப்பிரிவு (பெண்கள்)**

முல்லைத்தீவு வள்ளிபுனம் அ.த.க. பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

வேம்படி மகளிர் கல்லூரி, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், யாழ்.மகாஜனக் கல்லூரி,

**மேசைப் பந்தாட்டம்**

**19 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு (பெண்கள்)**

திருமலை சென்.மேரிஸ் கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரி. (எ-5)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி ஆனந்தஜோதி தர்ஷனனின் மாணவி சுதர்சினி லூர்த்துநாதனின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பில் கல்விகற்று வரும் இவர், யாழ். திருமறைக் கலாமன்றத்தின் மாணவியுமாவார். குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இவர் நாட்டுக்கூத்துக்களிலும் பங்குபற்றியுள்ளார். (எ-51)

**உதயன்**

## நாடாளுமன்றத்தில் மக்களுக்குக் கதவடைப்பு

நாடாளுமன்றம் மீண்டும் நாளைமறுதினம் கூடுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பதவியேற்ற பின்னர் நான்காவது தடவையாக நாடாளுமன்றம் கூடப்போகின்றது.

இதுவரை நடந்த மூன்று அமர்வுகளிலும் நாடாளுமன்றத்தின் கௌரவமும், மாண்பும் கெட்டுப்போனதைத் தவிர பயனுள்ள காரியம் எதுவும் நடந்தேறவில்லை.

இந்த அரசு நாடாளுமன்றத்தில் தனது வழமையான - பொறுப்புள்ள - பணியை இன்னும் ஆரம்பிக்கவேயில்லை.

இதுவரை கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அசிங்கத்தனமாக அடிபட்டு அநாகரிகத்தை அரங்கேற்றியதைத் தவிர உருப்படியாக எதுவுமே செய்யப்படவில்லை.

நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற வரையறைக்குள் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட முடியாத சூழ்நிலையில் அரசு தன் இயலாமையைக் காடைத்தனமாகவும், குண்டர்களின் போக்கிலும் வெளிப்படுத்துகின்றது.

நாட்டில் இரண்டு முக்கிய பிரச்சினைகள். இரண்டுமே பெரிதாக வெடித்துப் பேரழிவு தந்திடுமோ என்ற அச்சநிலை தொடர்கின்றது. அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாத அரசியல் தலைமைகள் நாடாளுமன்றை நாற்றம் எடுக்கும் மன்றாக மாற்றி பிரச்சினைகளைத் திசை திருப்ப முனைகின்றன.

ஒன்று - நாட்டின் பொருளாதாரப்பிரச்சினை

மற்றது - நாட்டின் இனப்பிரச்சினை

இரண்டுமே பூதாகார உருவெடுத்து வருவதைப் பார்க்கும்போது அவை வெடித்தால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் கற்பனை செய்ய முடியாதவையாக இருக்கும் என்ற அச்சம் ஏற்படுகின்றது.

இரண்டையும் தீர்ப்பதற்குத் தெளிவான திட்டம் அரசிடம் இல்லை. இவ்விவகாரங்களைக் கையாண்டு தீர்ப்பதற்கு அரசுக்குள்ளேயே கொள்கை இணக்கமோ, கோட்பாட்டு ஒற்றுமையோ, ஐக்கிய நோக்கோ இல்லை.

இதனால், பிரச்சினைகளைக் கையாளாமல் மூடி மறைத்து, ஆட்சிக்காலத்தைக் கொண்டிழுக்க முனைகிறது அரசு. நாடாளுமன்றத்தில் காடைத்தனம் புரிந்து அமர்வுகளைக் குழப்புவதன் மூலம் இவ்விடயங்களில் நாட்டுக்கும், மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் பதில் சொல்லும் பொறுப்பைத் தட்டிக்கழித்து விடயத்தை இழுத்தடிக்கலாம் என்ற திட்டம் போலும் அரசுக்கு.

நாடாளுமன்ற அமர்வுகளை அந்த மன்றத்துக்குரிய கௌரவத்தோடும், மாண்போடும், மகத்துவத்தோடும் நடத்துவோம் என்று உறுதியுரை எடுத்துச் செயற்படுவதை விடுத்து, நாளைமறுதினம் நடக்கும் அமர்வு உட்பட அடுத்துவரும் அனைத்து அமர்வுகளையும் மக்கள் பார்வைக்கு அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்து அதன்படி செயற்பட முற்படுகிறது அரசு.

அதாவது, கடந்த மூன்று அமர்வுகளிலும் நடந்த அநாகரிகம் - காடைத்தனம் - அடுத்துவரும் அமர்வுகளிலும் நடைபெறலாம். அதை மக்கள் பார்த்துவிடக்கூடாது என்பதில் அரசு குறியாக இருக்கிறது என்பது தெளிவாகின்றது.

அதனால்தான் நாடாளுமன்றத்தின் பார்வையாளர் கலரிக்குப் பொதுமக்களை அனுமதிப்பதில்லை என்ற முடிவை அரசு எடுத்திருக்கின்றது.

எனவே, நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இந்த நாடாளுமன்றத்தில் எடுக்கப்படப் போகின்றதோ, இல்லையோ அநாகரிக அராஜகம் மாத்திரம் அங்கு தொடர்கதையாகப் போகப்போவது ஓரளவு நிச்சயமாகிவிட்டது.

நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையைப் பெறாத அரசு, நாடாளுமன்ற அமர்வுகளை அராஜக வழியில் குழப்பியடிப்பதன் மூலம், நாடாளுமன்றத்தின் வழமையான பணிகளையோ, தனது பெரும்பான்மையைச் சோதிக்கும் 'அஸிட்' பரிசோதனையையோ இடம்பெறவிடாமல் பார்த்துக்கொள்கின்றது.

இப்போதைக்கு நாடாளுமன்ற அட்சர கணிதத்தை மாற்றும் விதத்தில் குதிரையோட்டங்களுக்கான பேரங்களும், முயற்சிகளும் மும்முரமாக நடக்கின்றன.

அந்தப் பேரங்கள் எல்லாம் படிந்து வந்து, அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்குத் தேவையான எம்.பிக்கள் எதிர்த்தரப்பிலிருந்து குத்துக்கரணம் - பல்டி அடித்து, அரசுத் தரப்புக்கு வந்துவிட்டால் நாடாளுமன்ற அமர்வுகள் சுமுகமாகவும் -

அந்நிலை படிந்துவராவிட்டால் இந்த அமர்வு மட்டுமல்ல, அடுத்துவரும் எல்லா நாடாளுமன்ற அமர்வுகளும் சமர்க்களமாகவும் -

இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அந்தச் சமர்க்களங்களின் 'வீராவேஷத்தை' மக்கள பார்த்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நாடாளுமன்ற அமர்வுகளுக்குப் பொதுமக்களுக்குத் கதவடைப்பு.

ஊடகங்களின் வீடியோக் கமராக்களும் தடை விதிக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அப்படிச் செய்தால் நாடாளுமன்றம் இருட்டறையாகிவிடும்.

### ஆடி அமாவாசை நாளாக இருப்பதால்

## புலமைப் பரிசில் பரீட்சைத் திகதியை வேறுதினத்துக்கு மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை18

அடுத்த மாதம் 15ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையினை வேறு திகதிக்கு மாற்றுமாறு யாழ்.சைவ பரிபாலன சபையினர் பரீட்சைத் திணைக்கள ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அடுத்த மாதம் 15ஆம் திகதி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறும் என்று தங்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் ஆடி அமவாசைத் தினமாகும். இந்நாள் ச்சைவ சமயத்தவர்களுக்கு புனிதமான ஒருநாள் ஆகும். இது இறந்த தந்தையை நினைத்து பிதிர்க்கடன் செய்யும் தினமாகும். புலமைமைப்பரிசில் பரீட்சை மேற்பார்வையாளராகப் பணியாற்றும் சைவ சமயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் தந்தையை இழந்தவர்களாக இருக்கலாம்.

அதேபோன்று பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிலும் தந்தையை இழந்த சைவமாணவர்கள் இருக்கலாம்.

எனவே, இவர்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றி விரதம் அனுஷ்டிப்பதற்கு வசதியாக அடுத்த மாதம் 15ஆம் திகதி நடைபெறவிருக்கும் பரீட்சையினை 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் இந்து சமய விவகார அமைச்சர் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஒ-13)

## இதுவரை நியமனம் பெறாதோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

யாழ்ப்பாணம்,ஜூலை18

பட்டம்பெற்ற காலத்தில் இருந்து இதுவரையில் அரச மற்றும் தனியார் துறைகளில் வேலைபெறவில்லையென சத்தியக் கூற்று முடித்து முகாமைத்துவப பயிற்சித் திணைக்களத்திற்கு அனுப்பிய வேலையற்ற பட்டதாரிகளுக்கே முதலில் நியமனம் வழங்கப்படும்.

- இவ்வாறு கொழும்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து நிதியமைச்சு வேலையற்ற 4ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கவுள்ளது. இவ்வாறு வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆண்டு முன்னுரிமையின் பிரகாரமும் கல்வித் தகைமையின் அடிப்படையிலும் நியமனம் வழங்கப்படும்.

ஆனால், பட்டம் பெற்ற காலத்திலிருந்து பணிவாய்ப்பு எதனையும் பெறவில்லை என்று சமாதான நீதிவானின் ஒப்புதல்களுடன் சத்தியக் கூற்று முடித்து அனுப்பியிருந்தால் மட்டுமே கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பகுப்பாய்வு பிரிவு அவர்களது விண்ணப்பத்தை முதலில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் எனத தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் 54ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் முதற்கட்டமாக 4ஆயிரம் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏனையோருக்கு பகுதி பகுதியாக நியமனம் வழங்கப்படும் என முகாமைத்துவ பயிற்சித் திணைக்களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சத்தியக்கூற்று அனுப்புவோர் "முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம், 3ஆவது மாடி, திறைசேரி, கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஒ-185)

## கழிவு நீர் வாய்க்கால்களை சுத்தம் செய்ய முடியாத நிலை

வலி.வடக்கு,ஜூலை18

இராணுவ காவல் அரண்கள் மற்றும் முகாம்கள் ஊடாகச் செல்லும் வாய்க்கால்களை துப்புரவு செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்.குடாநாட்டை இராணுவத்தினர் கைப்பற்றிய காலம் முதல் இன்று வரைகும் கடற்கரைப் பிரதேசங்களில் பல இடங்களும் பொதுமக்கள் நடமாடத் தடைசெய்யப்பட்ட பகுதிகளாக உள்ளன.

வாய்க்கால்கள் மூலம் செல்லும் கழிவு நீர் கடலில் கலப்பது வழமையாகும். ஆனால், கடற்கரைப் பிரதேசங்களில் மக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் உள்ள கழிவு வாய்க்கால்கள் நீண்டகாலமாகத் துப்புரவு செய்யப்படவில்லை. அவை சேறு நிறைந்து காணப்படுவதுடன் தூர்ந்து போயும் உள்ளன.

இத்தகைய நிலைமை காரணமாக கழிவு நீர் வாய்க்கால் வழியே சென்று கடலில் கலக்க முடியாமல் தேங்கி நோய்கள் பரவ வழி ஏற்பட்டுள்ளது. அத்துடன் மழைக்காலத்தில் வெள்ளம் குடிமனைகளுக்குள் செல்லுகின்ற அவல நிலைமையும் காணப்படுகின்றது.

மழைகாலம் நெருங்குவதால் இக்கழிவு வாய்க்கால்கள் மற்றும் வெள்ளம் செல்லும் வாய்க்கால்கள் அனைத்தையும் துப்புரவு செய்வது அவசியமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

### பருத்தித்துறையிலிருந்து முகமாலைக்கான புதியசேவை

யாழ்ப்பாணம்,ஜூலை18

பருத்தித்துறை சிற்றூர்திகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையிலிருந்து தொண்டைமானாறு, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஊடாக முகமாலை வரை மினிபஸ சேவை விரைவில் இடம்பெறவுள்ளது.(ஒ-15)

## தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கான பரீட்சைக்கு விண்ணப்பித்தோருக்கு!

தென்மராட்சி,ஜூலை18

தமிழ்மொழிமூலம் ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தற்போது யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து கொழும்பில் பரீட்சை நிலையம் வழங்கப்பட்டிருந்தால் அதனை மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ந.ரவிராஜ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ள பரீட்சார்த்திகளில் சிலருக்கு கொழும்பில் பரீட்சை நிலையம் அமைந்துள்ளமை தொடர்பாகப் பரீட்சை ஆணையாளருடன் தான் தொடர்புகொண்டார் என்றும் -

இதனையடுத்து, கொழும்பில் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு அனுமதி அட்டைகள் கிடைத்த யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகள் இலங்கை பரீட்சைத் திணைக்களப் பிரதி ஆணையாளர் ஜனாப் சாபீக் என்பவருடன் 2785230 இலக்கத் தொலைபேசியில் தொடர்புகொண்டால பரீட்சை நிலையம் யாழ். மாவட்டத்திற்கு மாற்றப்படுமென்றும் -

நாடாளுமன்ற உறுப்பினர் அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3 (II)இற்கு ஆள்சேர்ப்பதற்குப் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-36-117)

## அரசியல் பழிவாங்கலுக்கு இலக்கானோருக்கு விரைவில் நிவாரணம் வழங்குவதாக அறிவிப்பு

### சுற்றறிக்கை அனுப்பிவைப்பு

வலி.மேற்கு,ஜூலை18

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்குள்ளான அரச அலுவலர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவுள்ளது.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கும் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான அரச அலுவலர்கள் திணைக்களத் தலைவரூடாக முறைப்பாட்டைச் செய்யமுடியும்.

குறிப்பாக, இலங்கை நிர்வாகசேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை கட்டடக் கலைஞர் சேவை மற்றும் இணைந்த சேவை அலுவலர்கள் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகி இருப்பின் அது தொடர்புடைய திணைக்களத்தினூடாகத் "தலைவா, அரசியல் பழிவாங்கல் புலனாய்வுக்குழு, அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு-07" என்ற முகவரிக்குத் தமது முறைப்பாட்டினை அனுப்பி வைக்கவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-175)

## உவர்நீர்த் தடுப்பணை இன்று கையளிப்பு

காரைநகர்,ஜூலை18

உலக வங்கியின் நிதி உதவியுடனான நியாப் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்ட காரைநகர் சாம்பலோடை உவர்நீர்த் தடுபபணையையும் விக்காவில் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுமண்டபத்தையும் கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

காரைநகர் சிவகாமி அம்மன் கோயிலடியில் இடம்பெறும் இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபா செ.பத்மநாதனும் -

கௌரவ விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், நியாப் திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.பாலகிருஸ்ணன், யாழ் செயலகத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், காரைநகர் உதவி அரச அதிபர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர், நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர் க.கணேசராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-73)

**நாளை**

ஆடி 04
திங்கட்கிழமை
(19.07.2004)
திதி : துதியை
இரவு 7.55 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
பின்னிரவு 1.36 வரை.
சுபநேரம்: 12.01 - 1.31
ராகுகாலம்: 7.31- 9.01
(பழைய நேரப்படி)

## சின்னமடு மாதா உற்சவம் செவ்வாயன்று ஆரம்பம்

காரைநகர்,ஜூலை18

ஊர்காவற்றுறை, சின்னமடு மாதா யாத்திரைத் தலத் திருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்தமாதம் 4ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணைத் தின வழிபாடுகளும், மறுநாள் 5ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் திருநாட் திருப்பலிகளும் இடம்பெறும்.

பெருவிழாவில் கலந்துகொள்ள வருகைதரும் யாத்திரிகர்களின் நலன்கருதி போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. (எ-73)

**உதயவாக்கு**

கொடுப்பதை விட கொடுக்கும் முறையே முக்கியமானது.

தேன் பாய்ந்த ஈழத்தமிழ் நாட்டிலே
ஏழ்மையெனும் துன்பம் பாய்ந்தோடுகின்றதே...!

# துன்பம் துடைத்திடவே பிறந்த தாயகம் (சிறுவர் இன்பகம்)

## சிறுவர்களின் மறுமலர்ச்சிக்காக மலர்ந்த தாயகம்

ஏழைக் குடிசையில் வாழ்ந்து வந்த சின்னஞ்சிறார்கள் தாயகம் என்னும் வாழ்வகத்தில் ஆனந்தச் சிறகு விரிக்கின்றனர்.

எங்கள் மாமா அன்பு என்ற சேய்களை ஆனந்தக்கடலில் வண்ண வண்ண சிறகு விரிக்க விடுகின்றார். அம்மா, அப்பா என்ற ஆறுதலைத் தந்து ஆதரவுடன் அணைக்கின்றார்.

சேய்கள் அனைதலையும் நல் உள்ளத்தால் பாதுகாத்து வருகின்றார். எங்களுக்காக இரவும் பகலும் ஓடிஓடித்திரிந்து வேலை செய்யும் எமது மாமாவை அப்பா என்று சொல்வதை விட தெய்வம் என்று சொல்வதற்கே ஆனந்தமாகப் பொங்குகின்றது.

இனிய சுவை ஊட்டி வாழ்ந்து வந்த எங்கள் மாமாவை "அப்பா" எனும் மூன்று எழுத்துக் கொண்ட சொற்களை "அப்பா" என்று எமது தாயகச் சிறார்கள் சொல்வதில் எங்கள் எல்லோரது உள்ளமும் குளிர்ச்சியில் பூஞ்சோலை எவ்வாறு பூத்துக் குலுங்குதோ அவ்வாறு எங்கள் எல்லோரது மனமும் குளிர்ச்சியால் அப்பா என்று சொல்வதில் பூத்துக்குலுங்குது.

- இராஜேந்திரன் துஸ்யந்தினி

## சிறுவர் துன்பம் துடைக்க துலங்கி ஒளிரும் தாய்

கோண்டாவில், பொற்பதி வீதியில் ஒருவண்ண நிலவாக "தாயகம் சிறுவர் வாழ்வகம் காட்சி கொடுக்கின்றது. தாயகம் என்றால் தாயின் உள்ளம் எனப் பொருள்படும். தாயகப் பொறுப்பாளரான சிறீதரன் மாமா ஒரு தர்ம உணர்வுடன் தாயகத்தை நடத்திவருகின்றார்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் அது ஞாலத்தில் மாணப்பெரிது" என்பதற்கு அமைய நாம் ஒருவருக்கு ஆபத்திலே உதவி செய்தால் அது இந்த உலகிலே மிகப்பெரிதாகும். ஆனால், எங்களுடைய மாமா சிறுஉதவி செய்யவில்லை; ஒரு பெரிய உதவியை நம்மைப் போன்ற ஏழைச்சிறார்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்றார். ஏழைச்சிறார்களுக்கு அவர்கள் விரும்பிய உணவு கொடுத்து, உடை கொடுத்து, இவர்களுக்குத் தேவையான அன்பைக் கொடுத்து, இவர்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்து எங்களை கண்கலங்காமல் வைத்துப் பார்க்கின்றார். வாடிவந்த பூக்களெல்லாம் இப்போது மலர்ந்து நிற்கின்றன. இதற்கெல்லாம் யார் காரணம்? எங்கள் புண்ணியவானான சிறீதரன் மாமாவே ஆகும்.

தாய் அற்ற சிறுவர்களுக்கு தாயைப் போல இருந்து தந்தை அற்றவர்களுக்குத் தந்தையைப்போல் இருந்து அருள் கொடுக்கின்றார். எங்களைக் கவலைப்படாத விதத்தில் நல்ல அன்ரிமார்களையும் நாங்கள் திறமையாக படிப்பதற்கு நல்ல ஆசிரியர்களையும் நியமித்திருக்கின்றார். எங்களைக் கலங்காமல் இருக்கவும் புத்திமதி சொல்லித்தரவும், மகேந்திரன் மாமாவும், டாக்டர் மாமாவும் அன்புடனும், பாசத்துடனும் பார்த்து வருகின்றனர். பிள்ளைகள் நாங்கள் விரும்பிய பாடசாலைக்கு எங்களைச் சேர்த்து விடுகின்றார். எங்கள் மாமா எங்களுக்கு அன்பை மட்டுமல்ல பண்பையும் சொல்லித்தருகின்றார். எங்களைப் பார்க்க வருபவர்கள் கவலையுடன் வந்தால் எங்களைக் கண்டவுடன் சந்தோஷமாகவே வீடு திரும்புவார்கள். இப்படியாக நல்ல சிறப்புடனும் ஒளியுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் "தாயகம் சிறுவர் வாழ்வகம" 3ஆவது ஆண்டைநிறைவு செய்து 4ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

"ஒளிருதே தாயகம் ஓங்குதே சிறீதரன் மாமாவின் புகழ்
வளர்க சின்னஞ்சிறார்கள்"

தாயகச் சிறுமி,
க.சுகிர்தா தரம் - 10

இன்பக சிறுவர் குழாத்துடன் தாயகம் நிர்வாகி



இன்பகச் சிறார்களின் கலை நிகழ்வு





### செம்மல் சிறிதரன்

சிறிய வயதில் தான்பட்ட சொல்லொணாத்
துன்பமதை
சிறிதளவும் மறக்காமல் சிந்தையில் கொண்டு
சிறியவர்க்கு சீர்பெற வாழ்வளிக்க
சிறிதரன் செம்மல் இயக்குவதே தாயகம்

- இல்லச்சேவகி சாரதா

## இன்பத் தாயகம்

அன்புமொழிபேசி ஆதரவாய் அருகணைத்து
அநாதையென்ற சொல்லை அறவே அகற்றி
இன்ப வழிகாட்டி இன்முகம் மலர்ந்து
இதயத்தைக் குளிரவைக்கும் இன்பத் "தாயகம்"
துன்பமென்றால் என்னவென்று தெரியாமல்
சுகமாய் பிள்ளைகள் வளர்ந்திடவே
பொன்போன்ற இல்லமது நான்காவ தாண்டில்
பொலிவுபெற்று வாழிய பல்லாண்டே!

- கவிமணி இராசையா ஸ்ரீதரன்.

## கனவு நனவாகின்றது

எவ்வளவு அன்பினை எந்தெந்த வகையில் வழங்கமுடியுமோ அதனிலும் மேலாக, தாயினும் சாலப் பரிந்து வழங்குகின்றது தாயகம். த்தாயகம் என்கின்ற போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே! எங்கள் சிறிதரன் இல்லம் என்கின்ற போதினிலே சக்தி பிறக்குது மூச்சினிலே! குனிந்த தலைகள் நிமிரவேண்டும். அழுத கண்கள் மலரவேண்டும். தளர்ந்த நடை துள்ளுநடையாக வேண்டும் என்பது சிறிதரன் அவர்களின் கனவாகும். சண்டையால்வந்த சீரழிவாலும், வறுமையால் வந்த ஒழுங்கீனத்தாலும், பெற்றோரின் முரண்பாடுகளால் ஏற்பட்ட துன்பத்தாலும் சிறுவர்கள் அஞ்சிக் கெஞ்சி வழியற்று அல்லற பட்ட வேளையிலே கொஞ்சித் துஞ்சவைக்கும் பஞ்சு மஞ்சம் தாயகம். இளம் சிறுவர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் இல்லமே தாயகம். தாயகத்தின் சிறுவர்கள் யார்?

அரவணைப்பில்லாது, பறட்டைத்தலையுடனே, கிழிந்த கந்தலாடையுடன், பசித்த வயிறுடன்,பள்ளிவாசலே மிதியாமல்..... அப்பப்பா! என்னகொடுமை? தாயகத்தின் தேடல் பார்வை பதிந்தது இவர்களிடம் தான்! பரிதவிக்கும் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, திறமைகள் வெளிக்கொணரப்பட்டு ஆளுமையுள்ளவர்களாக ஆற்றல் மிக்கவர்களாக வளரவேண்டும் என்பதே தாயகத்தின் தணியாத தாகமாகும். தன்னால் இந்தச் சாதனையை எந்த வேதனை வந்தாலும் செய்ய முடியும் என எமது நிறுவுனர், நிர்வாகி, தியாகச் செம்மல் திடமாகி நம்பிச் செயல்படுகின்றார்.

தாயகத்தாயே வாழ்க!

இல்ல ஆசிரியை T.பபி

### வான் புகழ் பெற்று வாழி!

கண்பட்டுப் போகா வண்ணம்
கடவுளே காக்கவேண்டும்
எண்ணரும் இறைவன் தொண்டு
இதற்கிணை வேறும் உண்டோ
மண்ணினில் இத்தொண்டிற்கு
மாற்றீடு அறியேன் யானே
எண்ணரும் கும்பாபிஷேகத்துக்கு
ஈடிந்த தொண்டாமன்றோ
இன்னல்கள் போக்கும் தொண்டு
இறைவனார் ஏற்கும் தொண்டு
வண்ணமார் இத்தொண்டின் ஆசான்
வான்புகழ் பெற்று வாழி!

மு.திருநாவுக்கரசு (முன்னாள் மாவட்ட நீதிபதி)

### என்ன குறை எமக்கு?

என்ன குறையெமக்கு
என்று நாம் தலைநிமிர
கண்ணை இமைபோலக்
காக்கின்ற தாயகமே
உன்னை வடிவமைத்த
உத்தமத்தை
என்னென்போம்

- இல்ல ஆசிரியை
பாமா

### நாலாவது ஆண்டில் காலடி பதிக்கும் நாயகியாம் "தாயகத்தின்" நலமோங்கட்டும்

நிறைவுக்கோர் நிலையமான தாயகமே வாழி!
நீள நினைப்பதற்குரிய எங்கள் தாயகமே வாழி!
துறை தொறும் சோதியான தாயகமே வாழி!
தொன்மையாய் இறை தர்மம் காத்திடும் தாயகமே வாழி!
இறையருள் ஆணையேற்று எம் நிலத்தில் நிமிரும் தாயகமே வாழி!
ஈழத்தின் இளையவரின் காப்பகமே வாழி
நாளைய சந்ததியின் நலனுக்குழைப்பவளே வாழி!
நாலாவது ஆண்டில் காலடி பதிப்பவளே வாழி வாழி!

கவிமாமணி, மதுரகவி, காரை.எம்.பி.
அருளானந்தன்
(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி)

## தாயகம் பணிப்பாளர் சபை அறிக்கை

தாயகம் என்ற இலட்சிய தாகம் நியாயமானதே! தாயகத்தின் விடிவிற்கு அரசியல் சுதந்திரம் எவ்வளவிற்கு முக்கியமானதோ அவ்வளவிற்கு சமூக, பொருளாதார சுதந்திரமும் முக்கியமானதாகும். போர் என்ற பயங்கரம் எமது பகுதிகளைப் பல்வேறு விதங்களில சீரழித்துச் சிதைத்துவிட்டது. தேன் பாய்ந்த ஈழத் தமிழ் நாட்டிலே இன்று ஏழ்மை எனும் துன்பம் பாய்ந்தோடுகின்றது. விடியும் வேளையிலே ஏழைச் சிறுவர்களின் துயர் துடைக்க வேண்டாமா? அவர் செய்வார், இவர் செய்வார் என்று பேசிக் கொண்டிராது காரியத்தில் இறங்கினார் சிறிதரன்.

### ஏழ்மை கண்டு பொங்குவாய்...



ஏழ்மையின் கொடுமையைப் படம்பிடித்துக் காட்டும் இப்படம் உங்கள் இரக்க சிந்தனைக்கும் சேவை மனப்பாங்குக்கும் சவால் விடுக்கவில்லையா? இத்தகைய தேடல்களின் பயனாகப் பிறந்ததுதான் தாயகம்.

சிந்தனைகளைச் செயற்படுத்தும் செயற்திறனை நாம் பாராட்டுகின்றோம். அவரிடம் என்று தோன்றியது இத்தாகம்?

சிறுவயதிலே ஏழ்மையால் துயருற்ற போது ஏற்பட்ட இலட்சியக்கருவே இன்று தாயகம். அன்புத் தந்தை வீரசிங்கம், ஆருயிர் அம்மா இராசமணி ஊட்டிக்கொடுத்த இலட்சியமே இன்று தாயகமாகிவிட்டது. தாயகத்தின் வெற்றிக்காக சிறுவர்களின் நல்வாழ்விற்காகச் சிறிதரன் அவர்களின் இல்லத்துணை மைதிலி தனது கணவனோடு இணைந்து செயற்பட்டு வருவதை நாம் பாராட்டுகின்றோம்.

### நாளாந்த செயற்பாடுகள்

காலை – மாலை – பிரார்த்தனை
காலை – யோகாசனம்
மாலை – விளையாட்டு
இரவு – கற்றல் செயற்பாடுகள்
பிரதி ஞாயிறு – மாலை பஜனை, நற்சிந்தனை, வழிகாட்டல் பேச்சு
நாளாந்தம் – மாணவர்களுடன் நிர்வாகி, பிரதித் தலைவர், செயலாளர் கலந்துரையாடல், பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்வு.

### புதியதோர் "தாயகம்"

இடம்: இராச வீதி,
பரப்பளவு : முப்பது பரப்பு
☆ ஆண், பெண் தனியான விடுதி
☆ கோயில்
☆ கணனி உட்பட்ட கல்வி மையம்
☆ விளையாட்டு மைதானம்
☆ கேட்போர் கூடம்
☆ நிர்வாக அலுவலகம்

உண்ண உணவு, உடுக்க உடை, வாழ்வதற்கு வீடு என்பன அடிப்படை உரிமைகள். இந்த உரிமைகள் பலவீனமாகி பயங்கரமாகி எமது தமிழ்ச் சிறுவர்களைப் பலியெடுக்க முனைகின்றது. இலவசக் கல்வி கிடைத்தும் பள்ளிக்குச் செல்லாத சிறுவர்கள், பெற்றோரின் நடத்தைகளால், முரண்பாடுகளால் சீரழியும் சிறுவர்கள் இவர்களின் ஏழ்மையை துஷ்பிரயோகம் செய்யமுனையும் பாதகர்கள், இந்தச் சமூகச் சீர்கேடுகளை எதிர்த்து போர்க்கொடி தூக்கினார் சிறிதரன். சிறிதரனின் தயாள சிந்தையின் உருவமே தாயகம். தனது இலட்சியப் பயணத்திற்கு நல்லதுணையாகத் தாயகப் பணிப்பாளர் சபை உருவாக்கப்பட்டது.

தாயகம் – உதயம் – 07.05.2001
தாயக விடியல் – நாலாவது ஆண்டு
சிறுவர் தொகை – 60
ஆசிரியர்கள் – 06
சேவையாளர்கள் – 06
பாதுகாப்புச் சேவை – 01
முதலீடு – மூன்று கோடி ரூபா
மாதாந்த சராசரி செலவு – ரூபா ஒன்றரை லட்சம்

### பணிப்பாளர் சபை

நிறுவுநர், நிர்வாகி -
திரு.வெ.சிறிதரன்
(உரிமையாளர் - சிறி அமலா ஜுவல்லர்ஸ்,
சிறி ராம் ஜுவல்லர்ஸ்,
கொனிக்கா சிறி டிஜிற்றல்)

பிரதித் தலைவர் -
வைத்திய கலாநிதி
A.கமலநாதன்

செயலாளர் -
சுடர் இ.மகேந்திரன்
(முன்னாள் அதிபர்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

பொருளாளர் -
திரு.N.சிறிரங்கநாதன்
(முன்னாள் காணி விற்பனையாளரும்
விலைமதிப்பீட்டாளரும்)

உறுப்பினர்கள் -
முன்னாள் மாவட்ட நீதிபதி
மு.திருநாவுக்கரசு

திரு.என்.சதாசிவ ஐயர்
(பதிவாளர்)

நாளைய தலைவர்களுக்குக்
கைகொடுப்போம!
புதியதோர் தலைமுறையை
உருவாக்குவோம்!

A.கமலநாதன்
பிரதித் தலைவர்

சுடர் இ.மகேந்திரன
செயலாளர்

தாயகம்
சிறுவர் இன்பகம்
பொற்பதி வீதி,
கோண்டாவில்

# ஈராக்கில் பயங்கரவாதத்துக்கு முடிவு கட்ட புதிய உளவுத்துறை, பாதுகாப்புப் பணியகம்

## பிரதமர் இயட் அல்லவி அறிவிப்பு



பக்தாத்,ஜூலை18

ஈராக்கில் தலை தூக்கியுள்ள தாக்குதல்கள், படுகொலைகள், ஆட்கடத்தல் ஆகியவை அடியோடு ஒழிக்கப்படும் என்று ஈராக்கிய இடைக்கால பிரதமர் இயட் அல்லவி பத்திரிகையாளர் மாநாடொன்றில் அறிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

கிளர்ச்சியாளர்களை அடக்கி ஒடுக்குவதற்கென புதிய உளவுப் பிரிவுத்துறையொன்றும் பொது பாதுகாப்புப் பணிப்புரை பணியகமொன்றும் நிறுவப்படும். பயங்கரவாதத்திற்குப் பின்னாலுள்ள சக்திகளையும், இதற்குத் தூபம் போடும் பிரகிருதிகளையும் இந்த அமைப்புகள் சுலபமாக இனங்கண்டு விடுமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

நாங்கள் ஜனநாயக வழியில் காலடி எடுத்து வைத்துள்ளோம். வழியில் குறுக்கிடும் முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிய உறுதி பூண்டுள்ளோம். பயங்கரவாதம் வேரோடு களையப்படும் என்றார்.

வடமேற்கு பக்தாத்தில் கடந்த வியாழன்று இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து அவர் இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டினார். கார்க்குண்டு வெடிப்பில் பொலீஸார், பிள்ளைகள் ஆகியோர் உட்பட 10 பேர் பலியாகினர்.

சுமார் 40 பேர் வரை படுகாயமடைந்தனர். நகர சபைக் கட்டடம், வங்கிக் கட்டடம் கடைகள் ஆகியவை பலத்த சேதத்திற்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (8)

## தூக்குக் கயிறா? விஷ ஊசியா?

மரணதண்டனைக் கைதிகள் தங்களைத் தூக்கில் போடுவதா? அல்லது விஷ ஊசி போட்டுக் கொல்லுவதா? என்பதை அவர்களே முடிவு செய்துகொள்ள அனுமதிக்கவேண்டும் என இந்திய அரசுக்கு இந்திய சட்ட ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

நீதிபதி எம்.ஜெ.ராவ் தலைமையிலான சட்ட ஆணைக்குழு கடந்த 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அப்போதைய அரசிடம் 187 ஆவது அறிக்கையை அளித்தது. பொது மக்கள் பலரிடமும் கருத்துக் கேட்டு நாடு முழுவதும் பல கருத்தரங்குகள் நடத்தி தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையில் மரண தண்டனை நிறைவேற்றுவது குறித்துப் பல்வேறு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. மரண தண்டனைக் கைதிக்குத் தூக்குத்தண்டனைக்கு மாற்றாக, விஷ ஊசி செலுத்தி உயிரிழக்கச் செய்யலாம். அதற்கு ஏற்றவகையில் குற்றவியல் சட்டம் 354(5) பிரிவில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (ஓ)







கும்பகோணம் தனியார் பள்ளியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்த பள்ளிச் சிறுவர்களின் கருகிய உடல்களின் நடுவே தாய் ஒருவர் இருந்து கதறி அழுவதையும், உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்குத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆறுதல் தெரிவிப்பதையும், தீப்பிடித்த வகுப்பு அறை ஒன்றில் இந்தியப் பொலீஸார் தடயங்களை ஆராய்வதையும் படங்களில் காணலாம்.

## காலணிகளில் 'ஓம்' எழுத்தை அச்சிட்ட பிரிட்டன் நிறுவனம் மன்னிப்புக்கோரியது

லண்டன்,ஜூலை18

காலணியில் 'ஓம்' என்ற எழுத்தை அச்சிட்டு வெளியிட்ட பிரிட்டனைச் சேர்ந்த லேசி காலணி நிறுவனம் பகிரங்க மன்னிப்பு கேட்டுள்ளது:

உலக அரங்கில்

பிரிட்டனைச் சேர்ந்த 'லேசி' காலணி நிறுவனம் தன்னுடைய சமீபத்திய தயாரிப்புக்களில 'ஓம்' என்ற சமஸ்கிருத எழுத்து வடிவத்திலான முத்திரையை காலணிகளில் அச்சிட்டு விற்பனைக்கு அனுப்பியது.

லண்டனில் உள்ள ஷெப்பர்ட் புஷ் மார்க்கெட்டில் இந்த காலணியை பார்த்து அதிர்ச்சியடைந்த இந்துபக்தர் ஒருவர், பிரிட்டனில் உள்ள இந்து அமைப்பின் பொது செயலாளர் ரமேஷ் கலிதாயிடம் புகார் செய்தார். இதை தொடர்ந்து ரமேஷ் கலிதாய் மற்றும் லண்டன் சேவாச்சிரமப் பொதுச் செயலாளர் நர்லிப்தானந்த ஆகியோர் லேசி நிறுவனத்துக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு தங்களது கண்டனத்தை தெரிவித்தனர். 'ஓம்' முத்திரையிட்ட காலணிகளையும் உடனடியாக வாபஸ் பெறவேண்டும் அதுமட்டுமல்லாது இந்துக்களின புனித எழுத்தை செருப்பில் அச்சிட்டமைக்காக பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் எனக் கோரினார்கள்.

இதைத் தொடர்ந்து 'லேசி' காலணி நிறுவன உரிமையாளர் மைக்கேல் ரிட்ஜ்வே இந்துக்களின் உணர்வை புண்படும்படி காலணிகள் தயாரித்ததற்காக பகிரங்க மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். 'ஓம்' முத்திரை கொண்ட காலணிகளை உடனடியாக வாபஸ் பெறுவதாக அவர் உறுதியளித்துள்ளார்.(க)

## மியன்மாரில் வைர வியாபாரிகளிடமிருந்து ரூ.368 கோடி பெறுமதியான வைரம் கொள்ளை

விற்பனையாளர்களிடம் 368 கோடி ரூபா மதிப்புள்ள வைரம், விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் மற்றும் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் மியன்மாரின் மியாமி நகரில் கடந்த வியாழக்கிழமை காலை நடந்தது. காருக்கு காஸ் நிரப்பிக் கொண்டு கிளம்பிய போது காரில் வந்த முகமூடி கொள்ளையர்கள் காஸ் நிலையத்துக்கு வெளியே விற்பனையாளர்களின் காரை வழிமறித்தனர். கார் கண்ணாடிகளை உடைத்து அதிலிருந்த விற்பனையாளர்களை வெளியே இழுத்துப் போட்டுத் தாக்கிவிட்டு பின்னர் கார்களில் இருந்து வைரம், கைக்கடிகாரங்கள் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்று மியாமி பொலீஸார் கூறினர்.

நியூயோர்க் நகரைச் சேர்ந்த விற்பனையாளர்கள் இ.்.ப்ரைன் சடே (39) மற்றும் ராய் பார்பி (30) இருவரும் புளோரிடாவில் வைரங்களை விநியோகித்துவிட்டு போர்ட் லாடெர்டேல் விமான நிலையத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் இச்சம்பவம் நடந்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (8)

## ரோபோக்களின் குத்துச் சண்டை

தென்கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வருகிறார்கள். வீரர்கள் கலந்துகொள்ளும் போட்டிகள் அல்ல இது. ரோபோக்கள் கலந்துகொள்ளும் போட்டிதான் இது.

தென்கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்று வரும் இந்த ரோபோக்களில் குத்துச் சண்டைப் போட்டியும் நடைபெற்றது. ஜப்பானை சேர்ந்த ஹாஜ்மி என்ற ரோபோவும் தென்கொரியாவின் ரோபோவும் குத்துச்சண்டையில் ஈடுபட்டன. 'ரிமோட்' மூலம் இந்த ரோபோக்கள் இயக்கப்பட்டன. (8)

## பொலீஸ் நிலையத்துக்குள் புகுந்து பொலீஸாரைக் கடத்திய துப்பாக்கிதாரிகள்

பெரோஸ்பூர்,ஜூலை18

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலம் பொரோஸ்பூர் அருகே சடார் பொலீஸ் நிலையம் இருக்கிறது. நேற்றுமுன்தினம் இரவு பொலீஸ்காரர் ஆன்கர்சிங் மற்றும் பல பொலீஸ்காரர்கள் பணியில் இருந்தார்கள். நள்ளிரவில் ஒரு மர்மக கார் பொலீஸ் நிலையம் முன் வந்துநின்றது.

காரில் இருந்து 4 பேர் இறங்கினார்கள். அவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன. அந்தக் கும்பல் பொலீஸ் நிலையத்திற்குள் புகுந்தது. பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ்காரர் ஆன்கர் சிங்கை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று காரில் ஏற்றினார்கள்.

பொலீஸ்காரர் ஆன்கர் சிங்கை கடத்திச் சென்ற 4 பேரில் 2 பேர் பொலீஸ்காரர்களின் சீருடையில் இருந்தார்கள். பொலீஸ் நிலையத்திற்குள் புகுந்த அவர்கள் கண் இமைக்கும் நேரத்தற்குள் ஆன்கர்சிங்கை கடத்திச் சென்று விட்டார்கள். கடத்திய 4 மர்ம ஆசாமிகளை பொலீஸார் வலைவீசி தேடி வருகிறார்கள்.(8)

## சிங்கப்பூரில் சிகரெட் விற்க பல புதிய கட்டுப்பாடுகள்




சிங்கப்பூரில் சிகரெட் உற்பத்தியாளர்களுககும் அவற்றை விற்பனை செய்பவர்களுக்கும் அந்த நாட்டு அரசு புதிய நிபந்தனைகளை விதித்துள்ளது. இதன்படி சிகரெட் பக்கெற்றுகளில் சிகரெட் புகைப்பது உடல் நலத்துக்கு தீங்கானது என்ற வாசகம் எழுதப்பட்டு இருக்க வேண்டும். அது மட்டுமல்ல சிகரெட் பக்கெற்றில சிகரெட் புகையால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை மூச்சுத்திணறிக்கொண்டு இருப்பது போலவும் செயற்கை சுவாசக் குழாய் அந்தக் குழந்தைக்கு பொருத்தப்பட்டு இருப்பது போலவும் மூளையில் இருந்து இரத்தம் கொட்டுவது போலவும் படம் அச்சிடப்பட்டு இருக்க வேண்டும்.

சிகரெட் விற்பனை செய்யும் கடைகளிலும் இந்த அபாய அறிவிப்புப் படங்கள் உள்ள பலகைகள் வைக்க வேண்டும். ஓகஸ்ட் முதலாம் திகதி வரை கடைக்காரர்களுக்கு கெடு விதித்துள்ளார்கள் அதிகாரிகள். அபாய அறிவிப்புடன் புதிய படம் போட்ட சிகரெட் பைக் கெற்றுகள் விற்பனைக்கு வந்துவிட்டன. இந்த எச்சரிக்கையையும்மீறி சிகரெட்டை புகைப்பவர்களை தடுக்க அதிகாரிகள் மேலும் என்ன செய்வார்கள் என்று தெரியவில்லை. (8)

## பாகிஸ்தானின் கடன்நிலுவையை தள்ளுபடி செய்தது அமெரிக்கா

பாகிஸ்தான் கடன் தொல்லையால் பல ஆண்டுகளாக அவதிப்பட்டு வந்தது. அமெரிக்காவுக்கு கொடுக்க வேண்டிய கடன்தொகை தான் அதிகம். ஆப்கானிஸ்தான் போரின்போது அமெரிக்கப் படைக்கு ஆதரவாகச் செயற்பட்டதற்காக அமெரிக்கா பாகிஸ்தானுக்கு பல சலுகைகளை அளித்தது. வர்த்தகத்தில் விதிக்கப்பட்ட சில தடைகளை ஏற்கனவே ரத்துச் செயயப்பட்டது.

இப்போது அமெரிக்கா பாகிஸ்தான் கொடுக்கவேண்டிய கடன் நிலுவையை தள்ளுபடி செய்து இருக்கிறது. இதற்காக இஸ்லாமாபாத்தில் அமெரிக்க அதிகாரிகளுக்கும் பாகிஸ்தான் அதிகாரிகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. (8)

## இங்கிலாந்து இடைத்தேர்தலில் ரொனி பிளேயரின் கட்சிக்குத் தோல்வி

ஈராக் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்பட்டதற்காகவும் இராணுவத்தை அனுப்பியதற்காகவும் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயரின் செல்வாக்கு சரிந்த நிலையில் இருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்தின் 2எம்.பி. தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

இதில் லீசஸ்டர் சவுத் தொகுதியில் ரொனி பிளேயரின் தொழிலாளர் கட்சி படுதோல்வி அடைந்தது. ஜனநாயக சிறுபான்மைக் கட்சி அமோக வெற்றிபெற்றது. ஹெட்ஜ் ஹில் தொகுதியில் ஆளும் தொழிலாளர் கட்சி மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றிபெற முடிந்தது. அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என்றும் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. (8)

# ஊடகத்துறை சட்டங்களில் திருத்தம் செய்யப் பிரேரணை

## எதிர்க்கட்சிகள் கூட்டாக சமர்ப்பிக்கும்

கொழும்பு,ஜூலை18

அரசுத்துறை ஊடகங்களுக்கான உயர்பதவிகளுக்கு அரசமைப்பு சபையே நியமனங்களைச் செய்யும் வகையிலான ஒரு திருத்தத் தீர்மானத்தை முன்வைக்க எதிர்க்கட்சிகள் முடிவுசெய்துள்ளன.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பஸ் ஒப்சிலோன் லிமிட்டட் மற்றும் சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய அரச ஊடகங்களுக்கே இவ்வாறான நியமனங்களை அரசமைப்பு சபை செய்யவேண்டுமென எதிர்க்கட்சிகளின் தீர்மானம் கூறுகின்றது.

ஊடகத்துறையின் பக்கச்சார் பின்மையை நிலைநிறுத்தும் வகையில் சுதந்திர ஊடகத்துறையினர் சமர்ப்பித்துள்ள யோசனைகளின்படி சிவில் சமூக அமைப்புக்களின் ஆலோசனை கலந்தபின்பு ஊடகத்துறை சட்டங் களில் திருத்தம் செய்வதற்கான இந்தத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கூட் டாக தயாரித்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இத்திருத்தத் தீர்மானத்தின்படி சிறிலங்கா ரூபாவாகினி கூட்டுததாபனத்துக்கும், சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் அவைகளின் தலைவர்களை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் நியமிக்கலாம். ஆனால் அந்த நியமனங்களுக்கு அரசமைப்புச்சபையின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். ஏனைய பணிப்பாளர்களை அரசமைப்பு சபையே நேரடியாக நியமிக்கும்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரை பணிப்பாளர் சபை நிறுவப்படுவதற்கு அரசமைப்புச்சபையின் அங்கீகாரம்பெற்றே அவர்கள் நியமிக்கப்படவேண்டும். தகவல் சுதந்திரம் தொடர்பான தீர்மானம் ஒன்றையும் சபையில் தாக்கல் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் முடிவுசெய்திருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (ப)

## வீதி விளக்குகளைப் பொருத்த 'நிக்கொட்' நிறுவனம் நிதியுதவி

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பிரதான வீதிகளுக்கு வீதி விளக்குகளை மீள் அமைப்பதற்காக 'நிக்கொட்' நிறுவனம் 68லட்சத்து 57ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ்.நகரப் பகுதியிலுள்ள பிரதான வீதிகளில் உள்ள வீதி விளக்குகளை நவன மயபடுத்தும் இத்திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பான கூட்டம் கடந்த 12ஆம் திகதி மாநகர சபையின் இந்துவிடுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலே 'நிக்கொட்' நிறுவனத்தினர் வீதி விளக்குகளைப் பொறுத்துவதற்கான நிதி காசோலையினை இலங்கை மின்சார சபையின் மின்பொறியியலாளரிடம் கையளித்தனர்.

இந்த நிதியின் மூலம் நகரப் பகுதியிலுள்ள 60வீதிகளில் முதற்கட்டமாக நவீனமயப்படுத்தப்பட்ட வீதிவிளக்குகளைப் பொருத்துவதற்கு மின்சார சபையினர் ஆரம்பக் கட்ட வேலைகளை அடுத்த வாரமுற்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இது தொடர்பான மற்றொரு ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி மாநகர சபையின் இந்துவிடுதிக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-13)

## கலாசார உப குழு

வலி.தெற்கு,ஜூலை18

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் கலாசார உபகுழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம், தெல்லிப்பழை, வசாவிளான், கட்டுவன், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக வலி. வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்டு இவ் உபகுழு அமைக்கப் பட்டுள்ளது.

பாரம்பரிய தமிழ் கலைகளை அழிந்து போகாது காப்பாற்றும் நோக்கத்துடன் இக்குழு அமைக்கப் பட்டுள்ளது.

கலாசார உபகுழுவின் தலைவராக வ. வைரவப்பிள்ளையும் செயலாளராக தி.பிரபாகரனும் பொருளாளராக அருளானந்தசிவமும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.(ஒ-152)

## முத்தமிழ் விழா

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி நடத்தும் முத்தமிழ்விழா நாளை திங்கட்கிழமை காலை 11மணிக்கு நடைபெறவுள்ளது.

முத்தமிழ் மன்றத் தலைவி செல்வி து.நிமல்சி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக வட்டுக் கோட்டை தமிழ்ச்சங்கத் தலைவர் பண்டிதர் ப.இராஜகுரு கலந்து கொள்வார். நடனம், நாட்டிய நாடகம் குழுப் பாடு ஆகியவை உட்படப் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன. (ஒ-135)

---

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1953 - 10 - 30



மறைவு 2000 - 07 - 18

**அமரர் கந்தசாமி தர்மேசன்**

(திட்டமிடல் உதவியாளர் - வலிகாமம் கல்வி வலயம்; மாவட்ட உதவிச் சாரண ஆணையாளர் - காங்கேசன்துறை)

குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து அணைந்து
நான்கு வருடங்களாகியும் பழைய இன்ப நினைவுகள்
இன்னும் மறையவில்லை; இந்த ஜென்மமென்ன
ஏழேழு ஜென்மத்திற்கும் அழியமாட்டா!

*ஓம் சாந்தி!*

*உமை அஞ்சலித்து வணங்கும்:*
அன்பு மனைவி,
முத்தரன்கள்.

*"தரன் இல்லம்",*
*மூளாய், சுழிபுரம்.* (34208)(42-14-26)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### *அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்*



**அமரர் பொன்னையா பாலகிருஷ்ணன்**

*மலர்வு:* 17-03-1928 *உதிர்வு:* 18-06-2004

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 18-07-2004 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், நேரில்வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பலவித உதவிபுரிந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
பா.சரஸ்வதி (மனைவி)
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

*பலாலி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
(33953) (14-26)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 19 . 05 . 1934



ஆண்டவன் சந்நிதியில் 18 . 06 . 2004

**அமரர் கணபதிப்பிள்ளை குலசேகரம்**

அன்பின் குலவிளக்கே!
பண்பின் உறைவிடமே - ஐயா!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு
ஆனால் "ஐயா" என்று அழைக்க யாருமில்லையே?
மாறாத உம் நினைவால் ஆறவில்லை எம் இதயம்...
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பெரியநாவலடி,
கொடிகாமம். (34088)

---

### கண்ணீர் அஞ்சலி

எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய

**அமரர் பொன்னையா யோகலிங்கம்**



*(இளைப்பாறிய வைத்திய அதிகாரியும், முன்னாள் கொக்குவில் இந்துமயானத் தலைவரும், தற்போதைய சமாதான நீதிவானும், கொக்குவில் கிழக்கு, கோணாவளை வைரவர் சுவாமி கோயில் பரிபாலன சபைத் தலைவரும் ஆவார்)*

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய கோணாவளை வைரவப் பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

*அன்னாரின் பிரிவால் வருந்தி நிற்கும்:*
நாதன் புடைவையகம்
உரிமையாளரும், ஊழியர்களும்,
*திருநெல்வேலி.*

(34217) (26-14)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



*கடந்த 18-6-2004 அன்று சிவபதமடைந்த எமது ஆருயிர் நண்பன்*

**அமரர் சுந்தரமூர்த்தி திருநடராஜா**

(Chairman, Mediquick Colombo, Jaffna, Mallakam)

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு ஆடி மாதம் 3ஆம் நாள் இன்று (18-07-2004) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு - 04 புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

அந்நாளில் அவரின் ஆத்மா இறைவன் திருவடியில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றேன்.

- ம.சோதிநாதன் (MLT.)

*சாந்தி பவனம்,*
*சித்தங்கேணி.*
(34068)(42-14-26)

---


ASARIM

UNIVERSITY OF LONDON DEGREES
STUDY IN COLOMBO
GO TO LONDON AFTER YEAR 1 FOR BSc CIS
GUARANTEED JOBS FOR GRADUATES
FREE PERSONAL DEVELOPMENT PROGRAM
INDIVIDUAL GUIDANCE AND CARE FOR ALL STUDENTS
TOP CLASS FACULTY
INSTITUTE HEADED BY HARVARD SCHOLAR

ASARIM, Aquinas South Asian Regional Institute of Management, a specialized institute within 50 year old Aquinas College of Higher Studies in Colombo offers lectures for University of London degree courses. If you have sat for A/L exams and are awaiting results or have passed A/L or higher exams or have other Certificates or Diplomas, and have Rs. 140,000 to start a 3-year degree program, You are cordially invited for an

INFORMATION EVENING AT CENTRAL COLLEGE, JAFFNA AT 4:00 PM TODAY

Degrees offered: BSc Banking & Finance, BSc Accounting & Finance, BSc Business, BSc Information Systems & Management, BSc Computing & Information Systems, BSc Economics & LLB

Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 8
Phone: 4611150-1 E-mail: admin@asarim.org

ASARIM
Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 08.
Tel. 4611150, 4611151 Email: admin@asarim.org
Web: www.asarim.org

# வலுவிழப்பு ஒரு வடுவல்ல....!

**வலுவிழந்தோருக்கான யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் 01-07-2004 இலே தனது 18ஆவது அகவையிலே தடம்பதித்துள்ளது. எத்தனையோ இடர்களைச் சந்தித்த போதும் தன்முயற்சியில் சற்றும் மனந்தளராது சேவையை முன்னெடுத்துச் செல்கின்ற இவ்வேளையில் தனது வலுவிழந்த மக்களின் தன்னம்பிக்கையை வலுப்படுத்தவும், அவர் தம் திறமைகளை வெளிக்கொணர்ந்து மற்றோர்க்கு எவ்வகையிலும் தாம் சளைத்தவர் அல்ல என மெய்ப்பித்து சமூக நீரோட்டத்தில் கலந்திட வலுவிழந்தோர்க்கான விளையாட்டுப் போட்டியும் இதனையொட்டி நிகழ்ந்த கவிதை, கட்டுரை, சிறுகதைப போட்டிக்கான பரிசளிப்பும் 24-07-2004 இலே நிகழவிருக்கின்றது. இதனைப்போன்று முன்பும் பல தடவைகள் வலுவிழந்தோரை ஊக்கப்படுத்தும் முகமாக விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வுகள் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.**

வடக்கு - கிழக்கு பகுதியில் நோய் மற்றும் விபத்துக் காரணிகளைவிட மிதிவெடி, ஷெல், துப்பாக்கி போன்ற யுத்தக் காரணிகளினால் அவயவ இழப்பின் எண்ணிக்கை 1987 இல் உச்சநிலையை அடைந்தது. அதுவும் அக் காலப்பகுதியில் அவயவம் இழந்தோருக்கான



அவயவம் இழந்தோர்க்கு அலுமினியத் தொழில்நுட்பத்திலான அவயவம் பொருத்தப்படுகின்றது.

செயற்கை அவயவம் பொருத்தும் எந்த நிறுவனமும் வடக்கு - கிழக்கில் இருக்க வில்லை. அதுமட்டுமன்றி, வெளிமாவட்டங் களிலுள்ள நிறுவனங்களுக்குச் சென்று அவயவம் பொருத்துவதிலும் மொழி, பாதுகாப்புக் கெடுபிடி, பொருளாதாரப் பற்றாக்குறை போன்ற இடர்பாடுகள் காணப்பட்டன. இதனால், அவயவம் பொருத்தமுடியாமல் எம் வலுவிழந்த மக்கள் பட்ட துயரம் எழுத்தில் வடிக்க முடியாத தொன்று.

இவ்வாறு மெய் என்ற மேனியும் பொய்த்து கலங்கி நின்ற நெஞ்சங்களின் துயர்துடைக்க காலத்தின் தேவையுணர்ந்து அன்றைய அன்னையர் முன்னணியின் அருமுயற்சியால் 1987 ஜூலை முதலாம் திகதி நோராட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ்.கிளையாக ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டம் உருப்பெற்றது.

ஆரம்பத்தில் அலுமினியத்திலான செயற்கை அவயவம் பொருத்துவதில் வித்திட்டு இன்று அது ஆற்றிவரும் சேவைகளின் விவரம் வருமாறு:-

அவயவம் இழந்தோருக்கு அலுமினிய தொழில்நுட்பம் மட்டுமன்றி, பொலிபுறப்பைலின் எனப்படும் பிளாஸ்ரிக் தொழில்நுட்பத்திலான செயற்கை அவயவங்கள் (கரங்கள், கால்கள்) பொருத்தி நடமாடவைத்தல். இதில் பொலி புறப்பைலின் எனப்படும் பிளாஸ்ரிக் தொழில் நுட்பமானது 1998இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை இத்தொழில்நுட்பம் செயற்படுத்தப்பட்டுவருகிறது.

போலியோ, பிறப்புவாசி நோய் மற்றும் விபத்தினால் பாதிப்புற்றோருக்குத்தேவைக் கேற்ப சார்புறுப்புகள் (Orthoses), சிலும்புகள் (Hand splint and foot splint), கழுத்துப் பட்டிகள் (Cervical Coller), இடுப்புப் பட்டிகள் (Hip Support belt), விசேட காலணிகள் (Special Orthotic shoes), பாதம் கீழே விழாதிருப்பதற்கான பட்டிகள் (Foot drop belt) போன்றவை தயாரித்து வழங்குதல். இவை வலுவிழந்த பகுதிகளுக்கு

**த.தமயந்தி**
யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

ஆதாரத்தை அளிப்பதோடு, பாதிப்பையும் அதிகரிக்காது தடுக்கின்றது.

வலுவிழந்தோர் நடமாடும் உபகரணங்களான முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், முச்சக்கர வண்டியும் சக்கர வண்டியும் இணைந்த தயாரிப்புக்கள், ஊன்றுகோல்கள், நடைதாங்கிகள், வெள்ளைப் பிரம்புகள் போன்றவற்றை நவீன தொழில்நுட்பத்துடனும் வலுவிழந்தோர் இலகுவாகக் கையாளக்கூடிய வகையிலும் தயாரித்து வழங்குகிறது.

எமது நிறுவனத்துக்கு வருகைதரும் அவயவம் இழந்தோர், வலுவிழந்தோருக்கான இயன்மருத்துவ சேவை அளித்தல், அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவயவம் இழந்தோரைப் பார்வையிட்டுத் துண்டப் பராமரிப்பு முறை, அவயவம் பொருத்துவதற்கு முன்பராமரிப்பு ஆலோசனை என்பனவும் வழங்கப்படுகின்றன.

செயற்கை அவயவம் பொருத்திய மாணவர்களுக்கு மாதாந்தக் கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்குகிறது. மற்றும் செயற்கை அவயவப் பயனாளிகளுக்கு சுயதொழிலுக்கான சுழற்சி முறைக்கடன் வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கி வலுவிழந்தோர் பிறரில் தங்காது தன்நம்பிக்கையுடன் வாழ்க்கைப் பாதையைக் கொண்டுசெல்லத் துணைக்கரம் நீட்டிநிற்கின்றது.

இதுமட்டுமின்றி, தனது தன்னிகரில்லாச் சேவையை விரிவுபடுத்தி, சமூகத்திலுள்ள வலுவிழந்தோரை இனங்கண்டு வெளிக்கொணர்ந்து அவர்களை இயங்கவைப்பதற்கு யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து வீட்டுத்தரிசிப்பு (Field visit) செய்யும் திட்டத்தையும் ஆரம்பிக்கஉள்ளது. மேலும் செயற்கை அவயவம் பொருத்துதல், வலுவிழந்தோர் உபகரணத் தயாரிப்பு, இயன்மருத்துவம் போன்ற துறைகளிலுள்ள தனது பணியாளர்களை வியட்நாம், தன்சான்யா, இந்தியா போன்ற வெளிநாடுகளிற்குப் பயிற்சிக்காக அனுப்பி உயர் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் சேவையின் உயர் தரத்தைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், வலுவிழந்தோர் சிறந்த சேவையைப் பெறுவதற்கு வழிசமைத்துள்ளது.

இவ்வாறு வலுவிழந்தோருக்கு மறுவாழ்வு கொடுக்கும் ஜெய்ப்பூர் நிறுவனமானது 1987 ஜூலையிலிருந்து 2002 இறுதிவரை கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ்.கிளையாக இயங்கியது. பின்னர் 2002 இறுதியில் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் என்ற பெயர் மாற்றத்துடன் யுஎஸ்எய்ட் நிறுவனத்தின் ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டத்தின் கீழ்



இயன் மருத்துவ சேவையில்

இலங்கையில் இயங்கிவருகின்ற மோட்டிவேசன் அறக்கொடை நிதியத்தினருடன் இணைந்து தனித்துவமிக்க ஓர் அமைப்பாக இயங்கிவருகின்றது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தினால அவயவ இழப்பு அதிகரித்தபோதிலும் அதிகூடிய எண்ணிக்கையான அவயவ இழப்புக்கு



ஓர்தோசிஸ் (Orthases) எனப்படும் செயற்கை சார் புறுப்பு பொருத்தும் பணி.

மிதிவெடியே காரணமாக அமைந்திருக்கிறது. அதிலும் இன்றுவரை ஏதும் அறியா அப்பாவியாக மிதிவெடிகளைத் தன் வயிற்றில் சுமந்திருக்கும் எம்மண்ணின் தலைவிதியை யாரால் மாற்ற முடியும்? எனினும், எதிர்நீச்சலாக எத்தனையோ தடை தாண்டியே அகவை 18இல் தடம்பதித்துள்ளது. "போதும் போதும் இக் கொடுமை இனிமேலும் வேண்டாம்" என இத் துயரநிலை நீங்க இறையை இறைஞ்சுகிறது. ஏற்கனவே வலுவிழந்தோரின் வாழ்க்கைப் பாதையில் ஒளிவிளக்காகத் தன்னால் முடிந்த வரை சேவையை வழங்கி உரிய இலக்கினை யடைந்து வலுவிழந்தோர் பிறரில் தங்காது தன்நம்பிக்கையுடன் இயங்கிட துணைக்கரம் நீட்டி நிற்கின்றது. வலுவிழந்தோரும் மற்றோரைப் போல் இன்புற்றிருப்பதை தன் நோக்காகக் கொண்டு சேவையை முன்னெடுத்துச் செல்கின்றது.

இவ்வாறு வலுவிழந்தோர் வாழ்வு இனிதாக அமைவதற்கு தன்னாலான பங்களிப்பை வழங்கி வரும் ஜெய்ப்பூர் சேவைகளுக்கு நிதிப்பற்றாக்குறை ஒரு சவாலாகவே இருந்து வருகிறது. இதனை ஈடுசெய்து எமது சேவையைச் சிறப்புடனும் தொடர்வதற்கு "சிறு துளி தான் பெருவெள்ளம்" என்பதற்கமைய எம்மினிய மக்களும், நலன்விரும்பிகளும் தாமாக மனமுவந்து நன்கொடை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

---



**தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் கிளிநொச்சி நகரப்பகுதிக்கான நீர் விநியோகத்திட்டத்திற்காக அமைக்கப்பட்டு வரும் நீர்த்தாங்கி வேலைகள் மிகவும் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.**

**ஆயிரம் கன மீற்றர் கொள்ளளவுடைய இத்தாங்கி யுத்தத்தினால் ஏற்கனவே சேதமாக்கப்பட்ட தாங்கிக்கருகில் அமைக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. புதிதாக அமைக்கப்படும் நீர்த்தாங்கியைப்படத்தில் ,காணலாம்.**

*(படம்: செந்தில்குமரன் - திருவையாறுச் செய்தியாளர்.)*

# சமாதானத்துக்கான இறுதிச்சந்தர்ப்பத்தை இழக்கக் கூடாது என்கிறார் தெற்கு ஆளுநர்

## அனைவரும் ஒத்துழைக்கக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை18

தென்னிலங்கை மக்களின் பூரண ஒத்துழைப்பின் மூலமே வடக்கு - கிழக்கில் சமாதானம் பூரணத்துவம் பெறுகிறது. எனவே, கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பத்தைக் இழக்கக்கூடாது.

தென்மாகாண ஆளுநர் கிங்ஸ்லி விக்ரமரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலியில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் முதலமைச்சர் சத்தியப்பிரமாண வைபவம் இடம்பெற்றது. காலி மாவட்டத்தைச் சேர்ந்த சான் விஜய லால்டி சில்வா முதலமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் மேலும் பேசும்போது கூறியதாவது:-

அரசியல் லாபத்துக்காக இனவாதத்தைக் கிளறிக்கொண்டு நாட்டைக் குட்டிச்சுவராக்க நினைப்பவர்கள் நாட்டின் துரோகிகளாவர். சமாதானத்தைக் கட்டிக்காத்தால்தான் நாட்டை அபிவிருத்தித்துறையில் வளர்ந்தெடுக்கமுடியும். இதனை மனதிற்கொண்டு தென்னிலங்கை அரசியல்வாதிகள் மாத்திரமல்ல அனைத்து மக்களும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லத் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்றார்.

தென்மாகாண புதிய முதலமைச்சர் சான் விஜய லால்டி சில்வா தமது உரையில் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகள் சரியானமுறையில் சேவை செய்யாதுபோனால் அவர்களின் அரசியல் வாழ்க்கை ஐந்துவருட காலத்துடன் முடிந்துவிடும்.

தென்மாகாணத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். இன பேதங்களைத் துறந்து அனைவருக்கும் ஒன்றுபோல் சேவை செய்வதே எனது குறிக்கோள்.

தென்மாகாண சபையில் தலைவராக இருந்து செயற்பட்ட என்னை தென்மாகாணம் முழுவதும் சேவை செய்வதற்கு முதலமைச்சர் பதவியில் தூக்கிவைத்தமைக்காக மக்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் - என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வண. சபித்த தேரர் உரையாற்றுகையில்:-

இந்தியாவின் வங்காள மாநில முதலமைச்சர் ஜோதிபாஸு 40 வருடகாலமாக அந்த மாநில முதலமைச்சராக இருந்து வந்தாலும், அவரது வயது 80ஐத் தாண்டினாலும் அவருக்கு அந்த நாட்டு மக்கள் விடாது முதலமைச்சர் பதவியை வழங்குவதன் மர்மம் அவர் செய்துள்ள சேவையாகும். அவரைப் போன்ற முதலமைச்சர்கள் இந்த நாட்டிலும் உருவாக வேண்டும் - என்றார். (க)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

18 - 07 - 2004



## செல்வன் தருண்

திரு.திருமதி ரமேஸ் - தீபா தம்பதிகளின் செல்வப் புதல்வன் தருண் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை **U.K.** இல் உள்ள **HAYES** நகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அல்வாய் நாவலடி தங்கரதத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், அன்ரிமார், மாமாமார், மச்சான், மச்சாள்மார் சித்தப்பாமார், சித்திமார் மற்றும் தாத்தா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் காளிதேவியின் அருள்பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

"தங்கரதம்"
அல்வாய் வடக்கு. அல்வாய்.

தகவல்: மு.இராசகாந்தன் (அப்பப்பா).
(34070)

## இன்று பேராளர் சங்கமம்

கொழும்புத்துறை,ஜூலை18

யாழ். பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் பேராளர் சங்கமம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ப.நோ. கூட்டுறவுச் சங்கக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துப்பகிர்வுகள், முன்மொழிவுகள் மற்றும் சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளன. அனைத்து ஊரக பிரதேச பேராளர்களையும் இச்சங்கம நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ஒ-201-30)

## கிணற்றினுள் வீழ்ந்தவர் படுகாயம்

தென்மராட்சி,ஜூலை18

புதிதாக வெட்டிக் கொண்டிருந்த கிணற்றினுள் தவறிவீழ்ந்த நபர் காயமடைந்த சம்பவம் கடந்த வியாழனன்று இரவு மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த குணசேகரம் வெற்றிவேல் (வயது44) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(எ-117)


மீண்டும் பருத்தித்துறையில்!

**ராஜன் கொமினிக்கேசன்**

ஒரு நிமிடம் 5/= கட்டணத்தில்

இன்ரநெற் இணைப்பு அழைப்புகளை வழங்குகின்றது.

அனுசரணை: **த.இராசையா அன் சன்**

அனைத்து வகையான ரெயின்றகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

23/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (34213)(34-14-19)


# முதலாவது பிறந்ததின வாழ்த்து




**08.07.2004**

அக்கரைப்பற்றில் வசிக்கும் சுன்னாகத்தைச் சேர்ந்த நந்தகுமார் – யாழினி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## ரிஷிபவன்

08.07.2004 அன்றைய தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள தாத்தா, அம்மம்மா இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, லண்டனிலுள்ள மாமா, திருகோணமலையிலுள்ள மாமா, மாமி, மச்சாள், இலங்கையிலும், வெளிநாடுகளிலுமுள்ள தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார், மாமாமார், அன்ரிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கந்தன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென உளமார வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- இ. திருநாவுக்கரசு (தாத்தா)
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)
சுன்னாகம்.

(C/ 36020)


The Chartered Institute of Marketing

**The Global Path to Professional Marketing**

Stage I

Commencing on 25 July 2004

Lectures Conducted by British Qualified Lecturer

Vibhu Wickramasinghe

(MBA – UK, Management Consultant)

UNIVENTURES
Institute of Business Management

**55, Martin Road, Jaffna**

**021- 222 - 7666, 0777 918280**

(சி-36007)



யாழ். குடாநாட்டு மக்களுக்கு நற்சேவை ஆற்றிவரும்

# "பவர் செலுலர் ரேடிங் கம்பனி"

யாழ்.குடாநாட்டு மக்களின் நன்மை கருதி அதன்சேவையை விரிவுபடுத்தி உள்ளது. 24 மணிநேரத்தில் இணைப்புகளை வழங்கிவருகின்றோம். இலங்கையின் எப்பாகத்துக்கும் இணைப்புகள் பொருத்தித்தரப்படும்.

உள்வரும் அழைப்புகள் முற்றிலும் இலவசம்

இது ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் துணைநிறுவனம் மொபிடெல்

கையடக்கத்தொலைபேசி
Unlock மற்றும் சீர்செய்து தரப்படும்.
உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:

பவர் செலுலர் ரேடிங் கம்பனி

விற்பனை நிலையம்:
205/1, ராஜா தியேட்டர் கம்பிளக்ஸ்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அலுவலகம்:
185, லலிதா மாடிக் கட்டடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**T.P.:0712 399220 021-222 7070** (சி-36197)(34-14-19)


# பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.07.22 ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்குச் சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்.

**பணிநிலை: வரி அறவீட்டாளர்**

**தகைமைகள்:**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை 18-35 இற்குள் இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும்

நாள்: 2004.07.22 வியாழக்கிழமை
நேரம்: **காலை 10.00 மணி**
இடம்: **27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.**

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்கு வரும்போது பின்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

1) கல்விச் சான்று
2) தேசிய அடையாள அட்டை
3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4) மேலதிக தகைமைச் சான்றுகள்

ஆளுகை, சந்தைப் பகுதி,
யாழ். மாவட்டம்.

(34184) (24-34-14-19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 – 12 – 1943 |  | 31 – 07 – 2003 |

## அமரர் சீவரத்தினம் கனகசிங்கம்

(முன்னாள் சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் அதிகாரி)

திதி: 18-07-2004

ஆண்டொன்று ஆனதப்பா!
ஆனாலும் மனம் இன்னும் ஆறாது!
ஆறாது உங்களைத் தேடுதப்பா!
ஆண்டு பல ஆனாலும் உங்களைக் கண் தேடுமப்பா!

"அன்னை இல்லம்",
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

(34121)(42-34-14-19)

# "...அடுப்படி வரைக்கும் கருத்துக்கள் போகவேணும் அதே இடத்தில் இருந்தும் கருத்துக்கள் உருவாகவேணும்..."

**பெ**ண்களுக்கு உரியதாகவும் எம் தேசத்தை மாற்றியமைப்பதற்காகவும் ஒட்டு மொத்தக் கிராமிய மேம்பாட்டுப் பணியில் மாதர்சங்கங்களை இணைக்கும் பொருட்டும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து கோட்டங்களிலும் உள்ள மாதர் சங்கங்களும், பெண்கள் பண்பாட்டு மையமும், விடுதலைப் புலிகள அமைப்பின் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறையும் இணைந்து ஜூலை 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடம், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் பிரதேச சபை மண்டபம் ஆகிய இடங்களில் சந்திப்புக்களை நடத்தின.

இதன்போது, 97 மாதர் சங்கங்களைச் சேர்நத 193 பெண்கள் கலந்துகொண்டு பெண்களின் முன்னேற்றமும் கிராமத்தின் முன்னேற்றமும் தொடர்பாகக் கோட்ட ரீதியாகக் காணப்படும் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

அக வணக்கத்தின் பின்னர் அரங்கப் பாடலுடன் ஆரம்பித்து, மன இறுக்கம் தளர்த்தப்பட்ட நிலையில் உற்சாகமாக நடைபெற்ற சந்திப்பில் பின்வரும் சாதகமான அம்சங்கள் மேற்கிளம்பின.

✦ ஆர்வத்துடன் பங்குபற்றியமை -

✦ பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு முன்வைத்தமை -

✦ பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் மட்டுமன்றி ஒட்டுமொத்த கிராமிய மேம்பாட்டிற்குத் தடையான பிரச்சினைகளையும் முன்வைத்தமை -



✦ இதற்காகப் பல பெண்கள் தயார் மனநிலை கொண்டிருந்தமை -

✦ சில மாதர் சங்கங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவையாக, சாதனைகளை நிலைநாட்டியவையாக உள்ளமை -

**இவர்களால் இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகள்:**

1. உயர் பாதுகாப்பு வலயம் இயல்பு வாழ்வுக்குப் பெரும் தடையாக உள்ளமை.
2. காணாமற்போனோர் பிரச்சினை -
3. குடிதண்ணீர்ப் பிரச்சினை -
4. மலசல கூட வசதியின்மை -
5. வீதி புனரமைப்பு -
6. பாலங்கள் திருத்தியமைக்காமை -
7. மின்சார வசதியின்மை -

8) வடிகாற்பிரச்சினை -

9) குளங்கள் புனரமைப்பு -

10) போக்குவரத்து பஸ் சேவைப் பற்றாக்குறை -

11) நகர, கிராம சுத்திகரிப்பு வேலை சீரின்மை -

12) வலுவிழந்தோர் பிரச்சினை -

13) மருத்துவம் தொடர்பானவை -

✧ வைத்தியர் பற்றாக்குறை -

✧ வைத்தியசாலை புனரமைக்கப்படாமை -

✧ மருந்துவகைகள் பற்றாக்குறை.

✧ குளிரூட்டிகள் இன்மை.

14) பெண்கள் தொடர்பானவை

✧ பெண்கள் தலைமைக் குடும்பங்களுக்குப் போதிய ஊக்குவிப்பின்மை.

✧ சுயதொழில் வாய்ப்புப் போதாமை.

✧ திறன், பயிற்சிகள் வழங்கப்படாமை.

✧ தனித்து வாழும் பெண்களுக்கான பாதுகாப்பின்மை.

15) கல்வி தொடர்பானவை -

✧ ஆசிரியர் பற்றாக்குறை.

✧ பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்படாமை.

✧ பாடசாலைத் தளபாடப்பற்றாக்குறை.

✧ நூலகம் இன்மை.

✧ கணனிக்கல்வி பல பாடசாலைகளுக்கு இன்னமும் அறிமுகம் செய்யப்படாமை.

✧ முன்பள்ளிக் கல்வியில் தளபாடப்பற்றாக்குறை, கட்டட வசதியின்மை, ஊதியம் போதாமை, ஊதியம் வழங்கப்படாமை.

16) படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பின்மை -

17 படிப்பை இடையில் நிறுத்திய இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்கள், தொழிற் பயிற்சிகள் அற்றுக் காலத்தை வீணே கழிக்கின்றமை -

18) தீய பழக்கவழக்கங்கள் கலாசாரச் சீரழிவுகள் தொடர்பான பிரச்சினைகள் -

19) மயானப்புனரமைப்பு -

20) கண்ணிவெடிப்பிரதேசமென அபிவிருத்தித் திட்டங்களில் விலக்கிவிடுதல் -

21) மீளக்குடியமர்வு நிதிவழங்குவதில் குறைபாடு -

22) 'உ' அட்டை தொடர்பான பிரச்சினை -

23) பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி (**Leadership Training**), வலுப்படுத்தற் பயிற்சி (**Capacity Building**) -

இப்பிரச்சினைகளைப் பற்றி இவர்கள் கூறும்போது பல விடயங்களை மனந்திறந்து பேசினர்.

**குறிப்பாக ஒரு மாதர் சங்கத் தலைவி:-**

- ✳ அடுப்படி வரைக்கும் கருத்துக்கள் போகவேண்டும், அடுப்படியில் இருந்தும் கருத்து உருவாகவேணும்.

✳ "பெண்களும் கருத்துக்களை உருவாக்குபவர்களாக வரவேணும்"

✳ "அப்படியென்றால் கருவிலேயே அவர்கள் பிள்ளைகளுக்கு நல்ல கருத்துக்கள் போய்ச் சேரும்"

✳ "ஒவ்வொரு வீடும் சுதந்திரம் பெறவேணும்"

✳ ஒவ்வொரு வீட்டிலும் வறுமை ஒழியவேணும்"

✳ "அப்படி நடந்தால் பொதுச் சேவை செய்ய முன்வருவர்"

✳ "மாதர் சங்கங்கள் உற்சாகமாக இயங்கினால்தான் நாட்டை முன்னேற்றலாம்" என்று தெளிவுடன் கருத்துக்களை முன்வைத்தார்.

பல மாதர் சங்கங்களைச் சேர்ந்த பெண்கள், மற்றைய மாதர் சங்கங்கள் ஆற்றிய பணிகள் பற்றிக் கலந்துரையாடும் போது:-

✳ அவர்களுக்கு லட்சக்கணக்கில் பண உதவிகள் வழங்கப்பட்டும் தமது சங்கங்களுக்கு எதுவித உதவியும் வழங்கப்படாமை குறித்து வருத்தம் தெரிவித்தனர்.

நெடுந்தீவுப் பிரச்சினை பற்றிப்பேசும்போது:-

குடிதண்ணீர் நெடுந்தீவு மேற்குப் பகுதியில் இருந்து கிழக்கு - மத்தி ஆகியவற்றுக்கு வழங்கப்படுவதாகவும் படையினர், ஈ.பி.டி.பியினர் 24மணித்தியாலமும் அந்நீரைப் பெறக்கூடியதாக இருக்க, 45 குடும்பங்களில் 15 குடும்பங்களே ஒருவருக்கு ஒரு குடம் வீதம் நீரைப்பெறக்கூடியதாக இருப்பதாகக் கூறினர்.

கடல் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறும்போது பொதுமக்களுடன படையினரும் பயணம் செய்வதால் பொதுமக்கள் சில சமயங்களில் இடப்பற்றாக்குறை காரணமாகப் பயணிக்க முடியாமலும் போகின்றது" - அத்துடன் பெண்கள் இத்தகைய பயணங்களில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் - எனக் குறிப்பிட்டனர்.

**தென்மராட்சியைச் சேர்ந்த பெண் ஒருவர்:-**

'அ' 'உ' அட்டைகள் செய்த துரோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

'உ' அட்டைகளுக்கு ரூபா 25 ஆயிரம் மீளக்குடியமர்வு நிதி ஒதுக்கப்படாமை பற்றிச் சொன்னார்.

"குண்டுகளும் ஷெல்களும் 'உ' அட்டை, "அ" அட்டையைப் பார்த்து விழவில்லை, இந்த அநீதியை எப்படியும் தீர்த்து வைக்கவேணும்' - என்று கோரிக்கை விடுத்தார்.

எனினும், கவலையான விடயங்களையும் அங்கு அவதானிக்கமுடிந்தது.

✳ பல மாதர் சங்கங்கள் சரியாக இயங்காமல் உள்ளமை -

✳ பெண்கள் பொது விடயங்களுக்கு முன்வராமை -

✳ பயம், வெட்கம், தயக்கம் நிறைந்தவர்களாகப் பெண்கள் இருத்தல் -

✳ தங்கிவாழும் மனோபாவம் -

இந்த நிலைமையை உள்வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் அவர்களின் பிரதிபலிப்பு பின்வருமாறு அமைந்திருந்தது.

அவர் தனது உரையில்:-

நீண்டகாலமாக மக்கள் இராணுவ ரீதியாக ஒடுக்கப்பட்டுப் பயத்துடன் வாழ்ந்து உடைமைகளை இழந்து, உறவுகளை இழந்து தன்னம்பிக்கை இழந்து பெருத்த மனித அவலத்துக்கு உட்பட்டுள்ளனர். இதன்மூலம் மக்களின் சுயகௌரவத்தை அழித்து, சுயமுயற்சிக்கும், நிலையான வளர்ச்சிக்கும் இடந்தராமல் அதிகாரிகள் சில சலுகைகளைக் கொடுக்க முன்வந்தனர். இது இரண்டு வழிகளில் நடந்துள்ளது.

★ அரசின் முகவர்களான நாடாளுமன்ற உறுப்பினரால், மந்திரிமாரால் -

★ வெளிநாட்டு நிறுவனங்களால் -

**கிள்ளித்தெளிக்கும் உதவிகளால் முரண்பாடு**

இவர்கள் அங்கங்கு கிள்ளித் தெளித்தனர். இதன் காரணமாக மக்கள் கையேந்தும் முடிவுக்குத் (**Receiving End**) தள்ளப்பட்டனர். அதுமட்டுமல்ல, இதைப் பெற்றுக்கொள்ளும் மக்களிடையே முரண்பாடுகளும், போட்டிகளும உருவாக்கப்பட்டன.

இந்த விஷச்சூழலில் இருந்து நாம் வெளிவரவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஐம்பது லட்சமும் பெருந்தொகைக் காசு அல்ல. மக்களை இதே மனநிலையில் வைத்துக்கொண்டு கிள்ளித்தெளித்தால் அது மக்களிடையே முரண்பாட்டை வளர்ப்பதற்குத்தான் வழிவகுக்கும்.

அண்மையில், 'பல்லசுட்டிக்' கிராமத்துக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடியபோது, வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்களுள் சிலருக்கு வழங்கப்பட்ட பாத்திரங்கள் அந்த ஊரில் முரண்பாட்டை ஏற்படுத்தியிருந்ததைக் காணமுடிந்தது. அப்பாத்திரப் பகிர்வில் என்ன நடைமுறையை அதிகாரிகள் பின்பற்றியிருந்தனர் என்பது பற்றி மக்களுக்குத் தெரியாது. பாத்திரம் வழங்கப்பட்டவர்களைவிட மிகவும் பாதிப்படைந்த மக்கள் அங்கு இருந்தனர். இவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்த



ஊர்களைக் குழப்பும்வகையில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

மக்களிடையே ஒன்றுதிரண்ட பலம் இருக்கவேண்டிய நேரத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடாது. நாம் இந்த முறையை மாற்றியமைக்கவேண்டும். மாதர் சங்கங்கள் தாமே தமது கிராமப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் தலைமைத்துவம் நிறைந்ததாக வலுப்படுத்தப்படவேண்டும். வீடு வீடாகச்சென்று கதைத்து இளம்பெண்களைத் திரட்டுபவர்களாக உயிர் ஊக்குநர்களாக (**Animators**) இளம் பெண்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பின்னர் இவர்கள் மற்ற இளம் பெண்களை அணிதிரட்டி பயிற்சியில் ஈடுபடுத்தவேண்டும். இவ்வாறு அனைத்துக் கிராமப் பெண்களும் விழிப்புப் பெறவேண்டும்; தங்களுடைய ஆற்றலை உணரவேண்டும். இவர்களுக்காகக் கிராமத்தின் மத்தியில் சுயதொழில் நிறுவனங்களை உருவாக்கலாம். இதற்கான நிதி ஆதரவுகளைப்பெற முயற்சிக்கலாம். நாம் பலம்பெற்று இயங்குகின்றபோது அதற்கு நிதி ஆதரவு கிடைபபதும் இலகுவாக இருக்கும். இதற்கு அர்ப்பணிப்புடன் உழைப்பதுதான் முக்கியமானது.

இதன்மூலம் கிராமத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களும் உழைப்பாளிகளாகிக் கிராமத்தின் வறுமையை ஒழிக்கமுடியும் - என்று குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் - கிராமங்களில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பெண்கள் வாயிலாக அறிதல் -

மாதர் சங்கங்கள் ஊடாகச் சிபார்சுகளைப் பெறுதல் -

கிராமிய அபிவிருத்தியில் மாதர் சங்கங்களை இணைத்தல் -

என்பவற்றுக்காக ஏற்படுத்தப்பட்டது.

தொகுப்பு: **பெண்கள் பண்பாட்டு மையம்**

கிராமிய மேம்பாட்டுக்கு உழைக்க தயார் மனநிலையில் பெண்கள்

---

# வன்முறை அதிகரித்து வரும் சூழலில் விசுவாச வாழ்வு அற்றுப் போய்விடும்

"வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை; வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை"

(பேதுரு:322)

காயப்பட்ட மனங்களை ஆற்றுப்படுத்தவும், கடினப்பட்ட மனங்களை இலகுபடுத்தவும் உங்களால் முடிந்தால் அதுவே இறைபணியாகும். அதுவே, வழிபாட்டின் வெளிப்பாடாகவும், சாட்சிய வாழ்வாகவும் வாழப்படுகின்றது.

**யோசப்பாலா**

வன்முறைச் சமூக விரோதச் செயல்கள் அதிகரிக்கும் சூழலில் ஆன்மீக விசுவாச வாழ்வு அற்றுப்போகின்றது என்பதை உணரமுடியும். அராஜகம் நடப்பதை ஒருசாரார்மேல் பழிபோட்டுத் தப்பித்தல் இன்று எங்கும் பேசப்படுவதாகவே உள்ளது. அச்சூழலில்தான் நீங்களும் வாழ்ந்து கொண்டால் அதன் பங்காளிகளும் நாங்களே என ஏற்று நல்வழி தேடமுற்படாது ஆலய விழாக்களிலும் ஆன்மீக விசுவாசத் தேடலிலும் மட்டும் நாட்டம் கொள்வதில் அர்த்தமிராது.

தவறுகளைக் கண்டு ஒதுங்காது அதனை எதிர்கொண்டு சமூக விடுதலையுடன் ஆன்மீக வழிகளில் மக்களை வழிநடத்திய நல்ல தலைவனான இறையேசு வாழ்ந்த பாதையில் செல்ல முற்படும் ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டிய - சுமக்க வேண்டிய - சிலுவையைத் தூக்கிச் செல்வதிலும் முன்மாதிரிகளாகவே அழைக்கப்படுகின்றீர்கள்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

"பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை; துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை; நியாயமான தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார். சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நம்பாவங்களுக்கு இறந்து நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர் தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்".

அவர் தம் காயங்களால் எம்மைக் குணப்படுத்தியதுபோல், பல துன்பங்கள் மத்தியில் பழிக்கப்பட்டபோதும் நீதியான விடுதலை வாழ்வைச் சுவைக்க எமக்காகச் சுமந்த சிலுவைப் பயணம் இன்றும் தொடர அழைக்கப்பட்டுள்ளோம்.

அந்த அழைப்பின் குரலை எம் பொறுப்புக்களாக ஏற்று, சமூக விடுதலையின் பங்காளராய் காயப்பட்ட - கடினப்பட்ட - மனங்களில் இறைசாயலைக் காண்போம். துன்புறுத்தும் சிலுவைகளைச் சுமந்து வன்முறைச் சமூகச் சீர்கேடுகளைக் களைந்து நீதிக்காக உழைப்பதில் எம் ஆன்மீக விசுவாச வாழ்வை ஆழப்படுத்தும் முன்மாதிரிகளாக மாற்றுவதில் கிறிஸ்துவின் சாட்சிகளாவோமா? ✳

---

## கலந்துரையாடல்

குடாநாட்டில் கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ். கடல்வள அபிவிருத்தி நிலையங்களின் சமாசத்தில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(ஓ-6)

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஜூலை18

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் விபுலானந்தர் தினம் மற்றும் முத்தமிழ்விழா ஆகியன நாளை திங்கட்கிழமை காலை 9 மணிககு மன்றத்தின் தலைவர் யே.எட்வின் ஜெயராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) பிரதம விருத்தினராகவும், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், தமிழீழக் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் - சண்டிலிப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆசியுரையைப் பாடசாலை அதிபர் அ.மு. அருணாசலம் நிகழ்த்துவார்.

பரிசில்களை திருமதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்குவார். (எ-201)



இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு
மறுசீரமைக்கப்பட்ட, மறுசீரமைக்கப்படாத உயர்ரக
மெஸிபர்கியூஷன் 240
MASSEY FERGUSON 240
எந்த வேளையிலும் எத்தனை ட்ரக்டர்களையும் வாங்கி வரக்கூடிய இலங்கையின் மிகப்பெரிய ட்ரக்டர் நிறுவனம்
JCB 3CX
தேவ் டிரக்டர்ஸ்
Dave Tractors
106, கண்டி ரோட், யக்கல. (லங்லோ அருகில்)
தொடர்புகளுக்கு: 033-2226010 (மும்தாஸ்)
0777-783863 (செய்ன்)

## 31 ஆம் நாள் நினைவாஞ்சலி



மலர்வு 15 . 08 . 1951

நிறைவு 18 . 06 . 2004

## தினகரம்பிள்ளை சந்திரா

சூரியனாம் தினகரனின்
துணைபெற்ற சந்திரனும்
ஒருநாளாம் மாதமொன்றில்
ஒளிதர மறந்தாலும்
தினகரம் சந்திராவோ
தெய்வமாய் எம்முடனே
தினம்தினம் ஒளிதருவார்
திங்கள் ஒன்று போனாலும்
தெய்வம் என்றும் துணையிருக்கும்
எங்கள் இதய அஞ்சலிகள்.

- குடும்பத்தினர்.

'ரதிமஹால' வதிரி.

(34195)(34-21-14-16)

## பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

வரணி,ஜூலை18

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், மிருசுவில் றோமன கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றிற்கு கட்டட வேலைகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாசாலைக்கு கணனி அறை புனரமைப்புக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஒ-170)

## கணனிகள் அன்பளிப்பு

மானிப்பாய் இந்துக கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கம் 10 கணனிகளை கல்லூரிக்கு வழங்க முன்வந்துள்ளது.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட கணனி நிலையததில் லண்டன் பழைய மாணவர்களால் வழஙகப்படும் மேலதிக 10 கணனிகளும் பொருததப்பட்டு மாணவர் பாவனைக்கு விடப்படவுள்ளன. (ஒ-185)

## அடிக்கல் நடும் விழா


கைதடி,ஜூலை18

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலைக்கென ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 10மணிக்கு நிலையத்தலைவர் ப.விஜயகுமார் தலைமையில் நிலைய மைதானத்தில் இடம்பெறறது. அடிக்கல்லை சமூகசேவையாளர் இ.பரமேஸ்வரன் நட்டுவைத்தார். (ஒ-75)

தேவை
யாழ். நகரில் இயங்கும் புகைப்பட நிறுவனம் ஒன்றிற்கு தொழில்பழக பயிலுநர்கள் தேவை. (பயிற்சிக்காலங்களில் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்)
க.பொ.த.சாதாரணம் படித்தவர்கள் 24.07.2004 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல.2327
(34157) மே/பா உதயன்..

யாழ். மக்களே! இதோ உங்களுக்காக!
★ தச்சுவேலை உபகரணங்கள்
10", 12",14",16" சைனா மிசின்கள்
★ எலக்ரிக் டிசைன் ரவுட்டர்கள்
★ றில்லர்கள் ★ கிரைண்டர்கள்
★ வளைவு வெட்டும் வான்சோ
☞ ஏனைய தச்சுவேலைக்கான உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
விவரங்களுக்கு: சுதா றேடேர்ஸ்
உரிமையாளர்: கி.சுதாகரன்
(34076)(37) 339, அரசடி வீதி, நல்லூர், யாழ்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## சுந்தரமூர்த்தி திருநடராஜா

(ஓய்வுபெற்ற MLT,
உரிமையாளர் மெடிகுவிக் பிறைவேட் லிமிட்டெட்)

அன்னை மடியில 12-08-1939 இறைவன் அடியில் 18-06-2004

*கருணையுள்ளம் கொண்ட எங்கள் தெய்வத் தந்தையே!*
*அறிவுக்கு அருங்கலசமாய்! அருளுக்குக் கோவிலாய்!*
*அனைவருக்கும் அன்பராய் விளங்கிய எங்கள் அப்பாவே!*
*எங்களை விட்டுப் பிரிந்து மாதமொன்றானாலும்*
*உங்கள் ஞாபகங்கள் மட்டும் நெஞ்சோடு நினைவகலாது*
*வாழ்ந்துகொண்டு நித்தம் எம் வாழ்வில் தித்திப்பாயாகவே!*

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அனைத்து உறவினர்கள், நண்பர்கள், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைத்தொடர்பு, தந்தி மூலம் தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள். அத்துடன், இன்று (18-07-2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் புதிய கதிரேசன் மண்டபம் (போசனசாலை) 339, காலி வீதி, கொழும்பு - 04இல் நடைபெறும அந்தியேட்டிக் கிரியை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

535, நீர்கொழும்பு வீதி,
வத்தளை.
தொ.பே: 2930913, 2931084, 2936104.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

(சி-36296) (26-21-14-16)

20வருடங்களுக்குப் பின்பு BRITISH COUNCIL
இனால் சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள் யாழ் நகரில் நடாத்தப்படும்!!

BRITISH BUSINESS SCHOOL
BRITISH COUNCIL உடன்
இணைந்து நடாத்தும்
மேற்கூறப்பட்ட சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகளைப் பற்றிய
இலவச Presentation (வழிகாட்டல்) இற்கு சமூகமளித்து
விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்

Date : Saturday 31st July 2004
Venue: Jaffna Public Library Auditorium
PresentationBy: Mr. Gerald Yorwerth
Examination Services Manager,
BRITISH COUNCIL

| For Whom | Exam (Course) | Time of Presentation |
|---|---|---|
| For Adults | IELTS | 1pm - 3pm |
| | CAE, BEC | 3pm - 5pm |
| For Children | YLE,FCE KET, PET | 9.30am - 11.30am |

Presentation இற்கு வர விரும்புவோர் British Business School ல் இலவச Admission Card ஐ பெறவும். Admission Card இல்லாமல் அனுமதி இல்லை

October 2004இல்
முதல் தடவையாக
IELTS, YLE, FCE,
CAE, KET, PET, BEC
போன்ற
University of Cambridge (U.K)
ESOL Examinations
யாழ் நகரில்
British Business School
ஒழுங்கு செய்யும்
பரீட்சை நிலையத்தில்
BRITISH COUNCIL இனால்
நடாத்தப்படும்.
British Business School மாணவர்களை
மேற்கூறிய பரீட்சைகளுக்குத் தயார்ப்படுத்தும்.

The Peninsula's English Academy
BRITISH BUSINESS SCHOOL
யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.
HOT LINE : 021-222-5796
British BUSINESS SCHOOL
Where Students Come First

| | | | |
|---|---|---|---|
| | ரா. | வெ. | சனி |
| | இராசிச் சக்கரம் | | சூ. ▼ செ. சந். புதன் |
| | | | வியா. |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 18.07.2004 – 24.07.2004

**மாற்றம்:**

**18.07.2004இல் பூசம் நட்சத்திரம் சந்திரன் கடகம் இராசியில் நிற்கும்.**

இலங்கையின் இனநெருக்கடிக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் இருபகுதியினருக்கும் உலக நாடுகள் அழுத்தம் கொடுக்கும். மக்கள் மத்தியில் திடீரென மனமாற்றம் ஏற்படும். பொது வேலை நிறுத்தத்திற்கு வித்திடப்படும். இந்தியா ஆலோசனைகள் வழங்கும். இந்தியாவின் வடபகுதியில் வன்செயல்கள் அதிகரிக்கும். படிப்படியான மாற்றங்கள், தெற்கு அரசியலில் பதட்ட நிலையை உருவாக்கும். சோனியாகாந்தியால் புதிய திட்டங்கள வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படும். மத்திய கிழக்கில் ஈராக் - பலஸ்தீனம் - இஸ்ரேல் ஆகிய நாடுகளில் வன்முறைகள் அதிகரிக்கும். இந்துசமுத்திரம், பசுபிக்சமுத்திரம் ஆகியவற்றில் சீதோஷ்ண நிலைகளில் மாறுதல்கள் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

பதற்ற நிலை, அடிக்கடி பிரயாணம், புதிய சிந்தனை, வருமானம், விபரீத எண்ணம், வீடு மனை சம்பந்தமான அலுவல்களாகப் பார்த்துப் பெயரெடுப்பார். கொடுக்கல், வாங்கலில் அவதானமாக இருக்கவும். வீடு, வாகனம் சம்பந்தமான கொடுக்கல், வாங்கல்களால் அலைச்சல் கொடுக்கும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

உதயத்தில் வெள்ளி எண்ணிய காரியங்கள் நிறைவேறும். பிரயாணங்களால் நன்மைகள் கொடுக்கும். சகோதரர்களின் நன்மைக்காக ஓடியாடித் திரிவீர்கள். அரசின் ஆதரவு பெருகி வரும். நாரி உளைவு கொடுக்கும். வெளிநாட்டுப் பிரயாணங்களைச் செய்ய யோசனை வந்தாலும் வெற்றி கிடைக்காது. சங்கீதத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி.*

### மிதுனம்

சனிஸ்வரனின் தாக்கம் உண்டு. குடும்பத்தவருடன் அபிப்பிராய பேதம் ஏற்படும். நண்பர்கள் சதி செய்வார்கள். புத்திரர், சகோதரங்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். தாய் வழியினரின் ஆலோசனை உதவிகளால் நன்டை கிடைக்கும். குருத்தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றகரமான காரியனுகூலங்கள் கொடுக்கும். சந்தை, வியாபாரிகளும் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன்.*

### கடகம்

பணம், பொருள் வரும். அதிகம் பேசிக் காரியத்தைக் கெடுக்க முற்படாதீர்கள். மாமன் வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். காணி, பூமி சம்பந்தமான மாற்றங்கள் நன்மை தரும். புதிய திட்டங்களால் நன்மை கிடைக்கும். கல்விச் சிறப்பை மாணவர்கள் அடைய இடமுண்டு. தூரதேசப் பிரயாணங்களுக்குத் திட்டமிடுவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன்.*

### சிங்கம்

ஆஸ்திக எண்ணம் கொண்டிருப்பீர்கள். ஆனால், வெளிப்படையாக நாஸ்திகம் பேசுவீர்கள். குடும்பத்தில் கலகம் வரும். வீடு, மனை, வாகனம் சம்பந்தமான பிரச்சினை ஒன்று வரும். தாய்வழியினருடன் கருத்து வேற்றுமை வரும். சுயசிந்தனை, மனைவி குழந்தை பற்றிய மனப்பேதலிப்பு ஏற்படும். இரும்பு, மின்சாரம் சம்பந்தப்பட்டவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள் :- புதன்.*

### கன்னி

சலிப்படையாதீர்கள். உத்தியோகம் பொருள் கிடைப்பதில் எல்லாம் விதியுடன் எமது ஊக்கமும் கலந்துள்ளது. குடும்பத்தில் நற்காரியப் பேச்சுகள் நடக்கும். தூரத்து உறவினர் வருவார்கள். பொருள் போக்குவரத்தில் தவறலாம் கவனமாக இருக்கவும். நண்பர்கள் உதவிசெய்வார்கள். இடமாற்றங்கள் நன்மைதரும். வியாபாரிகள் குருத்தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், வெள்ளி.*

### துலாம்

எந்தக் காரியத்தையும் தைரியத்துடன் செயற்படுத்துவீர்கள். எதையும் இரகசியமாகச் செயற்படுத்துங்கள். சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். வீடு, வாகனத்தால் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புகள் வலுக்கும். தாயாருடன் அல்லது தாய் வழியினருடன் கருத்துவேற்றுமை ஏற்படும். பாதுகாப்புத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, புதன், வெள்ளி.*

### விருச்சிகம்

எதையும் நிதானித்துச் செயற்படுவீர்கள். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். வீடு, வாகன வசதிகள் வரும். மேலதிகாரிகள் உதவுவார்கள. பிள்ளைகள், சகோதரங்களுடன் கருத்துவேற்றுமை வரும். சங்கீதத் துறையில் நாட்டமிருக்கும். பொருள் வரும். ஆஸ்பத்திரிச் செலவுகள் உண்டு. சளி, சல வருத்தம் கைகால் பிடிப்பு, விறைப்புக் கொடுக்கும். பாதுகாப்புப் பிரிவினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி.*

### தனுசு

உதயத்தவன் வியாழன் தர்ம ஸ்தானத்திலிருந்து பார்வை பெறுவதனால் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். புதிய திட்டங்களால் தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். தந்தைவழியினருடன், சகோதர உறவினர்களுடன் கருத்துவேற்றுமை ஏற்படும். வீடு, வாகன யோகம் உண்டு. பொருளை நிதானமாகச் செலவு செய்யுங்கள். பாதுகாப்புப் பகுதியினர், குருத்துறையினர் நன்மை செய்வார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

கலகம் செய்து காரியத்தைப் பெறுவீர்கள். பணம் வரும் புதிய நட்புப்பெருகும். இடைக்காலப்பொறுப்புக்கள் கிடைக்க வழி உண்டு. மேலதிகாரிகள் உதவுவார்கள். இசைத்துறையில் நாட்டம் கொடுக்கும். படிப்படியான நன்மைகள் ஏற்படும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புக் கொடுக்கும். தூரத்து உறவினர் வருகை தருவார்கள். குருத்துறை, கடற்றுறையினர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், வெள்ளி.*

### கும்பம்

குருபார்வை உண்டு. எடுத்த காரியங்கள் நல்லவர்கள் மூலம் நிறைவேறும். பண வரவு இருக்கும். ஆனால், கட்டு மீறிய செலவுகள் அதிகரிக்கும். புதிய பொறுப்பொன்று தொழில்ஸ்தானத்தில் ஏற்படும். நண்பர்கள் உதவுவார்கள். கால்வருத்தம், நரம்புத்தளர்ச்சி, சளித் தொல்லை என்பன கொடுக்கும். இடமாற்றங்கள் நன்மைதரும். ஆசிரியர்கள், காவல்த்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள் : திங்கள்.*

### மீனம்

தொழிலில் புதிய நடைமுறை சிறப்பைத்தரும். மேலதிகாரிகள் உதவுவார்கள். இடமாற்றங்கள் நன்மை தரும். புத்திரர் மூலம் நல்லசெய்திகள் கிடைக்கும். பொருள்வரவு அதிகரிக்கும். புதிய ஒப்பந்தம் செய்ய யோசனைவரும். தூரத்துப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். அல்லது இழப்புக்கள் வரலாம். சகோதரர்களால் பொருள் சம்பந்தமான பேச்சுக்கள் வரும். வியாபாரிகள், கடற்றொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- திங்கள்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# அழைப்பாணையை ஏற்க மறுத்த தம்பதிக்கு நீதிமன்று பிடியாணை

## கணவன் தலைமறைவு, மனைவி கைது

தென்மராட்சி,ஜூலை18

நீதிமன்ற அழைப்பாணையை ஏற்க மறுத்த கணவனுக்கும் மனைவிக்கும் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. இதனையடுத்து கணவன் தலைமறைவானார். மனைவி கைது செய்யப்பட்டு இருவாரகால விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

காணி வழக்கு ஒன்று தொடர்பாகக் கொடிகாமம் பாலாவி தெற்கைச் சேர்ந்த கணவனையும் மனைவியையும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜராகுமாறு பிஸ்கால் உத்தியோகத்தர் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றினால் அனுப்பப்பட்ட அழைப்பாணையை அவர்கள் ஏற்கமறுத்தனர் என்று நீதிவானின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனால், கணவனையும் மனைவியையும் கைதுசெய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலீஸார் பிரஸ்தாப தம்பதியினரின் வீட்டுக்குச் சென்றபோது கணவன் தலைமறைவாகிவிட்டார், மனைவியைக் கைது செய்த பொலீஸார் நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

அவரை இருவாரகால விளக்க மறியலில் வைக்குமாறும் இப்பெண்ணின் கணவரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஒ-117)

# வரணி - குடத்தனை வீதியில் கட்டாக்காலி நாய்த் தொல்லை

வரணி,ஜூலை18

வரணி - குடத்தனை பிரதான வீதியின் வடக்குப் பகுதியில் கட்டாக்காலி நாய்களால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதிக்குச் சமீபமாகப் பாதுகாப்புப் படையினரின் முகாம் ஒன்று உள்ளது. அங்கு வீசப்படும் மீதி உணவுகள் காரணமாக அப்பகுதியில் கட்டாக்காலி நாய்கள் அதிகம் காணப்படுகின்றன. இந்த நாய்களால் பொதுமக்கள் நடமாட அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், தமது வளர்ப்பு நாய்கள் ஈன்ற பெண்குட்டிகளைச் சிலர் கொண்டுவந்து இப்பகுதியில் விட்டுச் செல்வதால் நாய்களின் பெருக்கம் கூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-170)

# வட்டக்கச்சியில் இருந்து வந்தவர் புங்குடுதீவுக் கிணற்றில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை18

ஆலயம் ஒன்றைப் புனரமைக்கும் பொருட்டு வட்டக்கச்சியில் இருந்து புங்குடுதீவிற்கு வந்தவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

வட்டக்கச்சியை வதிவிடமாகக் கொண்டவரான தம்பையா செல்வராசா (வயது59) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த 9ஆம் திகதி வட்டக்கச்சியில் இருந்து புறப்பட்ட இவர் புங்குடுதீவிற்கு வந்து அங்கு சகோதரியின் வீட்டில் தங்கியிருந்தார்.

கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை மாலை வீட்டிலிருந்து புறப்பட்ட அவர் வீடு திரும்பாததை அடுத்து சகோதரி அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டார்.

இருநாள்களாகத் தேடியபின் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை வளவுக்கு அருகில் உள்ள கிணறொன்றில் பிரஸ்தாப நபரின் சடலம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின்பேரில் சடலம் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுப் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

நேற்றுமுன்தினம் அங்கு நடந்த பிரேத பரிசோதனையை அடுத்து சடலம் மனைவியிடம், எரிக்கப்படாது புதைக்கப்பட வேண்டும் என்ற கட்டளைக்கமைவாக ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-15)

# இனிவரும் தேர்தல்களில் வாக்களிக்க ஆள் அடையாளத்தை நிரூபிப்பது அவசியம்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

கொழும்பு,ஜூலை18

இனிவரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியம். ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னரே ஒருவர் வாக்களிக்கமுடியும். இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்த விடயம் பற்றி அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரிவித்த ஆலோசனை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்டும் அடையாள அட்டை இன்றி இருப்பவர்களுக்கும் துரிதமாக அடையாள அட்டைகளை வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்கவும் அமைச்சரவையில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் தேர்தல்களில் அடையாள அட்டை அல்லது குறிப்பிட்ட நபரை அடையாளப்படுத்தக்கூடிய உரிய ஆவணங்கள் இன்றி ஒருவர் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

தேர்தல் காலங்களில் இடம்பெறும் ஆள் மாறாட்டம் மற்றும் வாக்குமோசடிகளைத் தடுப்பதற்காகவே ஜனாதிபதி இந்த யோசனையை அமைச்சரவையில் முன்வைத்தார். கடந்த 14ஆம திகதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் அதனை ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பது என முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சர் ஜோன் செனவிரட்ன இதற்கான பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பித்ததை அடுத்து இதுதொடர்பான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அமைச்சருக்கு உத்தரவிட்டார்.

வாக்களிப்பின்போது வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றில் ஒன்றையேனும் சமர்ப்பித்துத் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னரே வாக்களிக்க வேண்டும் என்பதை இச்சட்டமூலம் கட்டாயமாக்கும்.

இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதும் மலையக மக்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படுவது துரிதப்படுத்தப்படவேண்டும் என ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு உத்தரவிட்டுள்ளார். (க)

# சுகாதார வசதிகளை மேம்படுத்த டென்மார்க் செஞ்.சங்கம் உதவி

செம்பியன்பற்று,ஜூலை18

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கிராமங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இதுசம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இதில் டென்மார்க் செங்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மருதங்கேணி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மாமுனை, கட்டைக்காடு, உடுத்துறை ஆகிய கிராமங்களில் சுகாதார நிலையங்களை அமைத்துத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன், நடமாடும் சுகாதாரநிலையங்களை அமைத்து வைத்திய சேவையை நடத்துவது என அப்போது தீர்மானிக்கப்பட்டது. (ஒ-36)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், தொட்டிகள், அழகுப்பொருள்கள், குருவிகள், கூடுகள், பூங்கன்றுகள், சாடிகள், டாஸ்கண்ட், கொக்கஸ்பனில் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11. சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (34148)

9ஸ்ரீXXXX தொடர் இலக்கமுடைய மொறிஸ மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.16 சங்கிலியன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். T.P.: 021 222 7654, 0777 111694, 0776 219840.(34205)

சணல் பால் ஆடு (ஒரு மாதக்குட்டிகளுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.வெற்றிவேலு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.(34235)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு:சிவகுமாரன்(பெற்றோல் செற அருகில்), புலவனார் வீதி, கல்வியங்காடு.(34190)

எம்மிடம் புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:கிருஷ்ணா, பொன்னாலை வீதி, விதானைவளவு, மானிப்பாய். (34183)

தரமான Prima Broiler குஞ்சுகள், பேட்டுக குஞ்சுகள் 19.07.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும. எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm, வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33931)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு NEW R.S.K. மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். T.P.: 077 6063164 அல்லது NEW R.S.K. மானிப்பாய் வீதி, மதவடி, உடுவில். (34183)

புறொயிலர் கல்பேட்ஸ் கோழிகள் என்பன விற்பனைக்குண்டு. வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ஹேறால்டன் 77, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (34234)

## தவறிவிட்டது

கந்தையா மரியநாயகம் என்பவரின் யமஹா மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் நாவாந்துறையிலிருந்து ஆனைக்கோட்டை ஊடாகச் சாவற்கட்டு செல்லும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 3ஆம் குறுக்குத்தெரு, ஜோசப் வீதி, நாவாந்துறை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (34214)

இளையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த குகதாசன் மனோகரன் என்பவருடைய வரிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரம், புத்தகம், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பை மீசாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனை விளம்பரப் பகுதியில் ஒப்படைத்துதவவும். (சி-36040)

## நாடக நூல் விற்பனைக்கு

நேற்று வானொலியில் "வாழ்க்கைகள் பல விதம்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'வானொலி நாடகம் எழுதுவது எப்படி? நூலைப் படித்தால் நீங்களும் அந்த மாதிரி நாடகங்கள் எழுதலாம் ரூபா 150/- (34237)

## வீடு விற்பனைக்கு

"குருவளை", அளவெட்டி தெற்கில் வீட்டுடன் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 08, நாவலடி லேன், திருநெல்வேலி. T.P.:0776309947. (34151)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகில் ஆனைக்கோட்டை மக்கிக்கிடங்கடியில் 5 பரப்பு 12.6 குழியுடன் சகல வசதிகளுடன் கூடிய சுற்று மதிலுடனான வீடு உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. T.P.: 2360590. (சி-36032)

ஏழாலை தெற்கு, விழுசிட்டியில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. ஏ/அ.மி. பாடசாலைக்கும் ஏ/அ.மி. தேவாலயத்திற்கும் முன்பாக அமைந்துள்ளது. விலை விவரம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: 011461947. (சி-36081)

சாவகச்சேரி தபால்கந்தோருக்கு அருகில் 4 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776245134, 0776532186. (34236)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வுப் பகுதியில் நான்கு பரப்புக் காணி நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:60, சிவன பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (34225)

## வீடு தேவை

சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. கிருஷ்ணா டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் (அந்தோனியார் கோயிலுக்கு அருகில்), நேரில் தொடர்புகொள்ளவும். (34230)

## மணமகள் தேவை

Australia இல் இருந்து வரவிருக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971, 5'8" B.Sc. (Accountancy) Sydney இல் படித்த Accountant மணமகனுக்கு A/L இற்கு மேல்படித்த மணமகள் தேவை. SriLuxmie & Marrage Service, 289 2/1, Galle Road, Colombo 06. (C/36043)

வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1970, 5'6" ACS, CCNA படித்த System Analysed ஆக கொழும்பில் வேலை செய்யும மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. Sri Luxmie Marriage Service, 289 2/1 Galle Road, Colombo - 06. (C/36043)

கொழும்பில் பிரபல Private Bank இல் வேலை செய்யும் யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971, 5'8" சிவந்த அழகான மணமகனுக்கு தகுந்த அழகான மணமகள் தேவை. Sri Luxme Marriage Service, 289 2/1,Galle Road, Colombo - 06 (C/36043)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974 5'3" CIMA Stage III செய்யும் Australia விற்கு (சகோதரி அங்குள்ளார்) Migrate பண்ணவிருக்கும் மணமகளுக்கு Professionaly Qualified மணமகன் தேவை. நட்சத்திரம் சுவாதி, பாவம் 29 T.P.: 2361197 Sriluxmie Marriage Service, 289 2/1 Galle Road, Colombo - 06. (C/36043)

## இலகு திருமண சேவை

1975, மூல நட்சத்திரம், செவ்வாய் அற்ற, கிரகபாவம் கூடிய Accountancy II சித்தியடைந்த, கனடா P.R. மணமகனுக்கு அழகிய, படித்த, உயரமான மணப்பெண் (கௌரவ குடும்பத்தில்) தேவை. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (33987)

## கைமாறிவிட்டது

கந்தசாமி மாயாகரன் என்பவருடைய பெறுமதியான முக்கிய ஆவணங்கள், றப்பர் முத்திரை, காசோலை, வங்கிப்புத்தகம், காணி உறுதிகள் என்பவற்றுடன் 13.07.2004 ஓமந்தையிலிருந்து கொழும்பு சென்ற பஸ்ஸில் கைமாறிவிட்டது. கைமாறி எடுத்தவர்கள் தயவு செய்து க.மாயாகரன், விக்னேஸ்வரா வீதி, சங்கானை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 021 222 6235. (34238)

## கைதடிப் பகுதி அபிவிருத்திக்கு ஆலோசனைக் குழு தெரிவு

கைதடிப் பிரதேசத்தின் அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக்குழுத் தெரிவு கடந்த புதன்கிழமை கைதடி பொது நூலகக் கேட்போர் கூடத்தில் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் ந.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி குழுவின் தலைவராக சாவகச்சேரி பிரதேசசபைச்செயலாளர் ந.பாலச்சந்திரனும், செயலாளராக கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த க.தயாளனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் ஏழு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கைதடி கள்ளிநகர் ஜான் பாலர்பாடசாலை மாணவர்கள், கைதடி ஊரியான பிரதேச மக்கள் ஆகியோரின் குடிதண்ணீர்த் தேவைகளுக்காக குழாய்க்கிணறுகள் பதிதாக அமைத்தல் மற்றும் கைதடி இராஜபுரிப் பிரதேசத்தில் உள்ள குழாய்க்கிணற்றைத் திருத்தம் செய்தல், கால்நடைகளின் தேவைகளுக்காக கைதடி புதிரார்குளம், கைதடி தாளையடிக் குளம் என்பனவற்றையும் சீர்செய்தல் கைதடி ஊற்றல் மயான வீதியை மயானத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் திருத்துவது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அத்தோடு உள்ளூராட்சி வாரத்தையொட்டி கிராமங்கள்தோறும் சனசமூகநிலையங்களூடாக மரக்கன்றுகள நாட்டுவது எனவும் ஏகமனதாக முடிவுஎடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கைதடிப் பிரதேசத்தை சேர்ந்த சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், நாவற்குழிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே. சுதாகரன், சாவகச்சேரி பிரதேசசபை தொழிலநுட்ப அலுவலர் ஆ. இராசதுரை, சாவகச்சேரி பிரதேச சபையின கைதடி உபபணிமனைப் பொறுப்பதிகாரி செல்வி எஸ். காயத்திரி ஆகியோர் இதில கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (ஒ-75)


## விற்பனைக்கு உண்டு

நல்ல பராமரிப்பில் உள்ள பெரிய ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
21, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி
(34164)(40-21-16-17)

## வேலை வாய்ப்பு

எமது கலையகத்துக்கு ஒலி, ஒளி, பதிவுத்துறையில் ஆர்வமுள்ள ஒருவர் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு: டிசாந்தினி திரை கலையகம்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.
(34227) (21-16-17)

## வாழ்த்துகின்றோம்

இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை
பரதநாட்டிய அரங்கேற்றத்தை
மேற்கொள்ளும்
செல்வி
**சுதர்சினி லூர்த்துநாதன்**



அவர்களுக்கு
எமது அன்பு நிறைந்த
வாழ்த்துக்களையும் ஆசீர்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
எதிர்வரும் காலங்களிலும்
இம்மாணவி இத்துறையில் பல
சிகரங்களைத் தொட இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
கலாபூஷணம் G.P.பேர்மினஸ்
குடும்பத்தினர்.
*11, சென். ஜேம்ஸ் மேற்கு வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (சி-36041) (24-16-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 16 - 02 - 1936
உதிர்வு 19 - 06 - 2004

### அமரர் வேலன் கனகசபை

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம்மையெல்லாம் இனிதே
வழி நடத்தி அன்பென்னும்
பாசத்தை அறிந்திடவே
எம்மை அரவணைத்து
இவ்வுலக வாழ்வை இழந்து
எவ்வுலகம் சென்றீரோ?

*சடையாளி,*
*காரைநகர்.*
(34231) (24-16-17)

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் முருகேசு கந்தையா ஐயாத்துரை

(ஒப்புநோக்குநர், அரச அச்சகம்)

எம் இல்வாழ்வின் ஒளிவிளக்கே எம்மையெல்லாம்
நேர்மை நெறியில் நிலைநிறுத்திய அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா தில்லைக்கூத்தனின் திருவடிகளில்
சாந்தியடைய அவனையே வேண்டி நிற்கின்றோம்.

அமரரின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அன்பரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி ஐ.இராசம்மா (மனைவி),
அன்பு மகன் அரவிந்தன்
குடும்பத்தினர்.

*மடத்தடி,*
*கந்தரோடை, சுன்னாகம்.*
(34233)(43-16-17-24) T.P.: 0776 216062

## திருமறைக் கலாமன்றம்



இன்று பரதநடன
அரங்கேற்றத்தை
மேற்கொள்ளும் எமது மாணவி
செல்வி சுதர்சினி லூர்த்துநாதன்
அவர்களை வாழ்த்தி நிற்பதுடன்
இவரது வளர்ச்சிக்குக் காரணமான
பெற்றோர் திருதிருமதி லூர்த்துநாதன்
அவர்களையும், குருஷேஸ்திரமாக
நின்று பயிற்றுவித்த நடன ஆசிரியை
ஸ்ரீமதி ஆனந்தஜோதி
தர்ஷனன் அவர்களையும்
பாராட்டுகின்றோம்.

இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக்கலாமன்றம்.

எமது கவின் கலைகள் பயிலக மாணவி
**செல்வி சுதர்சினி லூர்த்துநாதன்**
அவர்களின்
**பரத நடன அரங்கேற்றம்**
காலம்: இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 2.30 மணி
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில்
உயர்தரம் கலைப்பிரிவில் கல்விபயிலும்
செல்வி சுதர்சினி லூர்த்துநாதன் நடனக் கலையை
ஸ்ரீமதி நளாயினி இராசதுரை, ஸ்ரீமதி ஆனந்தஜோதி தர்ஷனன்
அவர்களிடம் கற்று அரங்கேறுகிறார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



(சி-36042)

# இந்திய, பங்களாதேஷ் அணிகள் முதல் போட்டிகளில் வெற்றி

8ஆவது ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் முதலிரு ஆட்டங்களில் இந்திய அணியும் பங்களாதேஷ் அணியும் வெற்றியீட்டியுள்ளன.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் முதலாவது ஆட்டம் பங்களாதேஷ் - ஹொங் ஹொங் அணிகளுக்கிடையே கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்களாதேஷ் அணி 116 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 221 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணியின் சார்பில் ஜாவிட் ஓமர் 68 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஹபிபுல்பஷர் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஹொங்ஹொங் அணியின் சார்பில் இலாயாஸ்குல் 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

222 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தொடர்ந்து துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஹொங்ஹொங் அணி, தனது முதலாவது விக்கெட்டை 2 ஓட்டங்களைப் பெற்றிருநத நிலையில் இழந்தது. அடுத்துவந்த வீரர்களும் சீரான இடைவெளியில் • ஆட்டமிழந்ததை அடுத்து 45.2 ஓவர்களில் 105 ஓட்டங்களை மாத்திரம் அந்த அணி பெற்றுக்கொண்டது.


இதன் காரணமாக பங்களாதேஷ் அணி இத்தொடரில் முதல் வெற்றியைப் பெற்றுக்கொண்டது. ஆட்டநாயகனாகப் பங்களாதேஷ் அணியின் ஜாவிட் ஓமர் தெரிவுசெய்யப்பட்டார்.

தம்புள்ள மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இந்திய - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் கலந்துகொண்டன. இதில் இந்திய அணி 116 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஓட்டம் எதுவும் எடுப்பதற்கு முனபே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியினர். ஒருநாள் போட்டிகளில் 200 ஓட்டங்களை எடுப்பேன் என்று கூறிய ஷேவாக், ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலே ஆட்டமிழந்தார். இதனையடுத்துக் களமிறங்கிய அணித்தலைவர் கங்குலி, டெண்டுல்கருடன் இணைந்து ஓட்டங்களை எடுத்தபோதும் 30 ஓட்டங்களை அணி பெற்றிருந்தநிலையில் டெண்டுல்கர் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆயினும், அணித்தலைவர் கங்குலியும் துணைத்தலைவர் டிராவிட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை நல்லதொரு நிலைக்கு இட்டுச்சென்றனர்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணியின் சார்பில் டிராவிட் 104 ஓட்டங்களையும் கங்குலி 56 ஓட்டங்களையும் முஹமட் கைப் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



261 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை நிலைதது நின்று ஆடவிடாது இந்திய அணியின் இளம் வேகப் பந்துவீச்சாளர்கள் பதானும் பாலாஜியும் மைதானத்தை விட்டு வெளியேற்றினர். இதனால், முதல் ஐந்து விக்கெட்டுக்களும் 35 ஓட்டங்களுள் வீழ்ந்தன. ஆயினும், பின்வரிசை ஆட்டக்காரரான தௌகிர் அதிரடியாக ஆடி 8 பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களை எடுத்தார்.

இறுதியில் 35 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெறறது அந்த அணி. பந்து வீச்சில் டெண்டுல்கர் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பதான் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பாலாஜி 28 ஓட்டங்களுக்கு 2 விககெட்டுக்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக டிராவிட் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜெயஸ்ரீ

இப்போட்டியில் சொற்ப ஓட்டங்களுக்குள் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச்செய்யும் வீரருக்கு ஆயிரம் அமெரிக்கடொலர்கள் வழங்கப்படும் என்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியின் நிர்வாகிகள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ★

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி சைக்கிள், மரதனோட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

வலி.தென்மேற்குப் பிரதேச சபையினால் மாவட்டமட்டத்தில் மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ள சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகளில் கலந்துகொள்ள (ஆண்கள் மட்டும்) விரும்புவோர் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைப் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

மரதன் ஓட்டப்போட்டி அன்றையதினம் காலை 6 மணிக்கும் சைக்கிள் ஓட்டப்போட்டி காலை 7 மணிக்கும் பிரதேச சபை முன்றிலில் ஆரம்பமாகும்.

மரதன் ஓட்டப்போட்டி 7 மைல்களைக் கொண்டதும், சைக்கிள் ஓட்டப்போட்டி 35 மைலகளைக் கொண்டதாகவும் இருக்கும்.

இரு போட்டிகளிலும் வெற்றிபெறும் முதல் 10 பேருக்கு சான்றிதழ்களும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (10-185)

## உலகக் கிண்ணக் கபடிப்போட்டி நவம்பர் மாதம் இந்தியாவில்

மும்பை,ஜூலை18

முதலாவது உலகக்கிண்ணக் கபடிப் போட்டி இந்தியாவின் மும்பையில் நவம்பர் 19 முதல் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான், ஜேர்மனி உட்பட 13 நாடுகள் இப்போட்டியில பங்கேற்கின்றன.

கபடி விளையாட்டை மட்டுமல்லாது வீரர்களையும் ஊக்குவித்துவரும் மும்பை தெற்கு "கனாரா ஸ்போட்ஸ் கிளப்", தனது பொன் விழா ஆண்டை முன்னிட்டு இப்போட்டியை நடத்துகிறது.

பாகிஸ்தான், ஜேர்மனி, பங்களாதேஷ், இந்தியாவைத் தவிர ஈரான், கொரியா, ஜப்பான், தாய்லாந்து, இலங்கை, நேபாளம், மேற்கிந்தியத் தீவுகள், பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளும் இப்போட்டியில் பங்கேற்கின்றன.

முதலிடம்பெறும் அணிக்கு ரூபா 2 லட்சமும் இரண்டாம் இடம்பெறும் அணிக்கு ரூபா ஒன்றேகால் லட்சமும் பரிசாக வழங்கப்படவுள்ளன. (10)

# விளையாட்டு

## கிளிநொச்சி மாவட்டத்தில் மேஜர் முரளி ஞாபகார்த்த இளையோர் உதைபந்தாட்டப் போட்டி நேற்று ஆரம்பம்

- கிளிநொச்சியிலிருந்து வசந்தன் -

கிளிநொச்சி,ஜூலை18

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் மேஜர் முரளி ஞாபகார்த்தமான இரண்டாவது தமிழீழத்தேசிய இளையோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று சனிக்கிழமை காலை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான்த்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

இச்சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் 14,17,20 வயதுப் பிரிவு அணிகளும் பெண்கள் பிரிவில் 20 வயதுக்குட்பட்ட அணியும் பங்குகொள்கின்றன.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தலைமையில் நடைபெற்ற இநத ஆரம்ப நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை மட்டு. அம்பாறைச் சிறப்புத்தளபதி கேணல் ரமேஸ் ஏற்றிவைத்தார்.

மேஜர் முரளியின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை மாவீரர் கப்டன் கெனடியின் தந்தையும், இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் தலைவருமான ம.பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா ஆகியோர் அணிவித்தனர். ஈகச்சுடரினை மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சத்தியப்பிரமாண நிகழ்வு இடம பெற்றது. இதில் நடுவர்கள் சார்பாக ஜோயல் பியசீலனும்,வீரர்கள் சார்பாக அன்ரன் நிரோஜனும் சத்தியப்பிரமாணம் செய்தனர். அதனைத தொர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின.

இச்சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி அம்பாறை,மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய எட்டு மாவட்ட அணிகளும் சுவிஸில் இருந்து வருகை தந்த தாயகஅணியும் பங்குபற்றின.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்களும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளன. (10-5)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ். மாவட்டத் தாச்சிச்சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ நாராயணன் சனசமூக நிலைய மண்டபத்தில் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையிலே நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தாச்சி விளையாட்டுக்கழகங்கள் அனைத்தையும் கலந்துகொள்ளுமாறு சங்க நிர்வாகிகள் கேட்டுள்ளனர். (10-75)

## அமெரிக்க வீராங்கனை ஜேக்கப்ஸ் ஓய்வுபெறுவதாக அறிவிப்பு

சாக்ரமென்டோ,ஜூலை18

அமெரிக்காவைச் சேர்ந்த மத்திய தூர ஓட்டப்பந்தய வீராங்கனை ரெஜினா ஜேக்கப்ஸ் (40), சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

சாக்ரமென்டோவில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்க அணித்தேர்வுப் போட்டியில் அவர் 1500 மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்க இருந்தநிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவுக்காகப் பல்வேறு போட்டிகளில் 15 முறை பட்டம்வென்றுள்ள ஜேக்கப்ஸ், திடீரென இம்முடிவை மேற்கொண்டுள்ளதால் அவரது முடிவு ரசிகர்களுக்கு ஒருபுறம் அதிர்ச்சியாக அமைந்தாலும் ஊக்கமருந்து குற்றச்சாட்டுக்கு அவர் ஆளாகியிருப்பதே இம்முடிவுக்குக் காரணம் எனத் தெரிகிறது. (10)

## மோ.சைக்கிள் மூலம் கணவாய்களை கடந்து சாதனை படைக்க முயற்சி

புதுடில்லி,ஜூலை18

மோட்டார் சைக்கிள் மூலம் லே மலைப் பகுதிகளில் உள்ள கணவாய்களைக் கடந்து சாதனை படைக்க 7 இந்தியவீரர்கள் திட்டமிட்டுள்ளனர்.

சந்தன் லாஹிரி தலைமையிலான குழுவினர், லே பகுதியில் குறுக்கும் நெடுக்குமாக சுமார் 600 கிலோ மீற்றர் தூரத்தை 24 மணி நேரத்தில் கடந்து சாதனை நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளனர்.

பிரபலமான ஓட்டோமொபைல் நிறுவனம் இதற்கு ஏற்பாடுசெய்துள்ளது.

மார்சி மிக் லா, கார்ந்துங்க லா, தாங்லாங் லா, சாங்க் லா, வேரி லா ஆகிய கணவாய்கள் வழியாகப் பயணத்தைத் தொடர்ந்து சாதனை படைக்கத்திட்டமிட்டுள்ளனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி பயணத்தைத் தொடங்கும் இக்குழு, 31 ஆம் திகதி அதிகாலை இலக்கை எட்ட முடிவுசெய்துள்ளது.

குழுவுக்குத் தலைமையேற்றுள்ள லாஹரி, ஏற்கனவே மோட்டார்சைக்கிள் மூலம் 3 உயர்ந்த கணவாய்களைக் கடந்து உலக சாதனை படைத்துள்ளார். அதற்காக 14 மணி 44 நிமிடங்கள் எடுத்துக்கொண்டுள்ளார். (10)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 39ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியிலான கரபாந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

★ இரவு 7.30 மணி - ஆவரங்கால் மத்தி வி.க. எதிர் புத்தூர் கலைமதி வி.க.

★ இரவு 8மணி - சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க. எதிர் நாயன்மார்கட்டு பாரதி வி.க. (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமத்தின் இரண்டு பிரதேச சபைகளுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வலி.தெற்கு சுன்னாகம் பிரதேசசபை அணிக்கும், வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை அணிக்கும் இடையே இப்போட்டி இடம்பெறவுள்ளது.

20 ஓவர்கள் கொண்ட மேற்படி கிரிக்கெட் போட்டி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும். (10-185)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் இரத்தினசாமி ஞாபகார்த்த சுழல் கேடயத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டங்களில் இன்று நடைபெறவுள்ள ஆட்டம்வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி ஞானம்ஸ் வி.க. எதிர் ஸ்பேஸ் வி.க. (10)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூலை18

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்திலான "பட்மின்ரன்" போட்டியில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அணி முதலாம் இடத்தைப்பெற்றுளளது.

வவுனியா கல்வியியற் கல்லூரி அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் இரண்டாம் இடத்தை சுண்டுக்குளி மகளிர்கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை அம்பாறை இந்துக்கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன. (10-152)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூலை18

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் அமரர் தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக லீக்முறையில் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

★ சண்டிலிப்பாய், கல்வளை விநாயகர் வி.க எதிர் அராலி பாரதி வி.க.

★ இளவாலை இளம் சுடர் வி.க. எதிர் நிலாவரை கலைமகள் வி.க. (10-86)

★ ★ ★

காரைநகர்,ஜூலை18

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குட்பட்ட பாலர் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் சிறப்பு விருந்தினராகவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் க.ஜெயராஜ், தீவக முன்பள்ளி உதவிக் கலவிப் பணிப்பாளர் தி.தவராசர், முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் சி.சிவ ஞேயன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக வும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-73)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணக்கு வண்ணார்பண்ணை வைத்திலிங்கம் விததியாசாலை மைதானத்தில் அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின்கீழ் உள்ள யாழ். முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வண்ணார்பண்ணை வள்ளுவன் சனசமூக நிலைய மைதானத்தில் ஆசிரியை கந்தையா வளர்மதி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பூ.குகதாசனும, கௌரவ விருந்தினராக வள்ளுவன் சனசமூக நிலையச் செயலாளர் செ.ஆனந்தராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (-10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25 - 02 - 1946

உதிர்வு 18 - 07 - 2003

அமரர் **செல்லத்துரை மத்தியூஸ் கபிரியேல்**

*உங்கள் அன்பின் மூச்சில் நனைந்திடத் துடிக்கின்றோம்*
*உங்கள் அரவணைப்பின் அன்பினைத் தேடுகின்றோம்*
*அன்பு மொழி பேசி அறிவுரைகள் கூறி*
*எம்மைப் பண்புடனே வளர்த்த அன்புத் தெய்வமே!*
*நீங்கள் எம்மைவிட்டுச் சென்று ஆண்டொன்றில்*
*அடியெடுத்து வைத்தாலென்ன? மறக்குமோ*
*எம் நெஞ்சம் உங்கள் உணர்வுகளையும் உங்கள் அன்பினையும்.*

என்றென்றும் உம் ஆன்மா இறைவன் அடியில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*புன்னைநீராவி,*
*விசுவமடு.* (34197) (24-16) - **கபிரியேல் குடும்பத்தினர்.**

## வலி. தென்மேற்கில் நிகழ்ச்சித்திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபை 15 நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

நாளைமுதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டங்களின் விவரம் வருமாறு:-

நாளை திங்கட்கிழமை - டெங்கு, கொள்ளை நோய் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தல், விலங்கு விசர் நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

நாளைமறுதினம் - 52 முன்பள்ளிகளை இணைத்து கண்காட்சி வைத்துப் பரிசில் வழங்குதல், நூலகவியலாளருக்கு நூலகப் பயிற்சி வழங்கல், சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப்போட்டிகளை நடத்துதல்.

21.7.2004 சூழலைப் பேணுமுகமாக 200 தேக்கு மற்றும் சமண்டலை மரக்கன்றுகள் வழங்கல்.

22.7.2004 - இதுவரை செப்பனிடப்படாத வீதிகள் விவரம் சனசமூக நிலைய ரீதியாகத் திரட்டப்பட்டுத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளல். வீதிகளுக்குப் பெயர்ப்பலகை நடுதல்.

23.07.2004 - சபை எல்லைக்குட்பட்ட 13 மயானங்களை மீள் புனரமைப்புச் செய்து அபிவிருத்தி செய்தல்.

24.07.2004 - சபை பாவனையில் உள்ள கணனி, தொலைநகல், தொலைக்காட்சிப்பெட்டி போன்றவற்றைச் சீர்செய்தல்.

25.07.2004 - வறிய சிறுவர்களுக்குப் பற்சுகாதாரம் பேணும் வகையில் சுகாதாரப் பொதி வழங்கி ஊக்குவித்தல் மற்றும் உள்ளூராட்சி வாரப் போட்டிகளில் கலந்துகொண்டவர்களுக்கான பரிசில் வழங்குதல். (ஒ-185)

## சுப்றா (14)

சித்தன்கேணி
ஆசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்
ஆரம்பம்
திங்கள்: 19-06-2004 காலை 6.30 மணி.
ஆசிரியர்: **தவசேகர்.**

(C/36047)(42)

## சிறுகுறிஞ்சா பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,Cயுடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப் பொருள்களும் அடங்கும்.

T.P.- 4590907.

தொடர்பு:- **BIO TEC INTERNATIONAL**
இல. 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. (34201)

## ஓட்டோ விற்பனைக்கு

நல்லநிலையில் சொந்தப் பாவிப்பில் உள்ள 205-xxxx இலக்கம் கொண்ட ஓட்டோ விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்.

**வீடியோ கலா மினி,** அச்சுவேலி.
**T.P.: 0602212431, 0777111018**

(C/36045)(42)

## தவறிவிட்டது


*இரத்தினசிங்கம் கஜேந்தன் (இல. 773303118V) ஆகிய எனது அடையாள அட்டை முகமாலைக்கும்கொடிகாமத்துக்கும் இடையில் 15.04.2004 இல் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும்.*

**அறிவொளி புத்தகசாலை**
சந்தி அருகில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(34240)(42)




# FOR SALE



**Hitachi Mini Excavator EX 35**
**1996 Model**

மேலதிக விபரங்களுக்கு:- கு. தவேந்திரன்
இல : 09 அருளம்பலம் வீதி,
அரியாலை.
**T.P : 021 4590527, 0777 291639**

## மருத்துவ முகாம்

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் மாதகல், சில்லாலை, சாந்தை, பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இலவச பொது மருத்துவ முகாம் ஒன்றை மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினரும், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்களும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வர். நீரிழிவு (சலரோக) பரிசோதனையும் இதில் இடம்பெறும். (ஒ-135)

## கணேஸ் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

ஈழத்து இலக்கிய முன்னோடியும் முற்போக்குச் சிந்தனையாளருமான அமரர் கே.கணேஸின் நினைவுக் கூட்டம் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரிகள் பிரிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மு.அநாதரட்சகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் 'யுகம்' ஆசிரியர் செ. மதுசூதனன், க. சொக்கலிங்கம், விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு, தெணியான் மற்றும் சா. தியாகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (ஒ-9-202-203)

## வேலை வாய்ப்பு

UMAZAKI

சென்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் ஸ்தாபனம், வர்த்தகத்துறையில் 60 வருடங்களுக்கு மேல் அனுபவம்பெற்றவர்கள். தமது தொழிற்துறையில் முன்னணி வகிப்பவர்கள் மென்மேலும் புதிய மார்க்கங்களால் முன்னேற முயல்கிறார்கள்.

தமது இலக்குகளை அடைந்து வெற்றி பெற பொருத்தமானவர்களைத் தேடுகிறார்கள்.

நீங்கள் தகுதி உள்ளவரா ?

### விற்பனை அதிகாரிகள் - SALES EXECUTIVES

(யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/அம்பாறை/பதுளை/அனுராதபுரம்/குருணாகலை)

க.பொ.த. சா/த. மற்றும் உ/த ஆகியவற்றில் சிறந்த சித்தி.
வயதெல்லை 35 க்குக் கீழ்.
மோட்டார் சைக்கிள் ஓட்டும் லைசன்.
வாகன வியாபாரத்தில் 2 வருட அனுபவம் ஆகியவை முக்கியமாகும்.
பட்டதாரிகள், பட்டப் படிப்பு படித்துக்கொண்டிருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வசிப்பவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.
விண்ணப்பங்களை உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயர் விலாசங்களுடன் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் வெற்றிடத்தின் பெயரைக் குறிப்பிட்டு 7 நாட்களுக்குள் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது 2446554 என்ற இலக்கத்திற்கு ஃபெக்ஸ் அல்லது sancon@eureka.lk ஈ மெயிலில் அனுப்புங்கள்.

நிர்வாக முகாமையாளர்.
**சென்ட் அந்தனீஸ்**
**கொன்சலிடேட்டட் லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா யோகலிங்கம்

(இளைப்பாறிய வைத்திய அதிகாரியும், சமாதான நீதிவானும், கொக்குவில் கிழக்கு வைரவர் சுவாமி கோயில் பரிபாலன சபைத் தலைவரும்)



கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைச் சேர்ந்த பொன்னையா யோகலிங்கம் (13.07.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - கோவிந்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜெயமணியின் அன்புக் கணவரும் யோகவதனி (U.K.), ஜெயந்தினி (U.K.), சுகிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நடராசா, இராசலிங்கம், இரத்தினம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமார் (U.K.), சிறிகாந்தராசா (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவின் - தாட்சாயினி, சியாம்சங்கர் - பிரியதாட்சாயினி, அனோஜன், வினோ, மரினோ, தர்சினி, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் நிஷாரா, சாயிரன், ஜெகனியா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மாயனத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கோவிந்த வாசா"*
*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*
T.P.: 4590723 (34204) (24-16)

தகவல்:
யோகவதனி (மகள்)
T.P.: 0044 2087674623 (U.K.)

### திருமதி சிவப்பிரகாசம் சரஸ்வதி

- மாவடித்துறை -

சாவகச்சேரி, மடத்தடியைச் சேர்ந்த திருமதி சிவப்பிரகாசம் சரஸ்வதி (தேனம்) அவர்கள் நேற்று (17-07-2004) அதிகாலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் ஆறுமுகம் சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுக்குட்டி - கற்பகம் தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் ஜெயசிறீ (கனடா), பாலசிறீ (கனடா), ராஜசிறீ (சுவிஸ்), விஜயசிறீ (கணக்காய்வுப் பரீட்சகர், கச்சேரி, யாழ்ப்பாணம்), வாணிசிறீ (ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மணிவண்ணன் (கனடா), ரவீந்திரகுமார் (கனடா), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), பிரேமதாஸ், தவராஜா (மக்கள் வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஆறுமுகம் ராசம்மா, பொ.யோகநாதன், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேலாயுதபிள்ளை, மகாதேவா, லோகேஸ்வரி, கோடீஸ்வரன், லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17-07-2004) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி,*
*சாவகச்சேரி.* (34220)(42-24-16)

தகவல்:
பிள்ளைகள்.

T.P.: 077 6033709, 0777 038539, 077 6260793

# நூலகக் கண்காட்சி

யாழப்பாணம்,ஜுலை18

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மல்லாகம், மயிலிட்டி ஆகிய பொதுநூலகங்கள் ஒன்றிணைந்து நடத்தும் நூலகக் கண்காட்சி, நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பொது நூலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் செயலாளர் செ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா கலந்துகொள்வார். நூலகக் கண்காட்சி 21, 22 ஆம் திகதிகளிலும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். (8)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி பாமா அவர்களின்
அன்புத் தந்தையார்

### க.நமசிவாயக்குருக்கள்

அவர்களின் 17.07.2004 திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதிவருட மாணவர்கள்.
வணிகத்துறை. யாழ்.பல்கலைக்கழகம்.
(34255)(29-12-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய உயர்தர வர்த்தகத்துறை ஆசிரியை
திருமதி தவராசா வாணிஸ்ரீ அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சிவப்பிரகாசம் சரஸ்வதி

அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.
மீசாலை. (34251)(40-29-12-18)
அதிபர். ஆசிரியர்கள்.
கல்விசாரா ஊழியர்கள். மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ வை.நமசிவாயக் குருக்கள்

(தர்மகர்தாசபை உறுப்பினர்) அவர்கள்

நேற்று (17.07.2004) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தமை எம்மை ஆழ்ந்த துயரத்திற்குள்ளாக்கியுள்ளது. அன்னாரின் திடீர் மறைவு எமது ஆச்சிரமத்துக்கு பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட இலங்கை ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம
சிறார் முதியோர் இல்ல தர்மகர்த்தா சபையினர்,
நிர்வாக உத்தியோகத்தர், சிறார், முதியோர், ஊழியர்கள்.
(சி/36055)
(40-29-12-18

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி

### திருமதி இராசரத்தினம் செல்வமணி



தோற்றம் 16.04.1935 மறைவு 18.06.2004

எனது அன்புத் தெய்வமே! ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று (18.07.2004) ஞாயிறு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

95, நாயன்மார்கட்டு,
நல்லூர். (34247)(40-29-12-18)
ஆ.முத்துத்தம்பி புனிதவதி.

## 31 ஆம் நாள் இதய அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 09 1977



உதிர்வு 19 06 2004

### அமரர் தர்மலிங்கம் சிவலிங்கம்

*மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்*
*புனிதராய் வாழ்ந்து சிவபிரான் கழல் சேர்ந்த*
*இனியவரே! நீங்கள் மறைந்துபோய்விட்டாலும்*
*நினைவுகள் மட்டும் நெஞ்சினிலே நிலைத்திருக்கும்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நாளை (19.07.2004) திங்கட்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு வருகை தரவும்.

லண்டன் கிறீன்,
சிவன் வீதி உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (34246)(40-29-12-18)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லை என்று கவலையா?
"SPOKEN ENGLISH"
By: விக்கினேஸ்வரன் ஆச்சாரி
426, (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
(34248)

காணி விற்பனைக்கு
நாவலர் வீதிக்கு அண்மையில் ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன் ஒழுங்கையில் 3½ பரப்பு, நன்னீர்க்கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. விலை மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் முன்னர் தொடர்பு கொண்டவர்களும் தொடர்புகொள்ளலாம்.
T.P: 0777 283795 (சி-36059)

இலவசக் கல்வி
விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும்
தரம் 7முதல் O/Lவரை தங்கள் சொந்த விலாசத்தை
E.Nirmalan, 596,Aluthmawatha road,Colombo-15
முகவரிக்கு அனுப்பி
வினாத்தாள்களை விடைகளுடன் பெறலாம்.
TP: 114-613078 (34244)

பிரத்தியேக வகுப்பு
கணக்கீடு
A/L 95, 96
மாணவர்களுக்கு
தொடர்பு: சதீஸ் புத்தகசாலை,
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
☎ 0712 246469, 021 222 2488 (34179)

கார் விற்பனைக்கு
13ஸ்ரீதொடரிலக்கமுடைய Mitsubishi mirage full A-C,Economic gear, auto shatter நல்ல நிலைமையில் உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு: 021-226-3573 (சி-36052)

யாழ்-கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும்
நன்றி செலுத்தும் வழிபாடு
வண.அறிவர் D.T.நைல்ஸ்
அவர்களுடைய வாழ்க்கைக்கும், இறைபணிக்குமான
34 ஆவது ஞாபகார்த்த

### நன்றி செலுத்தும் வழிபாடு

இடம்: பரி.பேதுரு மெதடிஸ்த ஆலயம்
யாழ்ப்பாணம்
காலம்: இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4.30 மணி
சிறப்புரை: 'D.T.நைல்ஸ் வாழ்வும் பணியும்'
**Mr.Ben Bavinck**
பிரதி அதிபர், கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி, மருதனார்மடம்.
வழிபாட்டுத் தலைவர்: அருட்திரு. A.ஸ்ரீபன்
பரி. யாக்கோபு ஆலயம் ,நல்லூர்.
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அருட்திரு. K.கருணாசேகர
செயலாளர் யா.கி.ஒ.
(34257)(40-29-12-18)

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் லியோக் கழகத்தின் தொழில் வழிகாட்டுத் திட்டத்தின் கீழ்

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
தம்பர் மண்டபம்
காலம் : 21, 22, 23 ஆம் திகதிகளில்
காலை 9மணியிலிருந்து பி.ப. 2 மணிவரை.

பொது அறிவு, பொது உளச் சார்பு என்பன அனுபவம்வாய்ந்த ஆசிரியர்கள், நிர்வாக அதிகாரிகளால் கற்பிக்கப்படவுள்ளன.

குறிப்பு : கையேடுகள் வழங்கப்படவுள்ளதாலும் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி மட்டும் உள்ளதாலும் கல்லூரி அலுவலக நேரத்தில் பதிவினை மேற்கொள்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

லயன் த.தவசேகர்
*பொறுப்பாசிரியர், லியோக் கழகம் .*
லியோ விதுசன்
*தலைவர், லியோக் கழகம், யாழ். மத்திய கல்லூரி.*
திரு.க.இராசதுரை
*அதிபர், யாழ். மத்திய கல்லூரி.*

லக்சுமி இணுவில்
கார்த்திக், தனுராய்
தலைவாசல் விஜய், ரஞ்சித்
இன்னும் பலர் நடிப்பில்
இன்று
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே)
(C-36291)(36)

நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், ரஞ்சிதா நடித்த
ஜெய் ஹிந் (ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
THE GURU இரவு 8.45(பு.நே.)
(C-36291)(36)

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



மானஸ்தன் (ரீல்ஸ்)
புதியநேரம்: 10.30,2.30,6.30,9.30.

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடித்த
வானவில்
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
C/35739) (36)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் கதிரவேலு

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கதிரவேலு நேற்று (17.07.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2004) முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வீரபத்திரர் வீதி,*
*கோண்டாவில் வடக்கு.* (34258)(35-29-12-18)
தகவல்:
பேரப்பிள்ளைகள்.

### கந்தையா பாலசிங்கம்



பூநகரியைப் பிறப்பிடமாகவும் தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் அவர்கள் 14.07.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா தம்பதியரின் அன்பு மகனும சின்னம்மாவின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற ஜெகதாம்பிகை மற்றும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), ஜெயானந்தி, ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயபாலன் (அமெரிக்கா), ஜெயதாசன் (உப தலைவர் பட்டதாரிகள் சங்கம் யாழ். மாவட்டம்), ஜெயப்பிரதா ஆகியோரின் அருமைத் தந்தையாரும் உதயபாலி (ஜேர்மனி), தேவராசா, சண்முகப்பிரியா, செல்வாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீப் (ஜேர்மனி), அனுஷியன் (ஜேர்மனி), சுதர்சன், சுலக்சன், சுதர்சினி, சுஜீதன், சேந்தூரியன், துளக்சிகா, கீர்த்திகா ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சக ஒழுங்கை,*
*தலையாழி,*
*கொக்குவில்.* (34130)(29-12-18)
தகவல்:
பா.ஜெயதாசன்
(மகன்).

### திருமதி திலகவதி கந்தசாமி

(கல்வத்தை, கரவெட்டி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கல்வத்தை, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி கந்தசாமி 16.07.2004 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் டாக்டர் கிருஷ்ணபிள்ளை கந்தசாமியின் அன்பு மனைவியும் கரவெட்டி, கல்வத்தையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் கொற்றாவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும் அமரசிங்கம், மனோகரசிங்கம், சிவராஜசிங்கம், பாமதி, சுமதி, மாலதி ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாமதி, சாந்தநாயகி, சுமதி, செந்தில்குமார், வசந்தன், சத்தியகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் K. கந்தசாமி J.P (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்.
0777 302226 / 0112 580483

*கல்வத்தை,*
*கரவெட்டி.*

*6/2A, ஈ.ஏ.கூரே மாவத்தை,*
*கொழும்பு -6.*
(சி-36049)(29-12-18)

### திருமதி புவனேஸ்வரி முத்துலிங்கம்

அல்வாயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி முத்துலிங்கம் அவர்கள் 16.07.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் பத்மாசினி, கந்தவேள் (கனடா), சரோஜினிதேவி (மிருக வைத்தியர், கரவெட்டி), நிர்மலாதேவி (ஆசிரியை, யா/அல்வாய் சினத்தம்பி வித்தியாலயம்), குமரவேள் (லண்டன்), கோமளா (ஆசிரியை, தேவரையாளி இந்துக் கல்லூரி), அமரவேள் (அமரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரத்தினம், வசந்தி (கனடா), மகேந்திரராஜா, யோகராசா (யாழ்.நீதிமன்றம்), றொபீனா (லண்டன்), சரவணன் (கட்டார்) ஆகியோரின் மாமியாரும் திருமதி பரமேஸ்வரி சதானந்தனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2004) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியார் பகுதி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.* (C/36054)(35-29-12-18)
தகவல்:
க.யோகராசா (மருமகன்).

### திருமதி தியாகராசா சுகிர்தரத்தினம் (ஆசிரியை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், பண்ணாகத்தை வாழ்விடமாகவும் உடைய திருமதி தியாகராசா சுகிர்தரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை, பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்) 16.07.2004 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உடல் பயிற்சி ஆசிரியர் ந.தியாகராசாவின் அன்பு மனைவியும் முரளிநடேசன் (சுவிஸ்), தில்லைநடேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற உடுவில் இரத்தினம் சிந்தாமணி தம்பதிகளின் அன்பு மகளும் கமலாம்பிகை, குமாரதாசன் (மணியம் - இணுவில்) ஆகியோரின் சகோதரரும் திருமதி பஞ்சலிங்கம் கௌரி அவர்களின் சிறியதாயாரும் மு.ராணி, தி.கல்யாணி ஆகியோரின் மாமியாரும் அருணன், துர்க்கா ஆகியோரின் பேர்த்தியும் பண்ணாகம் திருமதி மகாலிங்கம் தையல்நாயகி, திருமதி விசுவலிங்கம் சரஸ்வதி, செல்வி ந.பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இன்று அன்னாரின் ஞாபகார்த்தமாக பண்ணாகத்தில் உள்ள கிளந்தன் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தகவல்:
செல்வி ந.பொன்னம்மா (மைத்துனி),
வி.குகலிங்கம் (கண்ணன் - மருமகன்).

*கிளந்தன் இல்லம்,*
*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (C/36048)(35-29-12-18)

# சண்டையா? சமாதானமா? எதற்கும் நாங்கள் தயார்!

## நூல் வெளியீட்டு விழாவில் புலிகள் பிரமுகர் இளம்பரிதி

கொழும்புத்துறை,ஜூலை18

சண்டை வருமா, சமாதானம் தொடருமா என்று மக்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். பல முனைகளிலும் எம்மீது போரை வலிந்து திணிப்பதில் அரசும் இனவாத சக்திகளும் முனைப்புடன் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. எம்மீது போர் வலிந்து இழுக்கப்பட்டால் அதை எந்த முனையிலும் எதிர்கொண்டு வெற்றிகொள்ளத் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி

யாழ். பல நோ.கூ.சங்கக் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடைபெற்ற பொன் கணேசமூர்த்தியின் 'துளித்துளி வைரங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் கூறியதாவது:-

மனிதனின் உணர்வுகள், சிந்தனைகள் அவனை அண்டியுள்ள சூழலை பிரதிபலிப்பதாக அமைகின்றது. ஒடுக்குமுறை, மூடக்கொள்கைகள், சீரழிவுகள், இழப்புக்கள் இன்றும் எமது சூழலில காணப்படுகின்றன. இவைகளில் இருந்து மானுடத்தை எழுச்சி பெறவைத்து விடுதலைத் தேவையை எடுத்துரைக்கும் ஒரு காத்திரமான நூலாக கணேசமூர்த்தியின் இந்த நூல் அமைந்துள்ளது.

வீரத்தை எந்தச் சமூகம் முதன்மைப்படுதது கின்றதோ அந்த சமூகமே உலகில் முதன்மை பெறும் என்ற யதார்த்தம் இந்த நூலில் அடங்கியுள்ளது - என்றார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றியபோது:-

அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு சுதந்திர ஆளுமையுள்ளவர்களாக, நாகரிகம் முள்ளவர்களாக வாழவிரும்பும் எவரும் முதலில் ஒழுக்கம் உள்ளவர்களாக வாழவேண்டும். இலக்கிய வாதியும், மொழிப்பற்றாளரும், பலதுறைப் படைப்பாளியுமான பொன் கணேசமூர்த்தியின் நூலில் இதைக் காணலாம்.

அடிமைகள் வாழ்வதில்லை அவர்கள் அழிந்து போகிறார்கள். விழுந்து விழுந்து விழுந்து போராடுகிறோம். அது இறுதியில் வெற்றியைத் தரும். விடுதலைக்காக துணிவுடன் போராடுவதற்கும் எதிர்காலச் சந்ததி உரிமையுடன் வாழவும், ஆழவும் சமாதானத்தின் உன்னத தேவையையும் இந்தப் புதிய குறள் நூல் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. இது ஆவணப்படுத்தப்பட வேண்டிய அரிய படைப்பாகும் - என்று தெரிவித்தார்.

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

மதிப்பீட்டுரை வழங்கிய பேராசிரியர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் தமதுரையில்:-

வரலாற்று நிகழ்வுகளைப் பதிவுசெய்ய வேண்டியது எமது கடமை. நவீன யுகத்தில் விரைவாக மாறிவரும் இன்றைய காலத்தில் புதிய முறையில் நவீனத்துவத்துடன் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கொண்டு சர்வதேச அரங்கில் பேசப்படக்கூடிய நூலாக இது உள்ளது.

தாம் விரும்புகின்ற ஒன்றைக் கூறி அதனூடாகச் சமூகத்தை நகர்த்திச் செல்லும் தன்மையும் பல பொருள் கருத்துக்களை வெளிப்படுத தும் குறுகிய சொற்பிரயோகமும் கொண்டு களத்தில் கண்பார்வைக்கு வந்திருக்கும் 'புதிய குறந்தொகை' இது எனில் மிகையாகாது - என்று கூறினார். (ஐ-30)

## காய்ச்சலால் இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூலை18

காய்ச்சல் காரணமாக உயிர் இழந்தவர் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டது.

சண்டிலிப்பாய் 7ஆம் கட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் ஜெகதீஸ்வரன் (வயது-28) என்ற இளைஞனே காய்ச்சல் காரணமாக சங்கானை வைத்தியசாலையில் உயிர் இழந்தார் என்று கூறப்படுகிறது.

சடலம் பிரேத பரிசோதனை மேற்கொள்ளும் பொருட்டு அங்கிருந்து மானிப்பாய் பொலீஸாரால் எடுத்து வரப்பட்டு யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-6)

## கடலில் ஈழ அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயகம் திரும்பிவர வேண்டியுள்ளது. கடலில் அடிக்கடி அவலச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இப்படித் திரும்பும் வழியில் அவர்கள் உயிரிழப்புகளையும், ஆபத்துக்களையும் சந்திக்கவேண்டி ஏற்படுகிறது.

இந்த அகதிகள் அவலம் தொடர்பாக இரு நாட்டு அரசுகளும் சட்டபூர்வமான ஏற்பாடுகளை உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன. இந்த நிலையிலேயே மன்னார் நீதிமன்றத்தின் கருத்து வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் தலைமன்னார் ஊடாகத் திரும்பிய 34 அகதிகள் மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எம்.பி.பாரூக் முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர்.

ஈழ அகதிகள் தாயகம் திரும்பும் விடயத்தில் இந்திய, இலங்கை அரசுகள் கண்மூடித்தனமான போக்கைக் கடைப்பிடிப்பதாக அப்போது அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட அகதிகளைத் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், பொலஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க அகதிகளை அழைத்து வந்ததாகக் கூறப்படும் இரண்டு இந்தியப் படகோட்டிகளை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

34 அகதிகளும் தமிழ்நாடு மண்டபம் பகுதியில இருந்து இலங்கைக்கான பயணத்தை ஒரு படகில் மேற்கொண்டுள்ளனர்.

நடுக்கடலில் குறிப்பிட்ட படகு பழுதடையவே அங்கு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு இந்தியப் படகுகளின் படகோட்டிகள் அகதிகளைத் தமது படகுகளில் அழைத்து வந்து இலங்கைக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரிடம் கையளித்துள்ளனர்.

தாம் அகதிகளுக்கு உதவியளித்தவர்கள் என அவர்கள் தம்மை அடையாளப்படுத்திய அதேநேரம், அவர்களால் அழைத்துவரப்பட்ட அகதிகளும் அதனை உறுதிப்படுத்தி அவர்களைத் திரும்பி இந்தியாவுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுள்ளனர்.

எனினும் அதனை ஏற்றுக்கொள்ளாத கடற்படையினர் அவர்களையும் கைதுசெய்து மன்னார் பொலீஸாரிடம் கையளித்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்று நீதிமன்றத்திலும் குறிப்பிட்ட இந்தியப் படகோட்டிகள் ஆஜர் செய்யப்பட்டவேளையில் - அகதிகள், அவர்கள் தம்மைக் காப்பாற்றியவர்கள் எனக் கூறியபோதும், அதனை ஆட்சேபித்த பொலஸார், தாம் அவர்கள் இருவரையும் விசாரணை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதை அடுத்து இரண்டு இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.(ஐ-3)

## கிழக்கில் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியத்தைக் கட்டி வளர்க்க முன்னெடுக்கவேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து இன்றைய சந்திப்பில் விரிவாக ஆராய்ந்தோம்.

கடந்த 50 வருடகாலமாக வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசியத்தைக் கொச்சைப்படுத்த அனுமதிக்கக்கூடாது. பிரதேசவாதங்களை எழுப்பி தமிழ்த் தேசியத்தைச் சிதைக்க இடமளிக்கக் கூடாது. தமிழ்த் தேசியத்தை முழுமையாகக் கட்டி வளர்ப்பது மட்டுமன்றி வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கக்கூடாது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த 15 வருடங்களாக அது நடைமுறையிலும் இருந்து வருகின்றது.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் கூட வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என ஏற்றுள்ளன. கிழக்கில் எழுந்த சலசலப்புக்கள் எல்லாம் மறைந்துபோயின. மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற வேண்டும்.

இதற்காக மாவட்டங்கள் தோறும் தமிழ்க் கூட்டமைப்புப் பிரசாரம் மேற்கொள்ள விரும்புகின்றது. முதலாவது பிரசாரம் எதிர்வரும் 31ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெறவுள்ளது. மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும் தமிழ்க் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு மாவட்டம் தோறும் மாதாந்தம் இடம்பெறும்.

- இவ்வாறு ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் செல்ல, நேரடியாக மக்களைச் சந்திக்கப்போகிறோம் என்று கூட்டமைப்பு எம்.பியான அஜெயா னந்தமூர்த்தி தெரிவித்தார். (ஐ-3-5)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனைப்புடன் செயற்படுகின்றன.

இந்தச் சக்திகளின் செயற்பாடுகளை முறியடிக்க வேண்டிய பொறுப்பு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளில்தான் உள்ளது.

மககள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுததி தமிழ்த் தேசியத்தைக் கட்டிக் காப்பதற்கான பங்களிப்பைப் பூரணமாக வழங்க வேண்டும் - என்று தெரிவித்தார் தமிழ்ச்செல்வன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரது இக்கோரிக்கையை ஏற்றுச் செயற்படுவதாக உறுதி கூறினர். (ஐ-3-5)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரங்க நிகழ்வுகளாக சங்கநாதம் பாடலும் ஆடலும், சிறப்புரைகள், பண்டாரவன்னியன நாடகம், கடற்புலிகளின் மகளிர் அணியின் நாடகம், நாட்டிய நடனங்கள் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை கடற்புலிகளும், முல்லை வாழ் மக்களும், பொது அமைப்பினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர். 1995இன் இறுதியில் யாழ். குடாநாட்டின் பெரும் பகுதி இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் வன்னிப் பகுதிக்கு நகர்ந்த புலிகளின் அணிகள் முல்லைத்தீவு படை முகாம் மீது நடத்திய வியத்தகு தாக்குதல் நடவடிக்கையே 'ஓயாத அலைகள் -1' என அழைக்கப்படுகிறது. (ஐ-6)

## உலக வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹறோல்ட், உலக சுகாதாரத் திட்ட அதிகாரி டாக்டர் டின்ஹாம் போலி, சர்வதேச நாணய நிதியத்தைச் சேர்ந்த டாக்டர் ஜெரோமி ஹாட்டர், அகதிகளுக்கான ஐநா. தூதரக இலங்கைப் பிரதிநிதி நீல் ரைட் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர். (ஐ-3)


### ஆசிரியர் போட்டிப் பரீட்சை

த.தவசேகர் B.Sc., P.G.Dip.in.Ed.
D.M.I. ஞாயிறு 9.30-1.30 (S.L.T.)
Science Hall திங்., செவ்., புதன் - 3.30-6.30 (S.L.T.)
★ பயிற்சி நூலினை வகுப்புகளிலும், புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(34241)


### இன்று நான்காவது ஆண்டில் தாயகம் சிறுவர் இன்பகம்



கோண்டாவில், பொற்பதி வீதியில் இயங்கும் இந்த இல்லத்தை எனது சொந்த முதலீட்டில் நடத்தி வருகின்றேன். சிறுபராயத்தில் பெற்றோரை இழந்தவர்களுக்கு மறு வாழ் வளிக்கும் நோக்குடன் நடத்தப்படும் இந்த இல்லம் இன்று நான்காவது ஆண்டில் கால் பதிக்கின்றது.

எவரின் உதவியோ, அன்பளிப்போ இன்றி எனது முழுமுதலீட்டுடன் இல்லத்தை நிர்வகித்து வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெ.சிறிதரன்
நிறுவுநரும் நிர்வாகியும்.


### பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்

ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

### தோட்டக் காணி விற்பனைக்கு

ஆவரங்கால், இளமாலை என்னும் குறிச்சியில் சின்னத்தம்பி நமசிவாயம் என்பவருக்குச் சொந்தமான 5 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு சின்னத்தம்பி நமசிவாயத்துடனும் மகன்மாருடனும் தொடர்பு கொள்ளவும்.

- ந.பாலசிங்கம். (34092)


### மரண அறிவித்தல்

**சிவஸ்ரீ கைலாயக்குருக்கள் நமசிவாயக்குருக்கள் (கருணையம்பதி)**

கைலாயக்குருக்கள் நமசிவாயக்குருக்கள் அவர்கள் அனைத்துலக சைவக் குருமார் பேரவை ஒன்றியத்தின் சிவாச்சாரிய பீடாதிபதி, ஸ்ரீலஸ்ரீ கை.நமசிவாயக்குருக்கள் நேற்று (17.07.2004) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் புவனேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும் நா.வைத்தீஸ்வரன் (பிரான்ஸ்), நா.வாகீஸ்வரன் (ஜெயா இரும்பகம் - நெல்லியடி), நா.மாதினி (ஆசிரியை - பரமானந்தா ஆச்சிரமம், மாலிசந்தி), வாமா (யாழ். பல்கலைக்கழக இறுதி வருடம் - வர்த்தகம்), நா.சூரியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி - நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரீஸ்வரி (இருபாலை), மா.பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.07.2004) சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை அனைத்துச் சைவக்குருமார், சிவாச்சாரியர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய், கரவெட்டி.* (சி-36060)

தகவல்:
சிவஸ்ரீ க.சோமசுந்தரக்குருக்கள்
(செயலாளர் - அனைத்துலக சைவக்குருமார் பேரவை ஒன்றியம்).


கலைவட்டம் நுண்கலைத்துறை பிரெஞ்சு நட்புறவுக் கழகம் யாழ்ப்பாணம் ஆதரவில் - முதுசம் X
13 யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியங்களின் காட்சி
An Exhibition of Painting by 13 Artists from Jaffna
அனுமதி இலவசம்
20.07.2004 - 18.08.2004 / 10.00 a.m. - 5.00 p.m. Alliance Francaise of Jaffna 83, Palaly Road, Kandarmadam, Jaffna.

அபிநயா மல்ரி எலக்ரோனிக் யாழ். வீதி, மானிப்பாய். | Shan Multi Trade Centre 150, K.K.S, Road, Jaffna.





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

18-07-2004



# சமாதான ரயில் தடம் புரளுமா?

ஸ்ரீலங்கா அரசின் தற்போதைய 'போக்கு இப்படியே நீடித்தால் அரசியல் தீர்வு முயற்சிகள் சாத்தியம் இல்லை. தென்னிலங்கையின் போக்கில் அதற்கான மாறுதல் உருவாகும் என்பது சந்தேகம். அது நடைபெறப்போவதும் இல்லை.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் இப்போது ஊடகங்களுக்கு இதனையே கூறிக்கொள்கின்றன.

2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் உருவான யுத்தமற்ற சுமுகமான சூழல் கேள்விக்குறியாகியுள்ளது. இன்றைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் வெளியிடுகின்ற இந்தக் கருத்து முக்கியத்துவமானது.

**- குகா -**

இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி விடுதலைப் புலிகளுக்கு நீட்டிய நேசக்கரத்தை விடுதலைப் புலிகள் ஏற்றதையடுத்துப் புரிந்துணர்வு உடன்படிக்கை உருவானது. அதன்பின் யுத்தம் நிறுத்தப்பட்டது மட்டுமன்றி, தற்கொலைத் தாக்குதல்கள், அரசியல் படுகொலைகள் எல்லாம் முடிவுக்கு வந்திருந்தன.

எதிர் எதிராக நின்ற சிங்கள சமூகமும், தமிழ்ச் சமூகமும் கைகோர்த்து நேரடியாகப் பேச்சுக்களில் ஈடுபட்டன. ஒரே மேசையில் பேசி, உண்டு குதூகலித்து ஆறு கட்டப் பேச்சுக்களை நடத்தின.

அந்தப் பேச்சுக்களின் பயனாக உருவான இணக்கங்களை நடைமுறைப்படுத்த எதிர்க்கட்சிகளாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் தடைபோட்டன. அதன் காரணமாகப் பேச்சுக்கள் தடைப்பட்டன.

இந்நிலையில், தெற்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பின்னால் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான கட்சி ஆட்சிக்கு வந்தது.

ஆட்சிக்கு வந்தவுடன், விடுதலைப் புலிகளுடன் பேச்சைத் தொடரப்போகின்றோம் என்று பகிரங்க அறிவிப்பை விட்ட ஜனாதிபதி, அனுசரணையாளராக நோர்வேயை அழைத்தார். கடந்த அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து செயற்படுத்துவோம் என்றும் அவர் அறிவித்தார்.

நோர்வே அனுசரணையாளர்கள் இலங்கை வந்தனர். ஜனாதிபதியுடன் பேசினர். 'விடுதலைப் புலிகளுடன் பேசத் தயார் பேச்சுக்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள்' என்று ஜனாதிபதி அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகளும் புதிய அரசுடன் பேசத் தயார் என நோர்வேக்குத் தெரிவித்தனர்.

இருதரப்புக்களின் கோரிக்கைகளையும் ஏற்றுப் பேச்சு முயற்சிகளில் நோர்வே மீண்டும் ஈடுபட்டது. இரு தரப்பினரையும் மாறி மாறிச் சந்தித்து இருதரப்பினரின் கருத்துக்களையும் பரிமாறியது.

விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசவேண்டும். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை அரசு ஏற்க வேண்டும். கடந்த அரசு விட்ட இடத்தில் இருந்து பேச்சுத் தொடரப்பட வேண்டும். இடைக்கால நிர்வாகம் பற்றி முதலில் பேசவேண்டும் - இப்படியாகத் தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர். இவற்றையெல்லாம் ஏற்றுப் பேசத்தயார் என்று ஜனாதிபதி நோர்வேத் தரப்பிடம் இணங்கியிருந்தார்.

இதன்படி, பேச்சுக்கான திகதி, இடம் போன்ற விவரங்கள் எந்தநேரத்திலும் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நேரத்தில் அரசு தனது சுயரூபத்தை வெளிக்காட்டியது. பேச்சுக்கான முயற்சிகள் நின்றுபோயின.

மாகாணசபைத் தேர்தல்கள் கடந்த 10ஆம் திகதி முடிவடைந்த பின் பேச்சுக்களை ஆரம்பிப்போம் என்று ஜனாதிபதி நோர்வேத்தரப்பிடம் கூறியதை அடுத்து பேச்சு முயற்சி நின்றது.

மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் அதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கும் என நம்பப்பட்டது. ஆனால், அதற்கு மாறாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் குழு ஒன்று அமைக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். என்ன விடயம் பேசவேண்டும், எப்போது பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்பன குறித்து அக்குழு அரசுக்குப் பரிந்துரைக்குமாம். அதன்பின்பே பேச்சு முன்னெடுக்கப்படும். இது அரசின் பிந்திய அறிவிப்பு.

இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசினால், சந்திரிகா அரசுக்கு அளிக்கும் ஆதரவை விலக்கிவிடுவோம் என்று எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில் இறுக்கமாக இருக்கிறார்கள். தமது நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்கமுடியாது என்று அவர்கள் அறிவிக்கிறார்கள்.

சமாதான முயற்சியின் அடிப்படை யுத்தநிறுத்த உடன்பாடு கிழக்கில் அரசும், அரசுப்படைகளும் கருணாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு அரசியல் கொலைகளை நடத்துகின்றன. இதனால் யுத்த நிறுத்த உடன்பாடு கேள்விக் குறியாகியுள்ளது;
நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.
இதுதொடர்பாக அரசின் சரியான பதில் கிடைக்காவிட்டால் யுத்த நிறுத்தம் நெருக்கடிக்குள்ளாகும் - தடம்புரளும் - என்று விடுதலைப் புலிகள் நோர்வே மூலம் அரசுக்குத் தகவல் அனுப்பியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பை அரசு 'சீரியஸாக' எடுத்துக் கிழக்கில் இடம் பெறும் அரசியல் கொலைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்போகின்றதா? அல்லது விடுதலைப் புலிகளின் கடுமபோக்கைத் தொடர இடமளிக்கப்போகின்றதா? - இது தான் இன்று மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்விகள்.



இந்நிலையில், மீண்டும் ஒரு யுத்தம் உருவாவதைத் தவிர்க்க - அரசியல் கொலைகள் மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்வதைத் தவிர்க்க - நோர்வே என்ன செய்யப்போகின்றது?

இலங்கைத்தீவில் உள்ள சகல மக்களினதும் மட்டுமல்ல முழு உலகத்தினதுமே எதிர்பார்ப்பு இது.

# "உறுதியான நிலைப்பாட்டை அரசு வெளிப்படுத்தவில்லை..!"

**தற்போதைய நிலைமை குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன்**



"அரசு சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கருத்துக்களை வெளியிட்டு வருகிறதே தவிர அதன் தெளிவான நிலைப்பாட்டை உறுதியாக வெளியிட வில்லை. ஜனாதிபதியின் கருத்துகள் கூட இப்படித்தான். அதில் விசுவாசத்தையோ, உண்மையையோ தமிழர்களால் காணமுடியவில்லை என்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தாலும் ஓர் இயல்பு நிலையைக் கொண்டு வந்து மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமாயிருந்தாலும் நிச்சயமாக அது இடைக்கால நிர்வாக அமைப்பை நிறுவுவதன் மூலமே சாத்தியமாக முடியும்.

இந்தக் கோரிக்கை நாம் முன்வைத்ததல்ல. ஆட்சிப்பீடத்தில் ஏறிய தலைவர்கள் கூட அதைத்தான் முன்வைத்தனர். இதுதான் நடைமுறைச்சாத்தியம்.

இடைக்கால நிர்வாகத்தை நிறுவுவதற்கு எமது மக்கள் ஆணை வழங்கினர். சர்வதேச சமூகமும் இதைத்தான் விரும்பியது.

இந்த இடைக்கால நிர்வாகத்தை நிறுவ இலங்கை அரசு உண்மையுடனும் விசுவாசத்துடனும் செயற்படவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. இந்த விடயம் கேள்விக்குறியாகி இருப்பதுதான் மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் சந்தேகமும் விரக்தியும் ஏற்படக்காரணம்.

இன்றைய அரசு அனைத்து விடயங்களிலும் அசமந்தப் போக்கையும் அக்கறையின்மையையும் காட்டி வருகின்றது. பேச்சளவில் ஒன்றும் செயல் வடிவத்தில் இன்னொன்றுமாகச் செயற்படுகின்றது. சந்தர்ப்பத்துக்கு ஏற்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப கருத்துகளைக் கூறி வருகிறார்களே தவிர, உறுதியான உண்மைத் தன்மையுடன் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதைக் காணக் கூடியதாக இல்லை.

**செவ்வி: சுந்தரவேள்**

ஜனாதிபதியின் கருத்தும் ஒவ்வொருவருக்கும் ஏற்றவகையில் - சூழ்நிலைக்கு ஏற்றவகையில் - இருக்கின்றதே தவிர உண்மையான விசுவாசத் தன்மையோடு தமிழ்மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய, தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு ஓரளவாவது திருப்தி அளிக்கக் கூடிய நிலைப்பாட்டில் இல்லை.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நாம் முன்வைத்த கோரிக்கைகளைக் குறைப்பதோ வெட்டுவதோ சாத்தியம் அற்றது. யதார்த்த பூர்வமான - நடைமுறைச் சாத்தியமான - விடயங்களையே நாம் முன்வைத்தோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை இந்தளவு அதிகாரத்தைக் கொண்டிருக்கும்போதுதான் அது இடைக்கால சபையாக இருக்கும். அதில் வெட்டிக்குறைப்பதைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை. அதை நடைமுறைப்படுத்துவது - நிறுவுவது பற்றித்தான் பேசவேண்டும்.

தமிழ்மக்கள் ஏகோபித்த அளவில் ஆணையை வழங்கியுள்ளனர். தமது ஏகப்பிரதிநிதிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வந்து தீர்வைக் காண்பது தான் நியாயப் பாடாக இருக்கும்.

மக்களின் அபிலாஷைகளை அறிந்து அவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். மக்களின் பிரதிநிதியாக அவர்களின் அபிலாஷைகளை முன்வைப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் பிரதான பங்களிப்பு வகிப்பர். அவர்கள் அந்தக் கடமையை சரிவரச் செய்வர்.


இதைக் குழப்பும் நோக்கோடு பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த - மக்கள் ஆதரவற்ற - சக்திகளுடனும் தலைவர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்துவதும் அவர்கள் உள்புகுத்து வரும் சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதாகத்தான் இருக்கும்.

தங்கள் பாட்டில் அவர்கள் பேசுவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. தமிழ்மக்களுக்கான தீர்வைக்கொண்டுவரும் பேச்சுகளில் தமிழ்மக்களால் ஆணை வழங்கப்பட்ட - தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான - தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் அதன் தலைமையிடமுமே பொறுப்பு இருக்கும். இதில் சந்தேகம் இருக்காது என்கிறார் தமிழ்ச்செல்வன்.

# 13 ஓவியர்களின் ஓவியங்கள் ஒரே இடத்தில் காட்சிக்கு

'முதுசம்' நிகழ்ச்சித் தொடரின் பத்தாவது நிகழ்ச்சியாக "13 யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியங்களின் காட்சியை" நுண்கலைத்துறையின் கலைவட்டம். பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் யாழ்ப்பாணக் கிளையுடன் இணைந்து 83.பலாலி வீதி. கந்தர்மடத்தில் அமைந்துள்ள பிரெஞ்சு நட்புறவுக் கழக நிலையத்தில் ஜூலை 20 தொடக்கம் ஓகஸ்ட் 18 வரைக்கும் காலை 10மணி முதல் மாலை 5மணிவரை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

காலணியத்திற்குப் பிந்திய இலங்கை ஓவியக் கலைப் பாரம்பரியத்தைப் பொறுத்தவரை கொழும்புக்கு அடுத்தபடியாக பிரதான செயற்பாட்டு



ஓவியர் சிவரூபனின் ஓவியங்களில் ஒன்று.


மையமாக அமைந்துள்ள யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட செயற்பாடுகளின் விளைபொருள்களாக அமைந்துவிட்ட ஓவியர்களின் பதின்மூன்று பேரது வெளிப்பாடுகளை



ஓவியர் கே.ராஜரட்னத்தின் ஓவியங்களில் ஒன்று.

காட்சி நிலைக்குக் கொண்டு வருகிறது.

ஈழத்தமிழர்களின் வாழ்க்கை நெருக்கடிகளும். அதன் அனுபவங்களும் ஏனைய கலைகளில் பிரதிபலிப்பது போல ஓவியத்திலும் பலமான பிரதிபலிப்பினைக் கொண்டுள்ளது. இனமுரண்பாடுகள் காரணமாக அதிகம் தமிழர்கள் உலகம் பூராகவும் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால். தாயகம். புகலிடம் என்ற வேறுபாடற்று தமிழர்களிடம் தமது இருப்பு. அடையாளம். ஞாபகங்கள் பற்றிய வெளிப்பாடுகள் பரந்து காணப்படுகின்றன. புவியியல் எல்லைகளைத் தாண்டி நீண்டுள்ள இந்த இருப்பு. அடையாளம். வரலாறு. ஞாபகம் ஆகியவற்றின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ள ஈழத்தையும். புகலிடங்களையும் வாழிடமாகக் கொண்ட 13 யாழ்ப்பாணத்துக் தமிழர்களின் ஓவியங்களைக் கொண்ட இந்தக் காட்சி ஒருவகையில் நிகழ்கால ஈழத்தமிழர்களின் வாழ்வின் சாட்சியங்களாகவும் அமைந்துள்ளது.




ஓவியர் எம். கனகசபையின் ஓவியம்

வேறுபட்ட தலைமுறைகள். வேறுபட்ட உள்ளடக்கங்கள். வேறுபட்ட பாணிகள் ஆகியவற்றினுள் உள்ளோடும் வாழ்வு அனுபவப் பொதுமைகளின் வெளிப்பாடாக அமையும் மேற்படி காட்சி இன்னொரு வகையில் ஈழத்தமிழர்களின் காண்பியக் கலைவரலாற்றில் ஒரு காலகட்டத்தின் போக்கையும் பதிவு செய்கின்றது.

இந்த ஓவியக் காட்சியில் ஈழத்திலிருந்து ஓவியர்களான ராஜரட்ணம், மு.கனகசபை, ஆசை. இராசையா. கோ.கைலாசநாதன். ம.நிலாந்தன், தா.சனாதனன். ம.சிவரூபன் மற்றும் வாசுகி ஜெய்சங்கர் ஆகியோரோடு இந்தியாவிலிருந்து ஆர்.வைதேகி. இங்கிலாந்திலிருந்து அருந்ததி ரட்ணராஜ். கனடாவிலிருந்து அனுஷியா சுந்தரலிங்கம். நந்தா கந்தசாமி. கருணா முதலிய ஓவியர்களும் பங்கேற்கிறார்கள்.

பல்வேறு தனிநபர். குழுநிலை. ஓவியக் காட்சிகளிலும் சர்வதேச காட்சிகள். ஓவிய முகாம்கள் முதலியவற்றிலும் பங்குகொண்ட உள்ளூரிலும். வெளியூரிலும் தமது ஓவியங்களின் சேகரிப்புக்களை



ஓவியர் அருந்ததி ரட்ணராஜின் ஓவியம்.

கொண்டவர்களுமான பல ஓவியர்களும் பங்கேற்கும் மேற்படி ஓவியக் காட்சியை ஓவியரும். கலை வரலாற்று விரிவுரையாளருமான தா.சனாதனன் எடுத்தாளுகை செய்கிறார்.

இந்த ஓவியக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார். கலை ஆர்வலர்கள். இளம் கலைஞர்கள மற்றும் துறை சார்ந்த அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. ✪

## யாரோடு நோவோம்...?

செயல் திறன் அரங்க இயக்கம் 'பஞ்சவர்ண நரியார்' என்ற சிறுவர் அரங்கிற்கான நாடகத்தைப் பாட சாலைகள் தோறும் அளிக்கை செய்து வருகின்றது. 'வளரும் பயிருக்கு முளையிலே உதவுவோம்' என்ற முயல்வே இந்நாடகமாகும்.

சிறுவர்களின் உளத் தேவைகள் உள்ளிட்ட தேவைகளை நிறைவு செய்வதில் சிறுவர் அரங்கு முக்கிய பங்கு வகிக்கிறது. மகிழ்ச்சிகரமான கற்பித்தல் நுட்பமாகவும் அரங்கு பயன்படுகிறது. மாணவரிடத்து கற்பனையாற்றலை வளர்ப்பதிலும் பிரச்சினைகளை உள்வாங்கி விவாதித்து குழுக்களாக ஆலோசனை கலந்து ஏனையவர் கருத்துக்களை ஏற்றும் மறுத்தும் தீர்வை நோக்கி நகர்வதிலும் மனவெழுச்சியை ஆற்றுப்படுத்துவதிலும் 'சிறுவர் அரங்கு' காத்திரமான பங்களிப்பை வழங்குகிறது. இதனால்தான் உளவியலாளர்களும் கல்வியாளர்களும் 'கற்றலில்' அரங்கினைப் பிரயோகிக்கும் தேவையை வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நாடகத்தைப் பலரும் ஆர்வத்துடன் பார்வையிடுகின்றனர். சில இடங்களில் நாடகத்துக்கு அதிபர், ஆசிரியர் தரப்பு ஒத்துழைப்பு குறைவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆசிரிய ஆலோசகர் ஒருவரிடம் "இந்நாடகத்தைப் பார்க்கவில்லையா?" எனக் கேட்டேன். "நான் இதுகளைப் பார்க்கிறதில்லை" என்றார். "இந்திய நாடகங்களைப் போலை வருமே? சண் ரீவி, சக்தி ரீ.வியிலை வாற தொடர் நாடகங்கள் என்ன மாதிரிச் செய்யுறாங்கள். அந்த ஸ்ரான்டட்டுக்கு இதுகள் என்ன நாடகமே" என்று தொடர்ந்து கூறினார்.

எனக்குத் தலை சுற்றாதது ஆச்சரியமே. இந்திய மெகாசீரியல்களின் தாக்கம் எவ்வாறானது என்பதற்கு இதுவொன்றே போதும். அவரது 'இரசிப்பு' என்பது சுதந்திரம். ஆனால் சிறுவர் அரங்கிற்கான நாடகத்தை நிராகரிக்கும் அவர் சேவைக்கால ஆலோசகராக வகுப்புகளை மேற்பார்வை செய்வது வேடிக்கையானது.

அண்மையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது கலை இலக்கியம் தொடர்பான அறிவோ இரசிக மனோபாவமோ மாணவரிடம் மட்டுமல்ல ஆசிரியர்களிடமும் இல்லை. எனவே ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறைகளை நடத்த வேண்டுமென மூத்த படைப்பாளி 'நந்தி' கோரினார். உண்மையில் இப்பட்டறைகள் கல்வி அதிகாரிகள் மட்டத்திலிருந்து கீழிறங்கவேண்டும் போலுள்ளது. எனினும் இதற்குள் அவரவர் தனிப்பட்ட மனோபாவமும் ஆர்வமும் தங்கியுள்ளதென்பதும் மறுக்கமுடியாதது.

- ஏகலைவன்.

## துப்பாக்கி தூக்கியிருக்கக் கூடிய இன்னொரு பாலனின் கேள்விகள்



என்னருமைச் சோதரனே
எட்டு வயதிருக்குமா உனக்கு
தொப்புள் கொடி விழுந்தாயிற்றா?
வறுமையின் கொடுமையில்
காவிக்குள் புகுந்து நீ
சமனேரா* ஆனாயா?
இருக்காது
நீயாக அதற்குள் புகுவதற்கு
உனக்கு வயது காணாது
வலிந்து புகுத்தியிருப்பார்கள்
அப்படித்தானே!

ஒரு வேளை...

கிருஷாந்தி போல்
உன்சோதரியும் கிழிபட்டாளா?
உன் அம்மாவின் குறிக்குள்
என்ன குண்டு வெடித்ததா?
உன் வீடு முழுவதையுமே
கிபிர் சிதைத்துத் தொலைத்ததா?
"சவப்பெட்டிக்குள் இருக்கும்
நவீன ஓவியமாய்..."**
உன் அப்பனைப் புதைத்தாயா?

பதினாறே வயதில் நாங்கள்
துப்பாக்கி தூக்க
நிச்சயமாய்
வறுமை காரணமில்லை...
குருதி வெறி பிடித்தலையும்
சப்புமல் குமாரர்களையும்
ஏவிவிடும்
உன் குருநாதர்களையும்
கேட்டுப்பார்
காரணம் தெரியவரலாம்
அவர்கள் சொல்லமாட்டார்கள்
சொன்னார்களென்றால்
அவர்கள் வக்கிரங்களுக்கு
வடிகாலாய் பலியாக
காவிக்குள்
நீ இருக்கமாட்டாய்...

எங்களுக்கான
மனிதஉரிமை பற்றி
எங்களைக் காணாமலே
அறிக்கையிடுவோர் கண்களுக்கு
முன்பக்கத்தில்*** வந்திருக்கும்
உன் பிஞ்சு முகம்
தெரியாதிருக்க நியாயமில்லை
காவிக்குள் புதைக்கப்படும்
உன் பால்மணக் காலங்களை
காணாமல் இருக்க
டொலர்கள் கண்ணை
மறைத்திருக்கும்

சுவரில் முதுகு முட்டும் வரை
விரட்டப்பட்ட எங்களுக்கு
துப்பாக்கி தூக்குதல் தவிர
வேறுவழி இருக்கிறதா?

காவியை உதறிவிட்டு வா
காவி போர்த்த காமுகர்க்கும்
இரத்தவெறிப் பேய்களுக்கும்
மனித உரிமைப் போலிகளுக்கும்
சமாதி கட்டுவோம்
வருவாயா..........?

- வின்சென்ற் புளோரன்ஸ் -
கிளிநொச்சி.

* சமனேரா - பயிலுநர் பிக்கு
** நன்றி - நிலாந்தன்
*** டெய்லி நியூஸ் (25-5-2002)
சண்டேரைம்ஸ் (17-11-2002, 16-11-2003)

# சீரழிகின்றது கலாசாரம்



தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களுக்கு என்றுமே ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்து வந்துள்ளது. தமிழ் நாட்டிலும் பார்க்க தமிழீழத்தில் ஈழத்தமிழ் மக்கள் தமது பண்பாட்டு மரபுகளை கட்டிக் காப்பதற்கு அயராது உழைத்து வந்துள்ளார்கள். எம் மக்கள் யுத்தம் காரணமாகவோ அல்லது தொழிலின் நிமித்தமோ புலம்பெயர்ந்து போகின்றபோது எமக்கே உரித்தான வாழ்வியலின் ஒழுக்க, பண்பாட்டு மரபுகளையும் எடுத்துச் சென்று அங்கும் ஒழுக்க சீலர்களாக வாழ்ந்த வரலாறுகளும் உண்டு. இதனைப் பொறுக்க முடியாத சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழனின் கலாசாரத்தை சீரழிப்பதற்குக் காலத்திற்குக் காலம் பல்வேறு வியூகங்களை வகுத்து அழிப்பதற்கு முற்படுகின்றன.

மாறி, மாறி ஆட்சிபீடம் ஏறுகின்ற சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தமக்கிடையே அதிகாரப் போட்டிகளால் மோதிக்கொண்டாலும் தமிழ் மக்களை அழிப்பதற்கும் அவர்களின் வாழ்க்கை நெறிமுறைகளை சீர்குலைப்பதற்கும் என்றைக்குமே கைகோர்த்து செயற்பட்டு வந்துள்ளன. ஆனால், சலிக்காது. சளைக்காது எதிரிக்கு சவாலாக நின்று தமது கலாசார பண்பாட்டு மரபுகளைக் கட்டிக்காத்து வந்துள்ளனர். ஆனாலும், எதிரியுடனும் கைகோர்த்து எமது

வெள்ளம் தமது நேர்த்திக்கடன்களைத் தீர்த்து உறவுகளோடு கூடி மகிழ்ந்து ஊர்திரும்புவார்கள். மேற்கத்தைய நாட்டவர் கூட இங்கு வந்து எமது பண்பாட்டு மரபுகளைக் கேட்டு வியப்புற்று

அடித்து நொறுக்கி அட்டகாசம் புரிபவர்களாக மாறிவிட்டார்கள். சினிமாவில் வருகின்ற கதாநாயகர்கள் போல் தம்மைச் சித்தரித்து சில அடியாள்களுடன் இன்று வீதிகளில் வலம்வருகின்ற "புறம்போக்கு

கிணறுகளிலும் தமது வீடுகளிலும் பாதுகாத்தனர். பின்னர் அந்நியர்கள் சென்றபின் மீண்டும் கோயில் கட்டி வழிபட்டு வருகின்றனர். உதாரணமாக திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு வாழ்ந்த எமது சமூகம் இன்று இவ்வாறு சீரழிந்து போவதற்கான காரணம் என்ன?

எமது மக்களை அழிக்கமுற்பட்ட சிங்களதேசம் யுத்தத்தால் தமிழனை வெல்லமுடியாது என உணர்ந்துகொண்டது. அதனால், இளைய சமுதாயத்தை சுதந்திர உணர்வில் இருந்து திசைதிருப்பி இவர்களை அழிவுப் பாதைக்கு வழிகாட்டி நிற்கின்றது. இதனை உணராத இளைய சமுதாயம் தான் தோன்றித்தனமாக நடந்துகொள்வதால் தம்மைத் தாமே அழித்துக்கொள்கின்றார்கள். இவர்களை நல்வழிப்படுத்த முடியாமல் கைவிரித்த நிலையில் பெற்றோரும் சமூக நலன்விரும்பிகளும் இருக்கின்றார்கள். முன்னர் தட்டிக்கேட்டு நல்வழிப்படுத்திய பெற்றோர்கள் இன்று கண்டிக்கக்கூட திராணியற்று விழிபிதுங்கி நிற்கின்றார்கள்.

எந்நவொரு மனிதனும் எப்போது மனித விழுமியங்களை மதிக்காது ஒழுக்க நெறி தவறிச் செயற்படத் தொடங்குகின்றானோ

# தொலைகின்றன தொல்பொருள்கள்...

உரிமைகளையும் உணர்வுகளையும் காட்டிக் கொடுத்து கைக்கூலிகளாகத் திரிகின்ற சமூகவிரோத தேசவிரோத கூட்டங்கள் எமது மக்களின் சுதந்திரமான, கௌரவமான வாழ்க்கை முறைக்கு தடைக்கற்களாக இருந்து வருகின்றனர். இப்படியான தான்தோன்றித் தனமான, சமூகத்தில் அக்கறையில்லாத சமூகவிரோதிகளின் செயற்பாட்டால் இன்று மக்களின் வாழ்க்கை முறையில் குறிப்பாக இளைஞர்கள், யுவதிகளிடையே ஒழுக்க நெறிகள் தவறிய செயற்பாடுகளே காணப்படுகின்றன. உதாரணமாக கோயில்கள், நூல்நிலையங்கள் போன்ற இடங்கள் (மையங்கள்) தமிழரின் பண்பாட்டு மரபுகளைக் கட்டிக்காக்கின்ற இடங்களாகத் திகழ்கின்றன. ஆனால், இன்று இவ்வாறான இடங்களில் நடப்பவை என்ன? கோஷ்டி மோதல்களும் பாலியல் சேஷ்டைகளும், கடத்தல்களுமே இன்று இடம்பெற்றுவருகின்றன.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் தமக்கென இடம்பிடித்த தமிழ் மக்களால் கட்டிக் காக்கப்பட்ட நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் உற்சவகாலம் என்பது ஈழத்தமிழ் மக்களின் மனங்களில் என்றுமே ஒரு புழகாங்கிதத்தை ஏற்படுத்துகின்ற சரித்திர நிகழ்வாகும். உலகின் பல பாகங்களிலிருந்தும் வருகின்ற மக்கள்

எமது பண்பாட்டு மரபுகளுக்கு மாறிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால், 1995 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டை சிங்களப்பேரினவாத இராணுவம் ஆக்கிரமித்ததன் பின் யாழ்ப்பாணத்தின் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. தமிழரின் கலாசாரத்தின் இதயம் என்றும் தலைநகர் என்றும் வர்ணிக்கப்பட்ட யாழ்.குடாநாடு இன்று கலாசாரச் சீரழிவின் தலைநகராக மாறிவிடுமோ என்ற அச்சமும் ஆதங்கமும், கவலையும் ஒழுக்கமுள்ள சுதந்திர, கௌரவ சிந்தனை கொண்ட மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு நல்லூர் ஆலய உற்சவத்தின்போது ஓர் இளைஞர் பட்டாளத்தால் முருகப்பெருமான் கூட தீர்த்தமாட முடியாத நிலையே ஏற்பட்டது. கோயிலுக்கு வந்த மக்கள் சேறு குளித்து வீடு திரும்பிய காட்சிகளைக் காணக்கூடியதாக இருந்தது. இதனைத் தட்டிக்கேட்க வேண்டியவர்கள் கைதட்டி மகிழ்ந்த காட்சி மனித இதயங்களை வாட்டி வதைத்தது. அது மட்டுமா? எதிரியாக கிளர்ந்தெழவேண்டிய இளைய சமுதாயம் ஆபாசக் காட்சிகள் நிறைந்த ஒரு திரைப்படம் இடைநிறுத்தப்பட்டதற்கு திரையரங்குக்கு கல்லெறிந்து வியாபார நிலையங்களை

மனிதர்கள்" திருந்தாதவரை எமது சமுதாய சீரழிவைத் தடுப்பது என்பது கடினமான காரியமே. தாயகக் கனவுடன் தாயகம் திரும்பும் எமது மக்கள் இவ்வாறான செயற்பாடுகளால் மிகவும் மனம் கலங்கி மீண்டும் புலம் பெயருகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

**- ஆர்.லக்ஷ்மன் -**

பல நூற்றாண்டு காலமாக கட்டிக்காத்து வளர்க்கப்பட்ட எமது பண்பாட்டு விழுமியம் சீரழிகின்றபோது, அடுத்த பக்கத்தில் விலை மதிக்க முடியாத கோயில் சிலைகளும் தொல்பொருள்களும் இன்று களவுபோகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது. இங்கு களவாடப்பட்ட தொல்பொருள்கள் சில தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இவ்வாறான திருட்டுச் சம்பவங்களுக்குப் பின்னால் தேசவிரோத அரசியல் சக்தி ஒன்று செயற்படுவதாக அவதானிகள் கூறுகின்றனர். இதற்கு உடந்தையாக இருந்து செயற்படுபவர்கள் சிங்கள பேரினவாத இராணுவமே.

அந்நிய நாட்டவர் எமது நாட்டை ஆக்கிரமித்த காலத்தில் கோயில்கள் அழிக்கப்பட்டன. அப்போது கோயில்களில் இருந்த விக்கிரகங்களை மக்கள்

அன்றிலிருந்து மிருகமாகவே கணிக்கப்படுகின்றான். எனவே, மிருகங்களை வழிகாட்டுவது மனிதனின் கடமை. இவ்வாறு மிருகமாகத் தறிகெட்டுத் திரிகின்ற சில இளைஞர், யுவதிகளை நல்வழிப்படுத்த வேண்டியது நல்ல மனிதர்களின் கடமை.

இன்று தமிழினம் 18 ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாவீரர்களின் உயிர்த்தியாகத்துக்கும் இலட்சக்கணக்கான மக்களின் உயிரிழப்புக்கும் பின்னால் தலைநிமிர்ந்து நிற்கின்றது. நாட்டின் வைகறையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற போது இவ்வாறான சமுதாயச் சீரழிவை இனியும் அனுமதிக்க முடியாது. எமது மக்களும் இதைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். எமது நாட்டையும் இளைய சமுதாயத்தையும் சீரழிக்க முற்படுகின்ற சக்திகள் தம்மைத் திருத்திக்கொள்ள முன்வரவேண்டும். இல்லையேல் மக்கள் சமூகத்தால் அதற்கான பலனை அனுபவிக்க நேரிடும்.

*"ஒழுக்கத்தில் சிறந்தவன் நல்ல மனிதனா கின்றான்"*

*"ஒழுக்க நெறி தவறியவன் மிருகமாகின்றான்"*

★

# நேற்றுக் கேட்டிருக்கலாமே.....

*முன்பெல்லாம் சில கடைகளிலே 'இன்று கடன் இல்லை' என்று எழுதியிருப்பார்கள். அதாவது இன்றைக்குக் கடன் கேட்காதீர்கள். வேண்டுமானால் நாளைக்குக் கேட்டுப் பாருங்கள்(!) என்பது கருத்து. வேறு சிலர் இன்னும் விளக்கமாக 'இன்று ரொக்கம் நாளை கடன்' என்று எழுதியிருப்பார்கள். இதிலேயும் நாளை கடன் கேட்கலாம்(?) என்ற கருத்துத் தொனிக்கிறது. ஆனால் நாளையும் அந்த அறிவித்தல்கள் அங்கெல்லாம் அப்படியேதான் இருக்கப் போகின்றன?*

*இது 'திருநாளை'க் கதை என்றால் நான் இப்பொழுது சொல்லப்போவது 'திருநேற்று'க் கதை...*

*நாங்கள் கொட்டாஞ்சேனையிலும் சரி மட்டக்குளியிலும் சரி வாழ்ந்த காலத்திலே அந்த நண்பரும் எங்களுக்குப் பக்கத்திலேயே இருந்தவர். இவரும் இவரது குடும்பத்தினரும் ஏற்கனவே யாழ்ப்பாணத்திலும் எமக்கு அறிமுகமானவர்கள் தாம்.*

*அவரது குழந்தையுள்ளம் காரணமாகவோ என்னவோ அவர் 'பபா' என்றுதான் அழைக்கப்பட்டார். அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் இப்பொழுது வெளிநாடுகளில் வாழ்கிறார்கள்.*

*சும்மா சொல்லக்கூடாது நாங்கள் ஒருவருக்கு ஒருவர் நல்ல உதவி. எமக்கு மட்டுமல்ல எம்மவர் பலருக்கும் அவர் உத்தியோகப்பற்றற்ற இலவச சமகால சிங்கள - தமிழ் மொழி பெயர்ப்பாளராகவும் பணிபுரிந்தவர். அதனால், 'பபா' வைத் தேடிப் பலரும் வருவார்கள். அவரிடம் ஒரு நல்ல பண்பாடு*




*இருந்தது. அவர் எதற்குமே 'இல்லை - முடியாது' என்றெல்லாம் சொல்லமாட்டார். ஆக முடியாது என்றால் மட்டுமே 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று காமராசர் பாணியில் சொல்லுவார்.*

*எவருக்காவது பணத்தேவை ஏற்பட்டு அவரை அணுகினால் "ச்சா .....நேற்றுக் கேட்டிருக்கலாமே!" என்று சொல்லி முதல்நாள் தான் எவ்வளவு வசதியுடன் இருந்தார் என்பதைச் சொல்லி உதவி கேட்டுவந்தவரின் துர்அதிர்ஷ்டத்துக்காகக் கழிவிரக்கப் படுவார். இப்படிப்பல சம்பவங்கள்...*

*எனக்கும் அப்படி ஒரு தேவை ஏற்பட்டு ஒரு சமயம் அவரை நாடவேண்டி வந்து விட்டது. நான் கொஞ்சம் 'புத்திசாலி' என்பதால் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடனும் தயாரிப்புடனும் தான்கதையை விட்டேன்.*

*'நீங்களுமா இப்படி? பக்கத்திலே இருந்து கொண்டும்..... நேற்றுக் கேட்டிருக்கலாமே' என்று தட்டிக் கழிப்பதற்கு நண்பருக்கு இடம் கொடுக்காமல் நானே அவருக்கு கொழுக்கி போட்டு இழுத்து மாட்டும் திட்டத்துடன் தான் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்....*

*"எனக்கொரு பத்துத் தேவைப்படுகிறது. அதுவும் இன்றைக்கு அல்ல, நாளைக்குத் தான் தேவை. நாளைக்குக் கேட்டால் 'என்னசண், நீருமா இப்படி.... நேற்றுக் கேட்டிருக்கலாமே' என்பீர் அதனால் தான் முன்கூட்டியே இன்றைக்கு முன்னறிவித்தல் தந்திருக்கிறேன். மீண்டும் சொல்லுகிறேன். எனக்கு நாளைக்குத் தான் தேவை, இன்றைக்கு முன்னறிவித்தல். சரி தானே!"*

*நண்பர்ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். நான் அவரைச் 'சிக்'கெனப் பிடித்து விட்டேன் அல்லவா? அதிலிருந்து அவர் இனித் தப்ப முடியாதல்லவா? பாவம் அவர்....*

*ஆனால்.... ஆனால்.... அவர் மாறவில்லை நிதானமாகத் தான் எனக்குப் பதில் சொன்னார்.*

*"நேற்றுக் கேட்டிருக்கலாமே!"*

**சண் அங்கிள்**

# சில நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் ஏன், எதற்காகப் பின்பற்றப்படுகின்றன?

**ஒரு ஜனநாயக நாட்டின் அதி உச்ச அதிகாரங்களைக் கொண்ட சபையாக நாடாளுமன்றமே செயற்படுகின்றது. இருப்பினும் அங்கும்சில அர்த்தமற்ற சம்பிரதாயங்கள் இடம்பெறுகின்றன. அவ்வாறான சம்பிரதாயங்கள் ஏன் எதற்காகப் பின்பற்றப்படுகின்றன?**

முற்காலத்தில் அரச சபைக் கூட்டங்களுக்கு அரசனே தலைமை தாங்கினான். அரச சபைக் கூட்டங்களில் நாட்டின் ஒருசில சட்டங்களை உருவாக்கும் வேளைகளில் அரசனுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இடம்பெற்றன. அரசனுடன் கருத்து முரண்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசனால் சிறைவைக்கப்பட்டனர். அல்லது சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

அரசனை விமர்சிப்பதைத் தொடர்ந்து தண்டனைகளைப் பெற்ற மக்கள் பிரதிநிதிகள் அரசனுக்கு ஒருவேண்டுகோளை விடுத்தனர். அதாவது அரச சபைக் கூட்டங்களுக்கு அரசனை வரவேண்டாம் எனவும் அதற்குப் பதிலாக ஒருபிரதிநிதியை அனுப்புமாறும் கோரினர். அதன்படி அரசனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி சபையில் நடைபெறும் அத்தனை சம்பவங்களையும் அரசனுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டார். அவ்வாறு நியமிக்கப்பட்ட அரசனின் பிரதிநிதியே காலப்போக்கில் சபாநாயகர் (Speaker) என அழைக்கப்படுகிறார்.

சிறிலங்காவில் 1931ஆம் ஆண்டுவரை சட்ட சபைக்கும் பிரித்தானிய அரசனால் (அல்லது அரசியால்) நியமிக்கப்பட்ட ஆளுநரே தலைமை வகித்தார். 1931ஆம் ஆண்டிற்குப் பின்னரே எமது நாட்டின் சட்டசபைக்கு சபாநாயகர் தலைமை வகித்தார்.

## நாடாளுமன்றத்திற்கு செங்கோல் வந்த விதம்

செங்கோலின் வரலாறு சுமார் 1200 ஆண்டுகளைக்கொண்டது. அக்காலத்தில் மன்னர்கள் தமது அதிகார பலத்தின் அங்கமாக கைத்தடியை (பிரம்பு) எடுத்துச் செல்வர். இன்றும் உயர் ராணுவ அதிகாரிகள் அவ்வாறான கைத்தடியை வைத்திருப்பதைக் காணமுடியும். அரசன் தனது அதிகார பலத்தின் அங்கமாக கைத்தடியை பிரதான பாதுகாப்பு அதிகாரி மூலம் அரச சபைக்கு அனுப்பிவைப்பான். பிரதான பாதுகாப்பு அதிகாரி அந்தக் கைத்தடியை அரச சபைக்கு எடுத்துவரும்போது அரச சபையில் உள்ளவர்கள் அரசனுக்கு அளிக்கும் கௌரவத்தை எழுந்து நின்று அக்கைத் தடிக்கு அளித்துவந்தனர். அரச சபைக் கூட்டம் முடியும் வரை அக்கைத்தடி சபையின் முக்கிய இடத்தில் வைக்கப்படும்.

1948 ஆம் ஆண்டு சிறிலங்காவுக்கு சுதந்திரம் கிடைத்ததைத் தொடர்ந்து பிரித்தானிய அரசு இந்நாட்டிற்கு மூன்ற பரிசுகளை வழங்கியது. அவ்வேளையில் இந்நாட்டின் பிரதமராகப் பதவி வகித்த டி.எஸ்.சேனநாயகாவுக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டது முதலாவதாகும். அப்போதைய சபாநாயகருக்குவிசேட ஆசனம் ஒன்று வழங்கப்பட்டது. மூன்றாவதாக செங்கோல் வழங்கப்பட்டது.

## சபாநாயகரை ஆசனத்திற்கு அழைத்துச் செல்லும் வழக்கம்


புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டவுடன் அவரது பெயரைப் பிரேரித்தவர் மற்றும் ஆமோதித்தவர் ஆகிய இருவரும் சபாநாயகரை அவரது ஆசனத்திற்கு அழைத்துச் செல்வது ஒரு சம்பிரதாயமாகும்.

இந்த வழக்கம் முன்னர் கதிரையை நோக்கி இழுத்துச் செல்லுதல் (Drag to the chair) என அழைக்கப்பட்டது. இந்த வழக்கம் ஏன் வந்தது என்பதற்கும் புதுமையான காரணம் ஒன்று உள்ளது.

மன்னர்கள் காலத்தில் மன்னர்களுக்குப் பதிலாக அரசபைக்கு சபாநாயகர்கள் நியமிக்கப்பட்டனர். அங்கு இடம்பெறும் அனைத்து விடயங்கள் குறித்தும் சபாநாயகர் அரசருக்குத் தெரிவித்து வந்தார். சில சந்தர்ப்பங்களில் அரசன் விரும்பாத விடயங்களையும் சபாநாயகர் அரசனுக்குத் தெரிவிக்க வேண்டியிருந்தது. அவ்வாறான வேளைகளில் அரசரின் கண்டனங்களை மாத்திரமல்ல சில துன்பங்களையும் சபாநாயகர் அனுபவிக்க வேண்டியிருந்தது. அதனாலேயே அன்று அந்தப் பதவியை ஏற்க எவரும் முன்வரவில்லை இக்காரணத்தை முன்னிட்டு எவராவது இருவரால் சபாநாயகராக ஒருவரின் பெயர் பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்ட பின்னர் அவரை இழுத்துச் சென்று பலவந்தமாக ஆசனத்தில் அமர்த்துவர். இந்த வழக்கத்தை அனுசரித்தே இன்று சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் இரு புறத்திலும் இருவர் அழைத்துச் செல்வது சம்பிரதாயமாக மாறியுள்ளது.

## நாடாளுமன்றத்துக்கு ஹன்சார்ட் வந்த விதம்

நாடாளுமன்றத்தில் இடம் பெறும் சகல உரையாடல்களும் 'ஹன்சார்ட்' அறிக்கைகளாக வெளியிடப்படுவது நாமெல்லோரும் அறிந்ததே. 1300ஆம் ஆண்டளவில் பிரித்தானியாவில் இந்த வழக்கம் ஆரம்பமானது. அக்காலத்தில் நாடாளுமன்றத்தில் இடம் பெறும் உரையாடல்கள் பற்றி மக்கள் அறிந்துகொள்ள மார்க்கங்கள் எதுவும் இருக்கவில்லை. அதனால் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் சகல உரையாடல்களும் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய சுருக்கெழுத்தாளர் ஒருவர் மூலம் உரையாடல்கள் யாவும் அறிக்கைகளாக்கப்பட்டன. 'ஹான்சார்ட்' என்பதே அந்த சுருக்கெழுத்தாளரின் பெயர் ஆகும்.



அன்று முதல் நாடாளுமன்ற உரையாடல்கள் ஹான்சார்ட்க்கு போகும் என்று கூறப்பட்டது. நாளாந்தம் நாடாளுமன்றத்தில் இடம் பெறும் உரையாடல்களின் அறிக்கையை ஹான்சாட் என அழைக்கப்படுகிறது.

## ஊடகவியலாளர் ஆசன வரிசை

உலகிலுள்ள பெரும்பாலான நாடாளுமன்றங்களில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசன வரிசைகள் சபாநாயகருக்குப் பின்புறமாகவே அமைந்துள்ளன. இதற்கும் ஒரு காரணம் உள்ளது. முன்னாள் பிரித்தானிய சபாநாயகர் ஒருவருக்கு பத்திரிகையாளர்கள் மீது கடும் வெறுப்பு ஏற்பட்டது.

இந்த சபாநாயகர் எப்போதும் பத்திரிகையாளர்களோடு மோதிக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். அவர் காலத்தில் பத்திரிகையாளர்களை நாடாளுமன்றத்துக்குள் அனுமதிக்கும் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டபோது அவர் அதற்கு அனுமதியளிக்க வேண்டியிருந்தது என்றாலும் பத்திரிகையாளர்களைக் கண்டாலே வெறுக்கும் அவர் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஆசன வரிசை தமது கண்களுக்குப் புலப்படாதவாறு தமக்குப் பின்புறமாக இருக்கும் வகையில் அமைத்துக் கொண்டார் அதுவே இன்றும் நாடாளுமன்றங்களில் ஒரு சம்பிரதாயமாக மாறியுள்ளது.

நாடாளுமன்றக் கூட்டம் இடம்பெறும் தினத்தில் அங்கிருக்கும் பிரதான கொடிக் கம்பத்தின் உச்சியில் தேசியக் கொடியைப் பறக்க விடுவது சம்பிரதாயமாகும். மாலை 6.00மணிக்கு இக்கொடி கீழே இறக்கப்படும். ஆறு மணிக்குப் பின்னரும் நாடாளுமன்றக் கூட்டம் தொடருமாயின் கொடிக்கம்பத்தின் உச்சியில் நீலநிற மின்குமிழ் ஒன்று எரிந்து கொண்டிருக்கும்.

## செயலாளர் நாயகம் எனப் பெயர்மாறிய விதம்

நாடாளுமன்ற நடைமுறைகளை நாம் இங்கிலாந்தில் இருந்தே பெற்றுள்ளோம். இங்கிலாந்து நாடாளுமன்றத்திலும். இந்நாட்டு நாடாளுமன்றத்திலும் முன்னர் செயலாளர் நாயகம் 'கிளாக் ஒவ் த ஹவுஸ்' என்றே அழைக்கப்பட்டார். இங்கிலாந்தில் இன்றும் அவ்வாறுதான் அழைக்கப்படுகிறது. ஆனால். எழுபதுகளில் இந்நாட்டில் அப்பதவி செயலாளர்நாயகம் என மாற்றப்பட்டது. அதற்கும் ஒரு காரணம் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அக்காலத்தில் நாடாளுமன்றத்துக்குச் செயலாளர்நாயகமாக நியமனம் பெற்ற ஒருவர் தமது வீட்டாரிடம் தமக்கு 'கிளாக் ஒப் த ஹவுஸ்' பதவி கிடைத்துள்ளதாகக் கூறியுள்ளார். அப்போது வீட்டிலுள்ளோர். போயும் போயும் ஒரு கிளாக் பதவிக்கா இவ்வளவு தூரம் படித்தீர்கள் என்று கேட்டார்களாம். பின்னர் அச்செயலாளர் தமது பதவியைப் பற்றி வீட்டாருக்கு விளக்கமளித்துள்ளார். எவ்வாறோ அதன் பின்னர்தான் இப்பதவியின் பெயர் மாற்றமடைந்துள்ளது.

சாதாரணமாக. வழக்கமாகக் கூடும் நாடாளுமன்றக் கூட்டங்களை விடுத்து. விசேடமாக நாடாளுமன்றம் இரு சந்தர்ப்பங்களில் கூட்டப்படும். ஒன்று வெளிநாட்டு அரச தலைவர் ஒருவர் இந்நாட்டுக்கு விஜயம் செய்து நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் ஆகும். அடுத்தது நாட்டின் ஜனாதிபதி இறந்துபோகும் சந்தர்ப்பமாகும்.

ஜனாதிபதி இறந்துபோகும் சந்தர்ப்பத்தில் 48 மணித்தியாலயங்களுக்குள் சபாநாயகர். நாடாளுமன்றத்தைக் கூட்டி. ஜனாதிபதியின் இறப்பை அறிவித்து அவருக்குப் பதிலாக பிரதமர் செயற்படுவார் என்பதையும். புதிய ஜனாதிபதி ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டிய திகதியையும் அறிவிக்க வேண்டும்.

சில வேளைகளில் ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே சமயத்தில் இறந்து போகும் சந்தர்ப்பம் ஒன்றின்போது இரண்டு மாத காலங்களுக்கு சபாநாயகர் ஜனாதிபதியாகச் செயற்பட முடியும். (பிரதமரால் ஒரு மாத காலத்துக்கு மாத்திரமே செயற்படமுடியும்)

## நாடாளுமன்ற ஆசன வரிசைகளில் அமரும் சம்பிரதாயம்

நாடாளுமன்றத்துள் சபாநாயகருக்கு வலப்புறமாகவும் இடப்புறமாகவும் ஆசனவரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன. வலப்பக்கம் உள்ள ஆசன வரிசைகளில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும். இடப்பக்க வரிசைகளில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர்ந்திருப்பர். அரச தரப்பு உறுப்பினர்களும் எதிரணி உறுப்பினர்களும் எதிர் நோக்கியவாறு இருக்கும் வகையில் ஆசனவரிசை அமைக்கப்பட்டுள்ளதற்கும் அர்த்தமுள்ளது. அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசனங்களில் முன்வரிசையில் உள்ள 8 ஆவது ஆசனத்தில் பிரதமர் அமர்ந்திருப்பார். அதேபோன்று. இடப்புறத்தில் அமைந்துள்ள முன்வரிசையில் உள்ள 8ஆவது ஆசனத்தில் எதிரணியின் தலைவர் அமர்ந்திருப்பார்.

இதற்குக் காரணம் நட்சத்திர மண்டலத்தின் முக்கிய நட்சத்திரம் பிரதமர் என்பதால் பிரதமருக்கு வழங்கப்படும் கௌரவமாக அது கருதப்படுகின்றது. அக்காரணத்தை முன்னிட்டே அவர் நடுநாயகனாக அமர்த்தப்படுகிறார். அதன் பின்னர் அமைச்சர்களுக்கு முன்வரிசை ஆசனங்கள் வழங்கப்படும். கட்சித் தலைவர்களும் கவனத்தில் கொள்ளப்படுவார்கள். அதன் பின்னர் சிரேஷ்ட உறுப்பினர் களுக்கு இடமளிக்கப்படும். அவர்கள் எதிரணியைச் சேர்ந்தவர்களாக இருப்பின் முன்னாள் பிரதமர்கள். சபாநாயகர்கள். அமைச்சர்கள் போன்றோருக்கு முறைப்படி ஆசனங்கள் வழங்கப்படும்.

அதேவேளை. கட்சித்தலைவர்களுக்கும் முன்வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்படும். இந்த ஒழுங்கின் படி தற்போதைய நாடாளு மன்றத்தில் 232 ஆசனங்கள் உள்ளன. தற்போது 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தேவை ஏற்படின் இந்த ஆசனங்களின் எண்ணிக்கையை 275 ஆக அதிகரிக்க வசதிகள் உள்ளன.

தொகுப்பு: **கஜனி**

பிரிட்டனில் மின்சாரம் பாவனைக்கு வராத காலத்தில் ஒரு நாள் நாடாளுமன்றத்திற்குள் குண்டொன்று வைக்கப்பட்டுள்ளது என வதந்திகள் அடிபட்டன. எனவே. நாடாளுமன்ற அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் நாடாளுமன்ற ஊழியர்கள் சிமினி விளக்குகளைப் பற்ற வைத்து நாடாளுமன்ற சபா மண்டபத்திற்குள் குண்டைத் தேடினர். ஆனால். குண்டு கண்டு பிடிக்கப்படவில்லை. அது வெறும் வதந்தியே. ஆனால். அதன்பின்னர் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் ஒவ்வொரு நாளும் நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னராக பிரிட்டிஷ் நாடாளுமன்ற ஊழியர்கள் சிமினி விளக்கை ஏந்திச் சென்று சபாமண்டபத்தைச் சோதனையிட்டு வருகின்றனர். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் ஏன் சிமினி விளக்குப் பயன் படுத்துகிறார்கள். நாடாளுமன்ற ஊழியர்கள் சோதனையை ஆரம்பிக்க முன்னர் சபாமண்டபத்தின் மின்விளக்குகளை அணைக்கிறார்கள். அதன்பின் சிமினி விளக்கை ஏந்தியவாறு சோதனைகளை மேற்கொள்கின்றனர். அவர்கள் இவ்வாறு சிமினி விளக்குகளைப் பயன்படுத்துவதற்குக் காரணம் முதன்முதலாக அவர்கள் சிமினி விளக்குகளைப் பயன்படுத்தியே (அப்போது மின்சாரம் பாவனையில் இல்லை) சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். அதுவே சம்பிரதாயமாக இன்றும் தொடரு கிறது. ※

அருணலு

# அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு ஆண்டு 5 மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி!

2004 ஆண்டு ஆகஸ்ட் மாத புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடையும் அருணலு கணக்கு வைப்பாளர்களுக்கு பெறுமதியான பணப்பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

நீங்களும் தாமதிக்காமல், உங்கள் பிள்ளைகளுக்கு அருணலு கணக்கொன்றை அருகில் உள்ள கொமர்ஷல் வங்கிக்கிளைக்கு சென்று ஆரம்பியுங்கள். பரீட்சையின் போது கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியிருக்கும் சகல மாணவர்களும் இந்த பெறுமதியான பணப்பரிசில்களை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களுக்கும் அருணலு சார்பாக எமது நல்வாழ்த்துக்கள்.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SSCR INTERNATIONAL


# சந்தையில் 'வெகா'!

மஹாராஜா நிறுவனத்துடன் இணைந்து இலங்கைச் சந்தையில் நுழையும் 'வெகா நியுற்றிஷனல்ஸ்' நிறுவனம் அதன் போஷாக்குத் தொடர்பான உற்பத்தி வகைகளை விநியோகம் செய்வதற்காக 'ஹரிஸன்ஸ் பாமாவை' (Harrisons pharma) ஏக விநியோகஸ்தராக நியமித்துள்ளது.

ஆரோக்கிய மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் ஐக்கிய இராச்சிய 'வெகாநியுற்றிஷனல்ஸ்' (Vega Nutritionals) கம்பனி, மஹாராஜா நிறுவனத்துடன் இணைந்து இவ்வாறம் 'வெகா' ரகத்தை (Vega Brand) ஆரம்பித்தது.

சர்வதேசப் புகழ்வாய்ந்த அதிக உற்பத்திகள் முதன்முதலாக உள்ளூர் நுகர்வோருக்கு இதன் மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் நூற்றுக்கணக்கான போஷாக்கு மற்றும் மூலிகை மருந்து வகைகளை உற்பத்தி செய்கிறது. அது இருபத்தைந்து உற்பத்தி வகைகளை முதலில் விநியோகிக்கும் என இதற்கான ஆரம்ப வைபவத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் நடந்த இந்நிகழ்வில்வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள் மற்றும் போஷாக்கு ஊட்டச்சத்து ஆர்வலர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இதன் உற்பத்திகள் நூறுவீதம் இயற்கையானவை. நீரிழிவு நோய்க் கவனிப்பு, இருதய நோய், கொலஸ்ட்ரோல் கட்டுப்பாடு, சிறுநீரக நோய், ஈரல் நோய், பார்வைக் குறைபாடு, எலும்பு வளர்ச்சி, உடல்மெலிவு மற்றும் பெண்கள்தொடர்பான நோய்கள் போன்றவற்றிற்குத் தீர்வுகாணும் 'மல்டி விற்றமின்ஸ்' எனும் பல் ஊட்டச்சத்து, மூலிகை உபஉணவு போன்றவைகளையும் இவை கொண்டவை.

"உண்மையில் வெகா உற்பத்திகளில் செயற்கைக்கலப்பு, நிறங்கள், கோதுமை, சீனி, மாசேர்ப்பு இல்லை. பிரதானமாக இது சைவ உணவாளிகளுக்கு மிகவும் பொறுத்தமானது" என வெகா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கல்பேஷ் படேல் தெரிவித்தார்.

இலங்கையின் மஹாராஜா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இதனைக் கட்டியெழுப்ப எதிர்பார்க்கின்றோம். வெகா நிறுவனத்தின் மூலம் உச்சசுகாதாரப் பலனை அடைவதுதான் நோக்கம். நற்சுகாதாரமே நல்வாழ்வு. நல்வாழ்வுக்கு பத்தியம், பயிற்சி போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வுற்பத்திகள் மேலதிக சுகாதார பாதுகாப்பினை உறுதிபடுத்துவன என அவர் மேலும் கூறினார்.

ஹரிசன்ஸ் பாமா பிரதம நிறைவேற்று அதிகாரி அநுரபெரேரா கூறுகையில்–

தற்போது உலகெங்கிலுமுள்ள மக்கள் சுகாதாரத்தில் அதிக அக்கறை கொண்டவர்கள். நோய்க்கு வைத்தியம் செய்வதைவிட நோய்வராமல் தடுப்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவேதான், ஹரிசன்ஸ் பாமா வெகா நிறுவனத்தின் பங்காளியாகவும், அதன் விநியோகஸ்தர்களாகவும் இருப்பதில் பெருமைப்படுன்கிறோம் – எனத் தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சிய மருந்துக் கட்டுப்பாட்டு முகவர் நிலையத்தின் கண்காணிப்புடன் கூடிய தரத்துடன் வெகா உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐக்கிய இராச்சியத்தில் 1990ஆம் ஆண்டு போஷாக்குப் பொருட்களின் உணவு உற்பத்தி பாதுகாப்புச் சட்டத்திற்கு ஏற்ப இவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

வெகா நிறுவனத்தின் தர முகாமைத்துவ முறைகள், உற்பத்தி அபிவிருத்தி என்பன **ISO 9001:2000** தரத்துக்குரியவை.

நவீன போஷாக்கு ஆராய்ச்சியை மையமாகக்கொண்டு, வெகா நிறுவன நிபுணர்குழு உயர் சுகாதாரத்தினை முன்னேற்றுவதற்காக உரிய போஷாக்குப் பொருட்களை வழங்குவதற்கான முயற்சியில் உள்ளது.

வெகா நிறுவனம் எட்டு வருடத்திற்கு மேலாக இயங்கிவருகின்றது. இந் நிறுவனத்தின் உற்பத்தி உலக நாடுகள் பலவற்றிலும் ஏக விநியோகஸ்தர்களினால் சந்தைப்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


Superior Fans & Lighting Products
bajaj
Exhaust Fans
Low power consumption heavy duty industrial fans.
1 Year guarantee (On motor only)
Sizes 9" & 12"
Ceiling Fans
Rust free aluminium motor body and blades. Double ball bearings.
2 Year guarantee for ceiling fans and Bajaj Midea fans.
Table Fans
Pedestal fans
2 Year Guarantee
Wall Mounted Fans
Bajaj "ECOLUX" Energy Saving Bulbs (CFLs)
1 year guarantee
Save up to 80% electricity.
11w = 60w - Rs.370/-
15w = 75w - Rs.415/-
20w = 100w - Rs.450/-
Long-life, extra-bright, Bajaj "WATT SAVER" fluorescent tubes
High Quality long life & extra life GLS lamps
Rs. 30/-
Accepted
All prices inclusive of VAT
Sole agent:
Capricorn Enterprises
Showrooms & Service:
298 A & B, Galle Rd, Wellawatte.
Tel: 2360919, 2582154.
Galle Showroom. Tel: 091 - 2234104.
Admin. Office Tel: 2735584, 2714631, Fax: 2735586.
Products available islandwide.
Jaffna Distributor
6, STANLEY ROAD JAFFNA 021-222 2353
JAFFNA ELECTRICALS
141, POWER HOUSE ROAD JAFFNA 021-222-5766

# DHL அதிகாரி இலங்கை வருகை

DHL கூரியர் சேவையின் ஆசியா பசுபிக்அமைப்பின்பிரதமநிறைவேற்று அதிகாரி ஜோன் முல்லன் அண்மையில் துறைமுக மற்றும் விமானப் போக்கு வரத்து அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்தார். அதன்போது, வழக்கிலுள்ள மல்ரி பைபர் உடன்படிக்கையை (Multi Fibre Agreement - MFA) நீக்குவதன் தாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி இருவரும் கருத்துப் பரிமாறினார்.

ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த முல்லன், DHL சந்தையில் முன்னணி வகிக்கும் இலங்கையில் அதன்சந்தைவாய்ப்புக்களை மேலும் விருத்தி செய்வது குறித்தும் கருத்துக்கள் பரிமாறியுள்ளார்கள்.


உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

**NEW KAMAAL CERAMICS,**
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

**JAFFNA CERAMICS,**
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

**VENKE IMPEX,**
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

LWL **லங்கா வோல்டைல் லிமிரெட்,**
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்



உங்கள் விளம்பரங்களையும் உதயனின் ஞாயிறு வாரப் பக்கத்தில் பிரசுரிக்க வேண்டுமா?
உதயன் விளம்பரப் பணிமனை தொ.பே: 222 2030, 3837
கொழும்பில் தொடர்புகளுக்கு தொ.பே: 011 4734401-3



சொலெக்ஸ் ஒப்டிக்கல்
& டென்ரல் வேக்ஸ்



(C/36247)

SOLAX OPTICAL & DENTAL WORKS
516, HOSPITAL ROAD JAFFNA






LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans
41, Power House Road Jaffna T.P. 021-222-5766



பெயாரோஸ்
சுபமாங்கல்யம்

## விரைவில் நீங்கள் திருமணம் செய்து கொள்வதாயின் திருமணத்திற்கான செலவுகளை நாம் ஏற்போம்

2005ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பு திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ஒரு இளம் பெண் தனக்குப் பிடித்த இடத்தில் திருமணத்தைச் செய்து கொள்ள நாம் உதவி செய்வோம். இதற்கான பெயாரோஸ் சுபமாங்கல்யம் 2004ம் ஆண்டு ஆரம்பித்துவிட்டது.


மணப்பெண்ணின் புடவை, தங்கச் சங்கிலி, பாதணிகள், தோழியர் இருவரின் புடவைகள், ஆபரணங்கள், பாதணிகள், முக அலங்காரம், தலையலங்கார ஆலோசனைகள், மலர் அலங்காரம், மணமேடை அலங்காரம், மேசை அலங்காரம், திருமண கேக், திருமண ஸ்ரக்சர் கேக், திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள், DJ இசை, புகைப்படங்கள்/வீடியோ படங்கள், 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள் இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறை அல்லது சஷே உறையை இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

முடிவுத் திகதி 2004 ஜுலை 31.

பெயாரோஸ் சுபமாங்கல்யம்,
ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிட்டட்,
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.



நிலங்கா, துஷார்
(2003/2004 பெயாரோஸ் சுபமாங்கல்யம் வெற்றியாளர்)

Fair Rose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste

மலர் அலங்கார அனுசரணையாளர் Sterling Flowers (Pvt) Ltd.
Salon Nayana
SAREE MANDIR




மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு